3.12.93

THAYAGAM

# தாயகம்

75¢

உணர்வு:5
தேடல்:22

## எந்த பிராந்திய, சர்வதேச சக்தியாலும் எங்கள் போராட்டத்தை முறியடிக்க முடியாது

மாவீரர் தின உரையில் பிரபாகரன்

சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம்
தமிழ் வாக்காளர்களைக் கவர முயற்சி

உணவின்றி மடு அகதிகள் அவலம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய குண்டுவீச்சுக்கு கண்டனம்

இந்து தீவிரவாதத்திற்கு ஆதரவு குறைகிறது
வட இந்தியாவில் பாரதிய ஜனதாவின் தோல்விகள்

வடபகுதி மாணவர்களின் அவல நிலை

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**
**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி வினியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

***அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்***

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

# எந்த பிராந்திய, சர்வதேச சக்தியாலும் எங்கள் போராட்டத்தை முறியடிக்க முடியாது

## மாவீரர் தினத்தில் பிரபாகரன் உரை

தங்கள் விடுதலைப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெறும் என்று பிரபாகரன் அறிவித்துள்ளார். வானொலியூடாக விடுக்கப்பட்ட செய்தியில் கடந்த பத்து வருட காலத்தில் ஆறாயிரம் புலிகள் கொல்லப்பட்டதாகவும் கூறிய பிரபாகரன் எந்த பிராந்திய சக்தியோ, சர்வதேச சக்தியோ தங்களின் பிரிவினைப் போராட்டத்தை அடக்க முடியாது என்றும் ஈழம் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தார். அவரது 39வது பிறந்த தினமான கடந்த வெள்ளிக்கிழமை இந்த செய்தி விடுக்கப்பட்டது.

திம்பு முதல் கொழும்பு வரை புலிகள் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இரண்டாவது ஈழ யுத்தம் தொடங்கிய பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான விருப்பை பல தடவைகள் தெரிவித்ததாகவும் ஆனால் அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை துரிதப்படுத்தி குடாநாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் மூலம் குடாநாட்டில் நிலைமையை மோசமடையச் செய்ததாகவும் அவர் மேலும் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவீரர் தினக் கொண்டாட்டங்களின் இறுதித்தினமன்று இந்தச்செய்தி வாசிக்கப்பட்டது. மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் புலிகளின் முக்கிய தலைவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. விமானத் தாக்குதல் நடைபெறக் கூடும் என்று கருதியே இவர்கள் கலந்து கொள்ளவில்லை என வவுனியா வந்தவர்கள் தெரிவித்தனர்.

மாவீரர் தினக்கொண்டாட்டங்களுக்காக தீபங்கள் ஏற்றப்பட்டதுடன் அலுவலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் புலிக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. வீதிகளெங்கும் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டு அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டன.

## ஆயுதம் வாங்க பணம் ஒதுக்கீடு

ஆனையிறவுப் போரில் புலிகள் ஆயுதங்களை அள்ளிச் சென்ற நேரத்தில் அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு அறுபது கோடி ரூபாவுக்கு மேலான தொகையை ஒதுக்கியுள்ளது. இந்தப் பணம் ஆயுதம் வாங்குவதற்காக பயன்படுத்தப்படும். ஆயுதங்கள், உதிரிப்பாகங்கள், டாங்கிகள் என்பவற்றை கொள்வனவு செய்ய இந்த பணம் பயன்படுத்தப்படும். கடற்படைக்கும் ஐம்பது கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடுகளுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை ஜனாதிபதி கோரியிருக்கிறார். இதற்குள் அகதிகள் புனர்வாழ்வுக்கு என முப்பது கோடி ரூபாவிற்கு மேல் புனர்வாழ்வு அமைச்சர் கோரியிருக்கிறார்.

## மடு அகதிகள் அவலம்

மடுவில் வாழும் அகதிகளுக்கான உணவு வினியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அமைச்சினால் வவுனியா வரை கொண்டு செல்லும் உணவை பெற்று மடுவில் வினியோகத்தை பொறுப்பேற்று செய்து வந்த ஐ.நா அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் தனது அதிகாரிகளை பாதுகாப்பு கருதி வாபஸ்பெற்றதை அடுத்து இரண்டு வாரங்களுக்கு மேலாக எந்த உணவு வகையும் மடுவிற்கு கிடைக்கவில்லை. இதனால் மடுவில் உள்ள அகதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

## புனித யாகப்பர் ஆலயம் மீது குண்டுவீச்சு ஆயர் கண்டனம்

குருநகரில் உள்ள புனித யாகப்பர் ஆலயத்தின் மீது நடந்த விமானக் குண்டுவீச்சினால் ஆலயம் மிகுந்த சேதத்திற்குள்ளானது. இக்குண்டுவீச்சின் போது ஒன்பது பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் மற்றவர்கள் காயங்களினால் பின்னர் இறந்ததாகவும் கொழும்பு வந்த அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் இத்தாக்குதலில் ஐம்பது பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள்.

3ம் பக்கம் பார்க்க..

மாபெரும் மலிவு விற்பனை

சிவாஸ் ரேடிங் கோ

3852 Finch Ave East (Kennedy/Finch)

321 2739

# உத்தரப்பிரதேசத்தில் இழுபறி

பிந்திய செய்திகளின்படி உத்தரப்பிரதேசத்தில் பாரதிய ஜனதாவும் இடதுசாரிக் கூட்டணியும் ஆட்சியமைப்பதற்கு போட்டி போட்டபடியுள்ளன. பாரதிய ஜனதா 177 ஆசனங்களையும் சமாஜவாதிக் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் சேர்ந்த கூட்டணி 176 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

பாரதிய ஜனதா பெரும்பான்மைப் பலத்தைப் பெறத் தவறியதால் மற்றக் கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆயினும் இடதுசாரிக் கூட்டணியே ஆட்சியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 425 ஆசனங்கள் கொண்ட சட்டசபையில் காங்கிரஸ் 28 ஆசனங்களையும் வி.பி. சிங்கின் ஜனதா தளம் 27 ஆசனங்களையும் பெற்றிருக்கின்றன.

ஜனதா தளத்தில் அஜித் சிங் தலைமையிலான பிரிவை தனது பக்கம் இழுக்க பாரதிய ஜனதா முயல்கிறது. சமாஜவாதிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் முதல்வராவதை வர விரும்பாத பாரதிய ஜனதா அஜித் சிங்கை முதல்வராகும்படியும் அவரையே முழு அமைச்சரவையையும் அமைக்கும்படியும் கேட்டு வருகிறது. ஆயினும் அஜித்சிங்கின் பிரிவினருக்கு 18 ஆசனங்களே உள்ளதால் பாரதிய ஜனதா பெரும்பான்மையைப் பெற முடியாது.

இதற்குள் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு குழுவினர் இடதுசாரி கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்றும் இன்னொரு பிரிவினர் யாதவை ஆதரிக்க வேண்டாம் என்றும் மோதி வருகின்றனர்.

இதை விட எட்டு சுயேச்சைகளின் ஆசனங்களைப் பெற இரு தரப்பினரும் முயல்கின்றனர்.

# குண்டுவீச்சில் இருபது பேர் பலி கொழும்பில் அரச அதிபர்

சமீபத்திய விமானக் குண்டுவீச்சுக்களினால் சுமார் இருபது பேர் வரை கொல்லப்பட்டதாகவும் கோயில் ஒன்றும் அரச கட்டடங்களும் சேதமாக்கப்பட்டதாகவும் யாழ். அரசாங்க அதிபர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார். தனது அலுவலகம் மீதும் குண்டு வீசப்பட்டதாகவும் இதனால் தானும் காயமடைந்ததாகவும் திரு.கார்த்திகேசு மாணிக்கவாசகர் மேலும் தெரிவித்தார்.

வடபகுதியில் ஏற்பட்ட சேதம் பற்றி தான் கொழும்பில் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார். நவம்பர் 12ம் திகதி நடைபெற்ற தாக்குதலில் தனது நெஞ்சில் குண்டுத் துகள்கள் துளைத்ததாகவும் குண்டுவீச்சிலிருந்து தப்ப தான் மேசைக்கு கீழ் பதுங்கிக் கொண்டதாலேயே தப்பியதாகவும் அவர் மேலும் கூறினார்.

அவரது அலுவலகத்திற்கு எதிராக உள்ள புலிகளின் பொலிஸ் நிலையத்தின் மீதே தாக்குதல் நடந்தது என இராணுவத்தினர் தனக்கு கூறியதாக தெரிவித்த அவர், இத் தாக்குதலில் ஒரு புலி கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமடைந்ததாகவும் கூறினார்.

இந்த தாக்குதலால் சுமார் ஒரு கோடி ருபா வரை சேதம் ஏற்பட்டதாகவும் அலுவலகத்தின் மேற்பகுதி கடும் சேதத்திற்குள்ளானதாகவும் அவர் கூறினார்.

# இஸ்ரேலை மீண்டும் அழைக்க கோரிக்கை

சமீபத்திய பூனகரித் தாக்குதலின் போது புலிகளுடன் இஸ்ரேலியர் ஒருவர் காணப்பட்டதாக ஒரு இராணுவத்தினர் கூறியிருந்தார். ஆயினும் அது தவறு என்று இராணுவ மேல் மட்டத்தினர் அதை நிராகரித்திருந்தனர். ஆயினும் அரசாங்க மட்டங்களில் மீண்டும் இஸ்ரேலியரின் உதவியை நாடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. பிரேமதாசாவினால் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு மூடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை இஸ்ரேலுடனான உறவுகளைக் கொண்டிருக்கவில்லை. பிரேமதாசா இஸ்ரேலியரை வெளியேற்றிய போதும் தொடர்ந்தும் இஸ்ரேலிடமிருந்து இலங்கை ஆயுதங்களை பெற்றுக் கொண்டது. முன்பு சிறிமா 1970 இல் இஸ்ரேலிய தூதுவரகத்தை மூடிய பின்னர் ஜே.ஆர் ஆட்சிக்காலத்தில் பயங்கரவாதத்தை அடக்குவதற்காக என்று கூறி இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு அமைக்கப்பட்டது. ஆயினும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இஸ்ரேலிய பிரிவு அனுப்பப்படும் என்று கூறியதற்கு இணங்க பிரேமதாச அதை மூடியிருந்தார்.

தற்போது இந்தியா இஸ்ரேலுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதால் மீண்டும் இலங்கை இஸ்ரேலை அழைத்தாலும் இந்தியா ஆட்சேபம் தெரிவிக்காது என்றே கருதப்படுகிறது.

ஜே.வி.பி கிளர்ச்சியின் போது பாராளுமன்றத்தில் குண்டு வீசப்பட்ட போது முக்கியஸ்தர்களின் மெய்பாதுகாவலர்களுக்கு பயிற்சி அளிக்க இஸ்ரேலின் உதவி நாடப்பட்டது. தற்போது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் மெய்பாதுகாவலர்களாக இருப்போர் அனைவரும் இஸ்ரேலியரினால் பயிற்றப்பட்டவர்களே.

தற்போதைய நிலையில் புலிகளை அடக்க வெளியாரின் உதவி நாடப்பட வேண்டும் என்று கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் பல கோரிக்கை விடுதது வருகின்றன. இந்தியாவின் உதவியும் நாடப்பட வேண்டும் என்றும் அவை கூறியுள்ளன.

# இனப்பிரச்சனை பற்றிய சிறிமாவின் நிலைப்பாட்டில் மாற்றம்

அனுரா பண்டாரநாயக்கவின் வெளியேற்றத்திற்கு பின்னர் சுதந்திரக்கட்சி இனப்பிரச்சனை தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றங்களைக் காட்டி வருகிறது. கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட் மற்றும் தமிழ் குழுக்களுடன் சுதந்திரக்கட்சி பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறது என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினரான அனுருத்த ரத்வத்தை ஆற்றிய உரை சுதந்திரக்கட்சியின் கருத்தில் ஏற்பட்ட மாற்றத்தை காட்டும் முதலாவது காரணமாயிருந்தது. யாழ்ப்பாண மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமல் வாழும் அவல நிலை பற்றி காரசாரமாக அவரது உரை இருந்தது. இதன் பின்னர் பாராளுமன்றத்தில் சிறிமா ஆற்றிய உரையும பெரும் திருப்பமாக அமைந்தது. முழு உலகுமே இலங்கையில் இனப்பிரச்சனை உள்ளது என்று கூறும் போது ஜனாதிபதி இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சனையே இருக்கிறது என்று கூறுகிறார் என்றும் இதனால் மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள் என்றும் சிறிமாவோ தெரிவித்திருந்தார். வடக்கில் வாழும் மக்களுக்கு போதிய உணவு இல்லை என்றும் மின்சாரமோ ,மண்ணெண்ணெயோ இல்லை என்றும் அவர்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள் என்றும் வடக்கிலிருந்து வரும் மக்கள் தங்கள் நிலை பற்றி முறையிடுகிறார்கள், வடக்கில் உள்ள மக்கள் புலிகளை ஆதரிப்பதற்கு காரணம் அவர்கள் அரசாங்கத்தை வெறுப்பதினால் தான், இலங்கையில் இனப்பிரச்சனை என்று கூறுவதன் மூலம் யுத்தத்தை நீடிக்கக் கூடாது, வடக்கில் உள்ள மக்களின் உள்ளங்களை வெல்வதற்கு போதிய உணவுப் பொருட்கள் அனுப்பப்பட வேண்டும் என்றும் சிறிமாவோ தனது உரையில் கூறியிருந்தார்.

இருப்பினும் முன்னர் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் சுதந்திரக்கட்சி முன்நிற்கவில்லை, பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு கட்சியின் சார்பில் எந்த யோசனையும் சமர்ப்பிக்கப்படவில்லை, இறுதியில் தெரிவுக்குழு அர்த்தமற்றதாகி விட்டிருந்தது. பின்னர் இந்திய இராணுவத்தையும் வெளியேற்ற வேண்டும் என்று கோரியிருந்தார். இதை விட ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளிக்குமாறு புலிகளை கேட்டுக் கொள்ள இவர் அனுராவை வன்னிக் காட்டுக்கும் அனுப்பியிருந்தார். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப்பதால் சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு தமிழ் வாக்காளர்களைக் கவர முயல்கிறது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

# தொண்டா ஐ.தே.க மோதல் நீடிக்கிறது

தொண்டமான் ஐ.தே.கட்சியுடனான உறவுகள் சீர்கெட்டு வரும் வேளையில் தொண்டமானுடன் சிறிமாவோ பண்டாரநாயக்க பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த பேச்சுவார்த்தைகளில் ஒரு தடவை காமினி திசநாயக்கவும் இருந்திருக்கிறார். இந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் மத்திய மாகாணசபையின் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. மத்திய மாகாண சபையில் தொழிலாளர் காங்கிரசின் வாக்குகளினாலேயே அரசு நிலைகொண்டுள்ளது. காங்கிரஸ் தனது ஆதரவை வாபஸ் பெறும் பட்சத்தில் அரசு கவிழக்கூடும்.

ஜனாதிபதிக்கும் தொண்டாவுக்குமான உறவுகள் சீர்கெட்ட நிலையில் அதை நிவர்த்தி செய்ய பிரதமர் ரணிலும் மற்றவர்களும் முயற்சி செய்து வருகிறார்கள்.

27 வருடங்களாக ஐக்கியதேசியக் கட்சியும் காங்கிரசும் இணைந்து செயற்பட்ட போதிலும் அதிகமான நன்மை ஐ.தே.கட்சிக்கே கிடைத்து வந்தது. மலையகத்து வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும் இயந்திரமாகவே காங்கிரஸ் அரசினால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

## புனித யாகப்பர்.

விமானத் தாக்குதல் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தில் கோயிலுக்குள் இவர்கள் ஓடிச் சென்ற போது இந்த தாக்குதல் நடந்தது. இதனால் பழமை வாய்ந்த இந்த ஆலயம் கடும் சேதத்துக்குள்ளானது.

கொல்லப்பட்டவர்களில் பலரது உடல்கள் சிதறிய நிலையிலேயே அள்ளப்பட்டு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல் நடத்தப்பட்டது இலக்குத் தவறியதாலேயே என்ற இராணுவத்தினரின் கூற்று பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. யாழ். கத்தோலிக்க ஆயர் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் ஜனாதிபதிக்கும் ஆட்சேபக்கடிதம் ஒன்றும் அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அச்சிடப்படும் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளில் இடிந்த கோயிலின் படம் அச்சிடப்பட்டிருப்பதாக இன்னொரு செய்தி கூறுகிறது.

# கைதான தமிழர்கள் விடுதலை

முன்பு கொப்பேகடுவவின் காலத்தில் பூனகரிப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றிய போது அங்கிருந்த தமிழ் மக்களில் 41 பேரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். சமீபத்தில்

6ம் பக்கம் ...

# முனியின் பதில்கள்



***மாத்தயா அவர்களை புலிகள் தண்டித்து விட்டதாக கருதப்படும் செய்தி பற்றி நீங்கள் கூறக்கூடியது என்ன?***
***பி. விக்னேஸ்வரன் பிரான்ஸ்***

கல்லா ஒருவர்க்கு
தம் வாயின் சொல் கூற்றம்
மெல்லிய வாழைக்கு
தான் ஈன்ற காய் கூற்றம்
அல்லவை செய்வார்க்கு
அறம் கூற்றம்.

***தமிழர்கள் காரணமின்றி கொழும்பில் கைது செய்யப்படுகிறார்கள் இதை தடுக்க யாருமே முயல்வதில்லையா?***
***பி. விக்னேஸ்வரன் பிரான்ஸ்***

இதை எதிர்த்து பலர் அறிக்கை விடுகிறார்கள். அது போதுமா? புலிக்கு அஞ்சி தஞ்சம் கேட்டு ஓடிவந்த பலரையும் சிங்கள அரசு இப்படி வஞ்சம் தீர்ப்பது முறைகேடு. இவ்வகைக் கைதுகள் கொழும்பில் நடைபெறுவதால் வெளிநாட்டு அமைப்புகள் இதுபற்றி சுலபமாக அறியமுடியும். எனவே வெளிநாடுகளிலுள்ள அகதித்தமிழர் அமைப்புகள் இதுபற்றிய சர்வதேச பிரச்சாரத்தினை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

***தமிழனுக்கு என்று நல்ல காலம் பிறக்கும்***
***சுமதி றொறன்ரோ***

தமிழீழமும் பிறந்த பிறகு.

***தாயகத்தில் பிரசுரமான சூரசம்காரம் என்ற கட்டுரையில் எமது ஊரான வல்வெட்டித் துறையை இழுத்து வேண்டுமென்றே எழுதியுள்ளார்கள். இதுபோன்ற கட்டுரைகள் பிரசுரமாவது மனவேதனையைத் தருகிறது. அரசியலில் உங்களது கருத்துக்களையும், அதற்கான உங்கள் சுதந்திரத்தையும் மதிக்கிறோம் ஆனால் தேவையற்ற விதத்தில் ஊர்களை கொச்சைப் படுத்த வேண்டாம் என பணிவுடன் கேட்டு எமது ஆட்சேபத்தை தெரிவிக்கிறோம்.***
***ராஜன், ஸ்காபரோ***

உங்களது கருத்துக்கு மிகவும் நன்றி. நானும் அக்கட்டுரையை படித்துப்பார்த்தேன். அங்கு அரசியல்தான் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளதாக எனக்கு தென்படுகிறது. ஊர்வாதமோ ஊர்பேதமோ அல்ல. இருப்பினும் சில ஊர்களின் பெயர்கள் கட்டுரைகளில் குறிக்கப்படும்போது உங்களைப் போலவே பல ஊரரர்கள் குழம்பி முறையிட்டிருக்கிறார்கள். (எல்லோருடைய கருத்துக்களையும் கேட்கும்போது பெற்ற தாய் போல பிறந்த பொன் ஊரையும் கருகிறார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது) யாரையும் வேண்டுமென்றே புண்படுத்தும் நோக்கம் எமக்கிருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை. எனவே உங்கள் பண்பான மறுப்புக்கு எமது நன்றிகள்.

***தேவையற்ற படைப்புகள் தாயகத்திற்கு வேண்டாம் என ஏற்கனவே கூறியிருந்தேன். கேட்க மாட்டாயா உங்கள் ஆசிரியரை!?***
***மோகன் றொறன்ரோ***

சிலபடைப்புகள் வாசகர்களுக்கு அத்தியாவசியம் என வாசகர்களே உணரவேண்டும் என எண்ணி பிரசுரிப்பதாயும் சில படைப்புகள் வாசகர்களுக்கு தேவையில்லை என வாசகர்களே உணர வேண்டும் என எண்ணி அவற்றையும் பிரசுரிப்பதாயும் ஆசிரியர் சமாளிபிகேஷன் செய்துவிடுவாரோ என எண்ணியதால் நான் அவரை கேட்கவில்லை. (இரண்டாவது வகையில் முனி பதிலும் அடக்கம் என்கிறார் ஆசிரியர்)

***முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்த்தும்படி இங்குள்ள அமைப்புக்கள் கேட்கின்றனவே, இது சாத்தியமா?***
***தேவராஜ். ஸ்காபரோ***

சாத்தியமா என்று கேள்வி கேட்டு கேட்டே பல விடயங்கள் செய்து முடிக்கப்படாமல் போய்விடுகின்றன. முஸ்லிம்களை புலிகள் விரட்டிய அராஜகம் யாராலும் தட்டிக் கேட்கப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. அதை நினைவுறுத்தும் வகையில் இத்தகைய கண்டனங்களும் கோரிக்கைகளும் முளை விடுவது ஆரோக்கியமான ஜனநாயகம் எமக்குள்ளும் இருக்கிறது எனக் காட்டுகிறது. மீளக்குடியமர்த்துவதற்கு புலிகளே சம்மதித்தாலும் கூட இனி மீளக்குடியமர்த்தப்படுவதற்கு

முஸ்லிம்கள் சம்மதிப்பார்களா என்பது சந்தேகமே?

***பெண்புலிகள் வீரத்துடன் போராடுகிறார்கள். சிங்களவர்கள் புறமுதுகுகாட்டி ஓடிவிடுகிறார்கள். ஓடுபவர்கள் ஏன் மீண்டும் மீண்டும் அங்கேயே செல்கிறார்கள்?***
**சுகந்தன் ரொரன்ரோ**
தட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் தட்டுப்படவேண்டும் என்ற ஆசை போலும்.

***மாவீரர் தினம் பிரபாகரனின் பிறந்தநாளுடன் சேர்த்து கொண்டாடப் படுவதின் அர்த்தம் யாதோ முனிவரே?***
**சுகந்தன் ரொரன்ரோ**
தலைவர் பிறந்ததும் மற்றவர்கள் இறந்ததும் ஒன்றாகவே நோக்கப்பட வேண்டும் என்று கருதப்படுவதால்.

***இங்குள்ள அமைப்புகளிடையே பிரச்சனைகள் ஏற்படக் காரணம் என்ன?***
**நேசன் ரொரன்ரோ**
பொலிடிக்ஸ்+பொறுமை

***உலகத்தமிழர் இயக்கம் நடாத்தும் விழாக்கள், உதாரணம் மாவீரவிழா பண்பாடாக நடாத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இது உங்கள் விமர்சகர்கள் கண்களில் படாமல் போனதன் காரணம் என்ன?***
**எஸ்.கே.எஸ் மொன்றியால்**
உலகத்தமிழர்கள் தமது விழாவை அமைதியாக நடத்தி முடித்ததில் என்ன பெரிய விமர்சனம் இருக்கிறது? அவர்களது விழாவை அவர்கள் அமைதியாகத்தான் நடாத்துவார்கள்....

***கிளிப்பேச்சு கேட்கவா படத்தில் மம்முட்டியின் நடிப்பு எப்படி முனி பகவானே?***
**கவேந்திரன் ஸ்காபரோ**
படம் பார்த்தேன். மம்முட்டி என்ற மலையாள இயற்கை நடிப்பு வல்லுனருக்கு இந்தப்படம் வெகு சாதாரணம். ஹாலிவூட் பெரும் நடிகர்கள் சீரியஸாக நடித்தாலும் கூட அவ்வப்போது நகைச்சுவை பாத்திரம் செய்வதுண்டு. அதுபோல மம்முட்டி ஆசைப்பட்டிருப்பார் போலிருக்கிறது. எனது அபிமான இயக்குனர்களில் ஒருவரான பாசில் என்னதான் குழந்தைத்தனமாக படமெடுக்க முயன்றாலும் அதையும் மீறி ஒரு முதிர்ச்சி தென்படுகிறது.

***பண்டைத் தமிழர்கள் கலையை வளர்த்தது போல விஞ்ஞானத்தை வளர்க்கவில்லையே? ஏன்?***
**எஸ் புஸ்பராஜா ரொரன்ரோ**
கலை என்பது நான். விஞ்ஞானம் என்பது நாங்கள்.

***திருவள்ளுவர் மீண்டும் கனடாவில் பிறந்து வந்தால் இங்குள்ள பெண்களைப் பார்த்து என்ன சொல்லுவார்?***
**எஸ் புஸ்பராஜா ரொரன்ரோ**
என்ன சொல்லக்கூடும் என்று நானும் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறளையும் வாசித்துப் பார்த்தேன். எதுவும் பொருத்தமாகத் தெரியவில்லை. திருவள்ளுவர் ஒரு பழமை விரும்பி புதிதாக வரும்போது புதிய இலக்கியம் படைக்கக்கூடும்.

***யாழ்தேவி ஒப்பரேஷன் தோல்வியில் முடிந்தாலும் மீண்டும் சிங்களப் படையெடுப்பு மீண்டும் தொடர்வதன் காரணம் என்ன?***
**செல்வத்துரை மொன்றியால்**
அடைந்தால் யாழ்தேவி, இல்லையேல் மரணதேவி...ஹா...ஹா..ஹா..ஆ..ஆ.

***புலிகள் சிங்கள அரசு மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் தாக்குதலை நடத்துவது எப்போது முடிவடையும் முனிவரே?***
**செல்வத்துரை, மொன்றியல்**
You never fail until you stop trying என்பார்கள் இது You never stop trying until you fail என்பது போலிருக்கிறது

***சமீபத்தில் நடாத்தப்பட்ட முஸ்லிம்கள் பற்றிய கூட்டத்திற்கு சமூகசேவகர் ஒருவர் சமூகமளிக்க முடியாது போய்விட்ட தென்பதற்காக அவர் மேலதட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்று சம்பந்தப்பட்ட ஒருவரால் 'விளக்கம்' சொல்லப்பட்டதாம். இதை எங்கே போய் முட்ட?***
**சிவா ரொரன்ரோ**
மேல்தட்டு கீழ்த்தட்டு என்று எடுத்ததற்கெல்லாம் 'விளக்கம்' சொல்வது 'மேல்தட்டு' சரிவராத சிலரின் பழக்கம். நல்ல விடயத்தை நடாத்துபவர்கள் விமர்சனங்களுக்கு ஆளாகாத வகையில் ஒழுங்குபடுத்துவதும் நடாத்துவதும் கடினமானதே. சிலருக்கு தாங்கள் ஏதோ பறக்கும் தட்டில் வந்து இறங்கிய விமர்சனப் பிறவிகள் என்ற நினைப்பு போலும். இன்று சமூகசேவைக்கென்று வருபவர்கள் குறைவு. அதிலும் புலிப்பயமற்று வருபவர்கள் மிகமிகக் குறைவு. இவ்வகையில் நுணலும் தன் வாயால் கெடும் என்பதுபோல சிலர் பேசும் பேச்சுக்கள் ஆரோக்கியமானதல்ல.

***முனிவா, நீ மதிக்கும் மாவீரர் யார்?***
**சிவா ரொரன்ரோ**
கிட்டு'மாமா'வீரர்

# மாவீரர் தினத்தை ஒட்டி கொழும்பில் பாதுகாப்பு

மாவீரர் தினக் கொண்டாட்டத்தை ஒட்டி கொழும்பில் அசம்பாவிதங்கள் நடைபெறக் கூடும் என்று கொழும்பில் அசாதாரண அமைதி நிலவியது. பாடசாலைகள் சில மூடப்பட்டதுடன் பல தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. நகரின் பல இடங்களில் துருப்புகள் நிலை கொண்டிருந்தனர். கொழும்பின் பாதுகாப்பை பலப்படுத்த இராணுவ, பொலிஸ், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

# வடபகுதி மாணவர்களின் அவலநிலை

யாழ்ப்பாண மாணவர்கள் யுத்த நிலைமைக்குள்ளும் தங்கள் படிப்பை ஆர்வத்துடன் தொடர்கிறார்கள் என்று யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான வண.பிதா.சந்திரகாந்தன் தெரிவித்திருக்கிறார். ஐலண்ட் நிருபருடன் நடத்திய உரையாடலின் போது 'பல மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் பலர் காணாமல் போயுள்ளதாகவும்' தெரிவித்த அவர் 'உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள் பெரும் ஆர்வத்துடன் தங்கள் கல்விக்கு அர்ப்பணித்துள்ளதாகவும்' கூறினார்.

'பல்கலைக்கழகம் மின் இயந்திரங்களை மாலை ஆறு மணி முதல் பத்து மணி வரை நூலகங்களுக்கு பாவிப்பதாகவும் பாடப் புத்தகங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வர ஒன்றரை வருடங்கள் கூட பிடிக்கின்றன என்றும் தெரிவித்தார். இந்த புத்தகங்கள் கப்பல் மூலம் அனுப்பப்படுவதுடன் பல இடங்களில் சோதனையிடப்படுகின்றன. மாணவர்கள் பத்து மணி வரை ஆர்வத்துடன் படிக்கிறார்கள். எழுதுவதற்காக காகிதங்களின் தட்டுப்பாட்டினால் கலண்டர்களின் பின்புறங்களில் கூட மாணவர்கள் எழுதுகிறார்கள். அத்துடன் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அருகில் வாழ வேண்டிய சூழ்நிலை தோன்றியதால் அவர்கள் அதிக பணம் செலவிட வேண்டியுள்ளது. வார இறுதியில் இவர்கள் சைக்கிள்களில் தங்கள் வீடுகளுக்கு சென்று பின்னர் திங்கள் வீடு திரும்புகிறார்கள். ஒரு மாணவர் ஐம்பதுமைல் கூட சைக்கிளில் செல்வதுண்டாம்.

யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்க்கை உயிர்வாழ்வதற்கான போராட்டமாகும். குண்டுகளையும் ஷெல்களையும் தவிர்த்துத் தப்புவது அன்றாட நிகழ்ச்சி. அரச ஊழியர்களுக்கு நிரந்தர வருமானம் இருப்பதால் பிரச்சனையில்லை. ஆனால் அன்றாடக் கூலிகளுக்குதான் வாழ்க்கை பிரச்சனையாகிறது. விறகு அரிதாகி வருகிறது. மண்ணெண்ணெய் போத்தல் 150 ரூபாய். அரிசி கொத்து 85 ரூபா வரை விற்பனையாகிறது. பெற்றோல் போத்தல் 800 ரூபா.

வடபகுதியில் பிரயாணம் சைக்கிள்கள் மூலமாகவே நடைபெறுகிறது. நான்காவது வருடமாக சரியான போக்குவரத்து இன்றி யாழ்ப்பாணம் தவிக்கிறது. சுமார் பத்தாயிரம்பேர் வரை கிளாலித் தாக்குதலின் போது யாழ்ப்பாணம் வந்தார்கள் இவர்கள் மீண்டும் செல்ல முடியாதபடி இவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டன.

யாழப்பாணத்தில் ரேடியோ, தொலைக்காட்சி இல்லை, நாடகங்களும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் உண்டு. மின்சாரம் இல்லாததால் பூரணை நாட்களில் இளைஞர்கள் பல்வேறு விடயங்கள் பற்றி நிகழ்ச்சிகள் நடத்துகிறார்கள். இதற்கு முழுநிலா கருத்தரங்கு என்று பெயர். காகிதத் தட்டுப்பாட்டுக்குள்ளும் ஒவ்வொரு வாரமும் ஒரு புத்தகம் வெளியாகிறது.

இவ்வாறு வண.பிதா சந்திரகாந்தன் தெரிவித்திருந்நார்.

# இராணுவத் தலைமைப்பீடத்தில் மாற்றம்

தற்போது இராணுவத்தின் வட பகுதி நிர்வாகத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இராணுவத்தின் இரண்டாவது தலைமையில் உள்ள மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தற்போது வடபகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இராணுவ தலைமை அதிகாரியாக இருந்த இவர் இந்த வருட இறுதியில் ஓய்வு பெற இருந்த போதும் இவரது பதவிக்காலம் நீடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பாக அனுப்பப்பட்டிருக்கிறார். இவரது கட்டுப்பாட்டின் கீழேயே இங்குள்ள முப்படையினரும் செயற்படுவார்கள். வடபிராந்திய தளபதி ரேகான் தலுவத்தை இவரின் கீழேயே செயற்படுவார்.

வடபகுதியில் செயலாற்றிய நம்முனி கொழும்புக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக பிரிகேடியர் ஜயவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## தமிழ் கைதிகள் விடுதலை..

புலிகள் நடத்திய தாக்குதலினால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக எந்த முடிவும் இன்றி சிறையில் இருந்த இவர்களில் மூவர் நோய் வாய்ப்பட்டு தகுந்த சிகிச்சை இன்றி இறந்திருந்தார்கள். யுத்தத்தின்போது அதிர்ச்சி காரணமாக இருவர் இறந்திருக்கிறார்கள். தற்போது 36 பேர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் குழந்தைகளும்பெண்களும் அடங்குவர்.

# பூனகரியில் காணாமல் போனவர்களை அரசு தேடுகிறது

பூனகரி யுத்தத்தில் காணாமல் போன இராணுவத்தினர் பற்றிய தகவல்களை அறிவதில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. இவர்கள் புலிகளால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருக்கலாம் என்று இவர்கள் நிலை பற்றி அறிந்து கொள்ள உதவுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தை அரசாங்கம் கேட்டிருக்கிறது. காணாமல் போன இராணுவத்தினர், கடற்படையினரின் பெயர்களை அரசு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்திருக்கிறது. இந்த விபரத்தை பாராளுமன்றத்தில் வைத்து அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஆயினும் எத்தனை துருப்புகளின் பெயர்கள் கையளிக்கப்பட்டன என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

# முக்கிய மாநிலத்தில் பாரதிய ஜனதா தோல்வி!

## இந்து தீவிரவாதம் முடிவுக்கு வருகிறதா?

இந்தியாவில் புதிதாக எழுச்சி பெறும் இந்து தீவிரவாதம் தனது முடிவை நெருங்கியுள்ளதாகவே தெரிகிறது. அயோத்தியில் உள்ள பாபர் மசூதியை இடிப்பதன் மூலம் இந்து தர்மத்தின் காவலனாக தன்னை உருவகித்துக் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சி குறுகிய காலத்தில் தன்னை பலம்வாய்ந்த கட்சியாக உயர்த்திக் கொண்டிருந்தது. அடுத்து ஆட்சியைப் பிடிக்கப் போவதாக கூறிக் கொண்டிருந்த இந்தக் கட்சி இம்முறை நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தல்களில் எதிர்பார்த்த அளவு வெற்றியை ஈட்டவில்லை. மசூதி உடைப்பு போன்றன குறுகிய காலத்திற்கோ பயன் அளிக்கக்கூடியன, கட்சி இன்னமும் சரியான பொருளாதாரத் திட்டங்களை முன்வைக்கவில்லை, இதனாலேயே தோல்வி கிட்டியது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மசூதி இடிப்பைக் காரணம் காட்டி பாரதிய ஜனதாவின் கட்டுப்பாட்டில் இருந்த நான்கு மாநில அரசுகளைக் கலைத்த அரசாங்கம் மீண்டும் தேர்தலை வைத்தது. ஆனால் பாரதிய ஜனதா வெற்றியீட்டும் என்ற எதிர்பார்ப்பில் மண் விழுந்துள்ளது. செல்வாக்கை இழந்த நரசிம்மராவ் அரசும் ஓரளவு தலைநிமிரும் நிலையில் உள்ளது.

இந்தியாவின் பெரிய மாநிலங்களில் ஒன்றான மத்தியப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றிருக்ககிறது. இந்த வெற்றி கட்சியின் செல்வாக்கை மீண்டும் உயர்த்தப் பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உத்தரப் பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் காங்கிரஸ் தனது பலத்தை இழந்துள்ளது.

தான் ஆட்சியிலிருந்த நான்கு சட்டசபைகளில் மூன்றை பாரதிய ஜனதா இழந்திருக்கிறது. புதிதாக அமைக்கப்பட்ட புதுடில்லி சட்டமன்றப் பகுதியை பாரதிய ஜனதா சுவீகரித்துக் கொண்டது. ராஜஸ்தானில் பாரதிய ஜனதா அதிக ஆசனங்களைச் சுவீகரித்த போதும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற முடியவில்லை. ஏழு சுயேச்சை உறுப்பினர்களுடன் ஆதரவுடன் அங்கு ஆட்சி அமைக்க முடியும். இந்த ஏழு பேரின் ஆதரவையும் பெற காங்கிரசும் முயன்று வருகிறது. இமாச்சல பிரதேசத்தில் 68 ஆசனங்ளில் முக்கால் பங்கு ஆசனங்களை காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது. பாரதிய ஜனதாவின் உள்ளூர் தலைவர் தனது ஆசனத்தை இழந்திருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தில் ஆட்சிக்கலைப்புக்கு முன்னர் ஆட்சியிலிருந்த பாரதிய ஜனதா இடதுசாரிக் கூட்டணியிடம் தோற்றுள்ளது. அரிஜன மக்கள், முஸ்லிம்கள், சிறுவிவசாயிகளின் ஆதரவைக் கொண்டு இடதுசாரிக் கூட்டணி ஆட்சிகரு வந்தாலும் அரசு ஸ்திரமாக இருக்காது என்று நம்பப்படுகிறது. இக்கூட்டணியில் சமாஜவாதி கட்சியும் பகுஜன் சமாஜக் கட்சியும் உள்ளன. இக்கூட்டணிக்கு இந்திரா காங்கிரஸ், ஜனதாதள ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்குள் கட்சி எதிர்பார்த்த அளவு வெற்றியீட்டாததற்கு கட்சியின் செயற்குழு வேண்டியவர்களுக்கு வேட்புமனுக் கொடுத்ததே காரணம் என்று குற்றம் சாட்டிய தமிழக காங்கிரஸ் உறுப்பினரான ரங்கராஜன் குமாரமங்கலம் தனது பாராளுமன்ற விவகார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும்படி நரசிம்மராவினால் கேட்கப்பட்டுள்ளார்.

# இனப்படுகொலைக்கு எதிராக பிக்குகள் ஆர்ப்பாட்டம்

பங்களாதேஷின் மலைப் பகுதிகளில் வாழும் ஆதிவாசிகள் மீதான தாக்குதலை நிறுத்துமாறு டாக்காவில் சுமார் முன்னூறு புத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சிட்டாகொங் மலைப்பகுதியில் வாழும் பௌத்த இன மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி அவர்கள் கோரிக்கை விடுத்தனர். 'இரத்தக்களரி வேண்டாம், மலைவாழ் மக்களைக் காப்பாற்றுங்கள், நாங்கள் அமைதியாக வாழ விரும்புகிறோம்' என்னும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்திச் சென்றனர்.

நவம்பர் 17ம் திகதி இந்திய எல்லைப் பகுதியில் மலைவாசிகளின் மாணவர் அமைப்புக்கும் அரச சார்பான ஆர்ப்பாட்டக்காரருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 23 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இதில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாகவும் ஒரு பிக்குவைக் காணவில்லை என்றும் இந்த பிக்குகள் சங்கம் தெரிவித்தது.

கடந்த இருபது வருடங்களாக நடைபெறும் சண்டையில் 3500 பேர் வரை இறந்ததுடன் பலலாயிரக் கணக்கானோர் அகதிகளாயுள்ளனர். சாந்தி பாகினி என்ற பெயரில் மலைவாசிகளின் கெரில்லாக்கள் நடத்தும்போராட்டம் 5500 சதுரமைல் பிரதேசத்திற்கு தனிநாடு கோருகிறது. அத்துடன் அங்குள்ள மூன்று லட்சம் வங்காளிகள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுகின்றது.

# ராஜீவ் கொலை பற்றி விசாரணை

ராஜீவ் கொலை சம்பந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 26 பேரும் தாங்கள் சுற்றவாளிகள் என்று தெரிவித்ததுடன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு தாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதாக தெரிவித்தனர். இவர்கள் பற்றிய விசாரணைகள் ஒரு வருடத்திற்கு மேலாக நீடிக்கும் என்று கருதப்படுகிறது. இந்த வழக்கில் சுமார் ஆயிரம் சாட்சிகள் ஆஜராகுவர். அடுத்த பெப்ரவரி மாதம் தொடங்கும் இந்த வழக்குகளில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

# கிருஸ்ணார்ப்பணம்

20-11-93 சனி இரவு மொன்றியால்சென் ஹென்றி மண்டபம் நிரம்பிய மக்கள் சிலையென அமர்ந்திருந்தனர். மண்டபத்தில் இவ்வளவு மக்கள் இருப்பதற்கான அறிகுறியும் இல்லாத அளவுக்கு அவர்களை சிலையாக்கி அடிமையாக்கி வைத்திருந்தது திருமதி லக்சுமி ரங்கநாதனின் வீணை இசையும் அதற்கிணையாக ஆனந்த் பிரசாத் அவர்கள் இசைத்த மிருதங்க இசையுமே. காண வந்த "கிருஸ்ணார்ப்பணம்" நாட்டிய நிகழ்வை ஆவலுடன் மனதில் நிறுத்தி இந்த இசையை ரசித்தபடி மௌனமாக பார்த்திருந்தனர். திருமதி வசந்தா கிருஸ்ணன் அவர்களின் கிருஸ்ண கீர்த்தனங்கள் வீணையும் மிருதங்கமும் வழிகாட்ட மாணவியர் நாட்டிய லாவண்யத்தினூடு வெளிவந்து அங்கிருந்த அத்தனை மக்களையும் சிலையாக்கி கட்டிப்போட்டது. ஒரு ஊசி விழுந்திருந்தாலும் சத்தம் கேட்குமளவுக்கு நாட்டிய லாவண்யம் எல்லோரையும் மௌனிக்க வைத்திருந்தது.

ஒவ்வொரு மாணவியும் தாம் காட்டும் ஒவ்வொரு முத்திரையிலும் தமது குருவின் பெருமை காட்டினர்.

"ஆடலுடன் பாடலை கேட்டு" ரசிகர்கள் யாவருக்கும் அன்று பாடலுடன் ஆடலை தந்து மனதை நிறைத்தார் திரு ஆனந்தபிரசாத் அவர்கள்.

நிருத்தியாலயாவினரின் கிருஸ்ணார்ப்பணம் பார்த்தபின்பு சிலர் வள்ளி திருமணம் பார்க்கத் தவறியதை சொல்லி கவலைப்பட்டுக் கொண்டனர். நாடு, மொழி, மதம், கலை கலாச்சாரம் வளர இப்படி ஒரு அருமையான வழியுண்டென்பதை எம்மவர்கள் புரிந்து கொள்வார்களா? என ஒரு நண்பர் விம்மினார்.

செல்வன் ஸ்ரீராம் கிருஸ்ணன் திரு.திருமதி வசந்தா கிருஸ்ணனின் புதல்வர் ஆனந்த பிரசாத் பாடிய போது பாடலுக்கும் மாணவியரின் ஆடலுக்கும் இணையாக மிருதங்கத்தை இசைத்து மானசீகமான ஆசியை அனைவரிடமும் பெற்றுவிட்டார் செல்வன் ஸ்ரீராம். இவர் தாள லயம் இவர் குருவை பெருமைப்படுத்தியிருக்கும் என்பது உண்மை.

விளம்பரமேதுமின்றி இவ்வரங்கம் இப்படி நிறைந்ததென்றால் இது இக்கலையின் பெருமைதான்

**-சுகன்யா-**

# கடந்த வாரத் தாக்குதல்கள்

பூனகரிப் பகுதியினூடாகச் சென்ற வள்ளங்கள் மீது விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த தாக்குதல் நடைபெற்றது. ஆயினும் எத்தனை வள்ளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன என்பதோ இழப்புகள் பற்றியோ இராணுவம் எதுவும் தெரிவிக்கவில்லை.

பலாலியில் நடந்த மோதல் ஒன்றில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டதாகவும் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் சனிக்கிழமை இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கிழக்கில் அதிரடிப் படையினருடன் நடந்த மோதலில் இரு புலிகள் கொல்லப்பட்டதாகவும் சனிக்கிழமை இராணுவம் தகவல் வெளியிட்டது. ஒரு பொலிசார் கடும் காயங்களுக்குள்ளானதாகவும் புலிகளின் மறைவிடம் ஒன்றை பொலிசார் தாக்க சென்ற போதே இந்த மோதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருமலையில் வெள்ளிக்கிழமை பொலிஸ் சோதனை நிலையம் ஒன்றில் புலிகள் வெடிக்க வைத்த குண்டு ஒன்றினால் காயங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# பால்மாவில் கதிர்வீச்சு

போலந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவை திருப்பி அனுப்பும்படி இலங்கை சுங்கத் திணைக்களம் நெஸ்லே நிறுவனத்திற்கு உத்தரவிட்டது. இந்த பால் உணவுப் பொருளில் கதிர்வீச்சு காணப்பட்டதாக கூறப்பட்டது. சாதாரணமாக பாதிப்பு ஏற்படுத்தாத அளவை விட இரண்டு மடங்கு அதிகமான கதிர்வீச்சு அதில் காணப்பட்டதாக ஆய்வுகள் காட்டியிருந்தன.

இந்த பாலைக் குடிப்பதால் தோலில் புற்றுநோய் ஏற்படக் கூடும் என்றும் அங்கவீனக் குழந்தைகள் பிறக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான பால் உணவை பங்களாதேஷ் சமீபத்தில் நிராகரித்திருந்தது. 1986 இல் செர்னோபில் பகுதியில் நடந்த அணுஉலை வெடிப்பினால் அருகில் உள்ள பால் உற்பத்தி நாடுகளின் உற்பத்திகள் பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் இந்த சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

# தாண்டிக்குளத்தில் தாக்குதல்

தாண்டிக்குளம் சோதனை முகாம் மீது கடந்த வியாழக்கிழமை புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். காலையில் பயணம் செய்கின்ற மக்களோடு மக்களாக வந்த புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் ஹெலிகொப்டர்கள் மூலம் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் புலிகள் பின்வாங்கிக் கொண்டதாகவும் எந்த இழப்புகளும் இல்லை என்றும் வவுனியாவிலிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயினும் அப்பகுதியில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் பங்கர் ஒன்றில் இருந்த இராணுவத்தினர் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...

## Antony Brothers Peoples Market

**1472 Queen St West**

**Tel:516 3903**

## மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| சிவப்புப் பச்சை அரிசி | 1கிலோ | 1.49 |
| முந்திரி வத்தல் 200 கி | | .99 |
| சக்கரை 450 கி | | 1.49 |
| பயறு 2 ருத் | | 1.49 |


## Antony Brothers Fashion House

**1484 Queen St West**

| | |
|---|---|
| Ladies Clothes (Front open) | $13.99 |
| Maestro Phones (Call Display) | $99.99 |
| 8 pc நிறைகுடம் செட் | $47.99 |

---


## WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL




### VITAMOL by DR. ROBERT


DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




### DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




### NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




### CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள்
அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

**Tel:297 9444**

## விசேட மலிவு விற்பனை

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.50 | 1.39 |
| குத்தரிசி | 6.50 | 1.39 |
| அரிசிமா | 6.89 | 1.39 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு,
துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.39
5 கிலோ $ 6.50

சீனி 1.29/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

**THURKAS SUPERMARKET**
*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

மற்றும் ஆட்டிறைச்சி,
கோழி, கோழிக்கால், ஈரல்,
கிட்னி, மரக்கறி வகைகள்,
பழவகைகள் அனைத்தும்
மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550**
**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



## பவிசு

அதோ போகிறுரே!
அவர் ஊரிலே நல்ல சினேகிதம்!
இங்கு வந்து
ஐந்து ஆறு வருசமிருக்கும்
இப்போ இங்கத்து பிரசையாகியிருப்பார்

இப்போது கண்டதும்
காணுதது போல
தலையைத் திருப்பிப் போகிறுரே!
அவரோ
நல்ல மனுசன்.
அவரில் பிழையிருக்காது
அவர்
கழுத்திலே கட்டியிருக்கும்
சுருக்குப்பட்டிதான் சொல்லியிருக்கும்.
இலங்கையரைக் கண்டால்
தூர விலகு என்று.

**அருண்**

## மூன்றும் உலகு

அடேயப்பா
எத்தனே டொலர்கள்
இத்தனே கிடைத்தால் எத்தனே கனவு
நனவாகிப் போகும்
மூத்தது மூக்கைத் தொட
இளேயது இடுப்பைத் தொட
இடுப்பாளுே கத்தத்தொடங்குது
மூன்றும் மூக்கலுக்க வந்தானுக
வருவான் வருவானெனன்
நானும் பாத்தேன்
வந்ததுகளோ....
வேண்டாம் வயித்தெரிச்சல்
இவனுக்கு தெரியாது
வயிறு ஏன் எரியுதென்று
எப்படி வந்ததென்று
எமக்குள்ளே இருப்பவை
நல்லனவும் கூடாதனவும்
சந்தைக் கலாச்சாரம் சரக்காய் புகலிடத்திலுமாம்
ஓ ஆசியனே! பெண்களே
நாம் திருந்தப் போவதுமில்லே
திரும்பிப் பார்ப்பதுமில்லே
கொரியாவில் மட்டுமா? அடிமையாய்
அரபுலகில் குவைத்தில்
எண்ணெய் கொழுப்பில்
எள்ளாய் பிழிவான் அராபியன்
வெள்ளேயனுே எடுத்து விடுவான்
கறுப்பு நாயே என
இருக்க இடமில்லே
அடக்க அரிசியில்லே
ஆயுத அறிவில் மட்டும் முதல்
அனேத்திலும் மூன்றும் இடம்

**நந்தன் சுவீடன்**

நாடு தீப்பற்றி எரிந்தா நமக்கென்ன
நாலு கொழுந்து துளிர் விட்டா போதுமுனு
இருந்தேனடா முனுசாமி
ஐஞ்செழுத்தும் நமக்கு வேணும்
அஞ்சலேயின் சொகம் மட்டும் போதுமுனு
இருந்தேனடா முனுசாமி
கால் இருக்க எம் ஊருக்கு பஸ் எதுக்கு
கால்நடையும் நாங்களும் நடக்க கத்துக்குவோமுனு
இருந்தேனடா முனுசாமி
தொர பெரியவரு படிச்சவரு வூட்டுக்கு பத்து காம்பரா
எங்க காம்பராவுக்குள் பத்தும் பாயில கிடக்கட்டும்னு
இருந்தேனடா முனுசாமி
அரசியலெல்லாம் எமக்கெதுக்கு
அரசாங்கம் தரும் கூலி போதுமுனு கம்முனு
இருந்துட்டேன்டா முனுசாமி
அவுங்களும் இவுங்களும் சுட்டுக்கொள்ருங்க
அடுத்தாத்து வம்பு எல்லாம் நமக்கெதுக்குனு
இருந்தேனடா முனுசாமி
தமுலன சுட்டா நமக்கும் சுருக்குனுது
துடிச்சு எழுந்தா சுருட்டி வைச்சுடுவானுகனு கம்முனு
கெடந்துட்டேன்டா முனுசாமி
நானும் சில்வாவும் ஒரே ஆசுபத்திரியிலதான் பொறந்தோமடா
அவனுக்கு பொறந்த குறிப்பு இருக்கு எனக்கு இல்லேயேடா
அம்புட்டு சொல்லியும் அடிச்சு சொல்ருன்டா

அவன் பூட்டன் துட்டகைமுனுவின் தேசமாம்மடா முனுசாமி
நான் கள்ளத்தோணியாமடா அடிக்கிருன்டா
மண்டைக்குள்ள சட்டுனு வந்ததுடா ஒன்னு முனுசாமி
வாயால திட்டுப் புட்டுனு சொல்லிப்புட்டேன்டா
அப்படினு யாழ்ப்பாடிக்கு கிடைத்த பரிசு யாழ்ப்பாணம்டா சில்வா
அதையேன் கேட்டு அடிக்கிறீங்க முட்டாள் பயலுகளானு ........
அவன் அடிச்சா மட்டும் பரவாயில்லடா முனுசாமி
பயங்கரவாதினு கூட்டுக்குள்ள தள்ளிப்புட்டான்டா
நாலு நோட்டை நீட்டினு நாணயமா
கூட்டத்தொறந்து வுடுவானுகடா
பொழைப்புக்காக தான் தமுலன அடைக்கிருனுகளடா
கூலிக்கு மாரடிப்பது போல் இங்கு
தமுலன தமுலனே வந்து காட்டிக்கொடுக்குருண்டா முனுசாமி
எல்லாம் கூலிக்காக கூலியாக அலேயுருனுகளடா முனுசாமி....

கூலிக்கு மாரடிக்கிறவன் இருக்கும் வரை உண்மையா
அழ நினேக்கிறவனும் அழ மாட்டான்
காட்டிக்கொடுக்கிறவன் இருக்கும் வரை
உண்மையானவன் வாழவும் மாட்டான் முனுசாமி

**மொனிக்கா**

### இவ்வாரச் சிந்தனேக்கு

**பயிற்சி செய்தால் பழக்கம் ஊன்றும்**
**முயற்சி செய்தால் முடிக்கத் தோன்றும்**

**கவிஞர் வி.கந்தவனம்**

## ஜெயந்தீஸனின் குட்டிக்கதைகள ;

# 32+2 பவுண்= தாலp

(12.11.1993 "தாயகம்" இதழில் ஜீ. மொனிக்காவின் "அப்பே யக்கா" சிறுகதையை வாசித்ததால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாகத் கனிந்ததே இக் குட்டிக்கதை)

மூன்றுபேர், சுரங்கரயிலின் ஒரு பெட்டிக்குள் தனித்தனியாகப் பிரயாணம் செய்து வருவது வழக்கம். ஒரு பெட்டை, வயது 22 தான். மற்றது பெடியன், 26 வயது. அடுத்ததோ 55 வயதுக் கிழம். தலையெல்லாம் நரைத்துவிட்டது. பெட்டை பெடியனைப் பார்த்துச் சிரிப்பதில்லை. கிழவனையே தனது வட்டவிழிகளால் பார்க்கும். சிரிக்கும். அவரும் தனது 32 ஐயும் காட்டிக் கொண்டிருப்பார். 32 உம் ஒறிஜினல் அல்ல, ஆனால் ஒறிஜினல் தங்கத்தில் வார்த்து எடுக்கப்பட்டது. வடிவான பெட்டை, வடிவான தன்னைப் பார்க்காமல், நரை விழுந்த கிழவனில் மயங்குவதையிட்டுப் பெடியனுக்குக் கவலை. உஷ், உஷ், என பெடியன் எவ்வளவோ தடவைகள் றை பண்ணியும் பெட்டையின் வட்டக் கண்களோ பெடியன் பக்கம் ஒரிரு தடவைகள் மட்டும் திரும்பிய பின்னர் நிரந்தரமாக நின்றுவிட்டன. காலம் கனிந்துவரும் எனப் பெடியன் கனவு கண்டப்படி. கிழவனுக்கோ பேரப் பிள்ளைகளும் உள்ளன. பெட்டைமீது லைட்டாக சபலம். ஆனால் நேரே சென்று பேசப்பயம். வாலிபக்களை கொடுக்கும் ரீசேட்டுகளைப்போட்டார். நரை மயிரை டை கொண்டு கருமயிர் ஆக்கினார். மூன்று மாதமாக, மூவரும் பேசவேயில்லை. ஆனால் ஒரே ரயில் பெட்டிக்குள் தனித்தனியாக இருந்து பயணம். பெட்டையைப் பார்த்துக் கிழவனின் பொற்பற்கள் மினுங்கியபடி. பெட்டையின் கனவு இதுதான். யாரும் இல்லாத இடத்தில் கிழவனைச் சந்திக்கவேண்டும் என்பது. ஒரு நாள், பெட்டை தன்னைப் பின் தொடர்ந்து வருகின்றதா என்பதைப் பரீட்சிக்க, ஜனநடமாட்டம் இல்லாத இடமொன்றில் கிழவன் இறங்கினார். பெட்டையும் இதுதான் சந்தர்ப்பம் என இறங்க, பெடியனும் இறங்கிக் கொண்டார். பெட்டையும், கிழவனும் பெடியன் இறங்கியதைக் கவனிக்கத் தவறிவிட்டனர். ஜனநடமாட்டம் இல்லாத வீதியொன்றுக்குள் கிழவன் நுழைகின்றார். "I Love you " என பெட்டை சொன்னால், உடனடியாகவே ஹோட்டல் ஒன்றுக்குக் கூட்டிச்சென்று, விஷயத்தை முடித்து விடவேண்டும் என்பது கிழவனின் பேராசை. வீதிக்குள் மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்த கிழவன் திரும்பினார். பெட்டை அவரை நோக்கியே நடந்தது. கிழவனுடைய பொற்பற்கள் வழமையைக் காட்டிலும் பிரகாசமாக மினுங்கின. தூரத்திலே, இருவரையும் பின்தொடர்ந்து வந்த பெடியனின் நெஞ்சு நடுங்கியது. பெட்டை கிழவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டால், உடனடியாகவே கிழவனைத் தட்டி விடவேண்டும் என முடிவெடுத்துக் கொண்டான். கிழவனிற்கு மிகவும் அருகில் வந்துவிட்டாள் பெட்டை. கிழவன் எதிர்பார்க்காத வேளையில் "ஜியா" எனக் கத்தியபடி, தனது கால்களை உயர்த்தி கிழவனின் முகத்தில் ஒரு உதை கொடுக்கின்றாள். 32 பொற்பற்களும் பொலபொலவென்று கீழே விழுகின்றன. கிழவன் மயங்கி விழுகின்றார். கொட்டுண்ட பொற்பற்களைப் பொறுக்கித் தனது ஹான்ட் பாய்க்குக்குள் வைத்த பெட்டை மீண்டும் மெத்ரோவுக்கு வருகின்றது. பெடியனுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால், பெட்டை ஏறிய ரயிலுக்குள்ளேயே தானும் ஏறிக் கொள்கின்றார். LA CHAPELLE எனும் நிலையத்தில் பெட்டை இறங்க, பெடியனும் இறங்குகின்றார். பெட்டையின் நிழல் பெடியனால் பின் தொடரப்படுகின்றது. பெட்டை நகைக்கடை ஒன்றினுள் நுழைய பெடியனும் நுழைகின்றார்.

"அண்ணை, இதுகளை ஒருக்காச் சோதிச்சு, ஒறிஜினலோ எண்டு சொல்லுங்கோ" என்றபடி கிழவனின் பற்களைக் கடையில் உள்ளவரிடம் காட்டுகின்றார்.

"தங்கச்சி, தங்க வியாபாரத்திலை எனக்கு 30 வருட அனுபவம். சோதிக்கிறதுக்கு ஒண்டுமில்லை. உது ஒறிஜினல் தங்கம் ... உதுகளை உருக்கி உமக்கு புது டிசைனில் ஒரு சங்கிலி அதுவும் பென்ரனோடை செய்து தரட்டே....."

"தாலியொண்டு செய்யிறது கஷ்டமோ?"

"தாலி செய்யிறதெண்டா, இன்னும் ரெண்டு பவுண் கூட்ட வேணும்... உம்மிட்டை வேறை பல்லுகள் ஏதும் இல்லையே!"

"ரெண்டு பவுணே, அதுக்கும் என்னிட்டை ஒரு ஐடியா இருக்கு...." என்றபடி பெட்டை திரும்ப, விழுந்தடித்து கதவைத் திறந்தபடி, பெடியன் தனது வாயையும் பொத்திக்கொண்டு ஓட்டமெடுத்தார்.

(தாயகம் வாசகர்கள் புத்திசாலிகள்.. ஆதலால் பெடியன் ஏன் வாயைப் பொத்திக்கொண்டு ஓடினான் என்பதை அவர்கள் தீர்மானிப்பர் என நம்பி சொல்லாது விடுகின்றேன்.)

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான
தலைச்சோடனை அலங்காரப்
பொருட்கள் குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி -796 2672

Net,Colorful Flower bouquet, flower basket,

## பென் கூரியனின்

# மூக்குத்தியியல் விசாரணைகள்



எனக்கு 'ஒன்று விட்ட' மச்சானுன ஜெயந்திலன் மூக்குத்தி பற்றி விசாரணை செய்திருந்தான். அந்த நேரம் ஒன்ருய் படித்த காலம் முதல் 'பெண்களின் கூந்தலின் மணம்' தொடக்கம் இவன் செய்யாத ஆராய்ச்சிகளா? காஞ்சனு டீச்சர் மூக்குத்தி போட்டிருந்ததை இவன் அழகியல் நோக்குடன் வகுப்பில் ஆராய்ந்ததை அருகில் இருந்தவன் சொல்லிக் கொடுத்ததால் மாங்கன்றுக்கு கீழே நிற்கும்படி அனுப்பப்பட்டவன். இவனேடு சகவாசம் வைத்ததில் எனக்கும் அந்தப் புத்தி வந்து விட்டது.

எனக்கும் மூக்குத்தி மீதான ரசனை கொஞ்சம் உண்டு. ஊரில் மாட்டின் நாணயக் கயிறு தான் தான் பார்த்த முதல் மூக்குத்தி. நாணயக் கயிறைப் பார்த்துத் தான் பரத நாட்டியமாடும் பெண்கள் தங்கள் மூக்குத்திகளை மூக்கின் நடுவில் உள்ளே அணிகிருர்கள் என்பது என் கண்டுபிடிப்பு.

பின்னுளில் வெளிநாடு வந்த நாட்களில் இந்த மூக்குத்தியின் பல பரிமாணங்களை தரிசிக்க முடிந்தது. சேஃப்டி பின் தொடக்கம் அனைத்து உலோகப் பொருட்களையும் உடலில் குத்தி, காவடி எடுப்பவர்கள் போல காட்சியளிக்கும் குருவிக்கார வெள்ளையர்களைக் கண்டிருப்பீர்கள். ஒரு நாள் ஒரு வெள்ளைப் பெண் தன் புருவத்தில் வளையம் ஒன்றைக் குத்தியிருந்ததைக் கண்டேன். தமிழ் பண்பாட்டைக் காக்கும் முயற்சியோ, அல்லது தங்களை அழகுபடுத்தும் முயற்சியோ பல புகலிடப் பெண்கள் மூக்குத்தி அணிந்து வருகிருர்கள்.

சிலர் இதற்காகவே மூக்கைத் துளைக்கிருர்கள். சிலர் கிளிப் மாதிரிக் கொழுவிக் கொள்கிருர்கள். இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் என் மாமாவுக்கு இரண்டு விட்ட மச்சானுக்கு ஒன்று விட்ட சித்தப்பாவின் மகளுக்கு சாமத்தியச் சடங்குக்கு 'தாங்களும் செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன்' அழைத்திருந்தார்கள்.

★ ★ ★

'சாமர்த்தியப் பெண்' மூக்குத்தியுடன் சிரித்துக் கொண்டிருந்தாள். தந்தையார் போட்டோக்காரனை விரட்டிக் கொண்டிருந்தார். வீரகேசரியில் போட்டோ போடுவதற்காக இருக்கும்.

அங்கே தான் பெண்நிலைவாதி பேரின் பவலலியைக் கண்டேன். பெண்களிற்கு விடுதலை கிடைக்கும் வரை திருமணம் செய்ய மாட்டேன் என்று வீரசபதம் எடுத்தவராம். விசயம் தெரியாத நான் அவவை சைட் அடிக்கும் நோக்குடன் 'நீங்கள் நாவலர் ரேட்டோ?' என்று நைசாக கதையைத் தொடங்கினேன். 'எனக்குத் தெரியும், ஏன் கேக்கிறீர் எண்டு. இல்லை, இல்லை, நான் அந்த இடம் எண்டு சொல்லுவன் எண்டுதானே?' என்ரு. 'ஐயோ பாருங்கோ, நான் அப்பிடிப்பட்ட ஆளில்லை. உங்களை எங்கேயோ கண்ட மாதிரி இருக்கெண்டுதான் கேட்டனுன்' என்று சமாளிக்க.. 'உப்பிடித் தான் எல்லா ஆம்பிளையளும் சொல்றவை' என்று என் மூக்கை உடைத்தா... பெண்களின் அழகைப் பற்றி பேசினுல் மருண்டு விடுவார்கள் என்று எங்கோ சிந்தாமணியில் படித்த ஞாபகம் வர.. 'உங்கட முகத்துக்கு மூக்குத்தி போட்டீங்கள்' எண்டா எடுப்பாய் இருக்கும் என்று அவித்தேன். இந்த மன்மதக் கணையில் அவ மயங்குவா என்ற எதிர்பார்ப்பு எனக்கு.. அவ சிங்கமெனச் சீறி எழுந்தா. 'என்ன நினைச்சுக் கொண்டீர், என்னைப் பற்றி. நான் பெண்ணிலைவாதி.. பெண்களை நீங்கள் ஆடம்பரப் பொருளாய் பாக்கிறீங்கள்.. உம்மட அட்ரசைச் சொல்லும், நாங்கள் உம்மட வீட்டுக்கு முன்னாலே ஆர்ப்பாட்டம் செய்ய வேணும்' அவ சீறிக் கொண்டிருக்க.. பெண்ணிலைவாதியான நீங்கள் எப்படி சாமத்தியவீட்டுக்கு வருவீங்கள்? என்று கேட்டுவிட்டு.. இன்னும் கொஞ்சம் நின்ருல்.. அங்கிருக்கும் மற்றப் பெண்ணிலைவாதிகளைக் கூப்பிட்டு எனக்கு எதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிவிடுவாவோ என்ற பயத்தில் மற்றவர்களுக்கு தெரியாமல் சாராயம் கலந்து கொண்டிருந்த பையன் பக்கமாக நகர்ந்தேன்.

★ ★ ★

கொஞ்சம் போதை ஏறிக் கொண்டதும் உசார் வந்தது.. அங்கே ஒரு பெண்ணின் பின்புறம் தெரிந்தது. நீண்ட கூந்தல்.. காதில் நீண்ட வளையம். இந்த அழகுக்கு மூக்குத்தி இருந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணத்தில் முகத்தில் மூக்குத்தி உண்டா என்ற ஆய்வு செய்யும் நோக்குடன் நைசாக அந்தப் பக்கமாக சென்று 'சிவப்புக் கல்லு மூக்குத்தி, சிரிக்க வந்த மான்குட்டி, மஞ்சள் முகத்தில குங்குமப் பொட்டு வைச்சிக்கிட்டு.. என்று பாடிக் கொண்டே போக.. அந்தப் பெண் இந்தப் பக்கமாக திரும்பினுள்... ஐயோ. அது பெண்ணல்ல.. பையன்! காதில் கடுக்கனும் நீண்ட கூந்தலுமாய் காட்சியளித்த பையனைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டே நகர்ந்தேன். எப்போது எமது புகலிடத்து ஆண்கள் மூக்குத்தி அணிவார்களோ?

★ ★ ★

அங்கே ஒரு அழகான பெண் என்னைப் பார்த்து சைட் அடிப்பது போன்ற பிரமை.. அவ மூக்குத்தி போட்டிருக்கிருவா என்பதையும் செக் பண்ணிக் கொண்டேன். அவதான் அங்கே உணவுப் பண்டங்களை வினியோகித்துக் கொண்டிருந்தா. அவவுக்கு உதவி செய்யும் சாக்கில் போய்... அருகில் உதவி செய்து கொண்டே.. மூக்குத்தி போட்ட புள்ள, முக்காத் துட்டுப் பொட்டுக்காரி, நான் வருவேன் நடுச்சாமம் நினைவாய் முழிச்சிரடி என்று இழுத்தேன். அவவோ பதிலுக்கு 'நான் தான் முழிச்சிருந்தாலும் அவருமல்லோ முழிச்சிருப்பார்' என்று இழுக்க.. துண்டைக் காணும் துணியைக் காணும் என்று பென் கூரியன் ஒரே ஓட்டம்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னுன்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ. லோகநாதன்**

## இடதுசாரி இயக்கத்திற்கு எதிராக யுத்த பிரகடனம்

இவ்வாறு ஆரம்பமாகிய இடதுசாரிகள் மீதான வேட்டை 1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் திகதியை அடையும்போது இடதுசாரித் தலைவர்கள், இயங்குனர்கள், ஆதரவாளர்கள் என 138 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அனேக இடங்களில் ஆயுத பாணியாக கொலை செய்யப்பட்டிருந்தனர். அனேக இடங்களில் ஆயுத பாணியாக முகங்கொடுத்திருக்காவிடின் இத்தொகை இருபது முப்பது மடங்காக அதிகரித்திருக்கும். படுகொலை செய்யப்பட்டவர்களில் விஜய குமாரதுங்க, காமினி மெகெதற, இருசிறி மகிந்தபாகு, அமர வெல்லப்பிலி, எல்,எவ், பண்டித, காமினி துடாவ, ஜோர்ஜ் ரத்னுயக, ரீ.பி. விஜேசூரிய, தேவ பண்டார சேனுரத்ன, பொஹொத்தர முல்லேபேமாலோக அடிகள் (பௌத்த பிக்கு) ஜீ.டி. விமலசேன, றத்தகொட சரணங்கார அடிகள் (பௌத்த பிக்கு) சிறிபால வீரசிங்க (ஷெல்டன்) ஆகியோரும் அடங்குவர்.

## 1988 மாகாணசபை தேர்தல்

1987ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு அமைய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 1987 இலக்கம் 42 மாகாண சபை சட்டத்தின் பிரகாரம் 1988ம் ஆண்டு பெப்பரவரி 03ம்திகதி மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

ஆரம்பத்தில், மாகாணசபை தேர்தலுக்கான வேட்பாளர் மனுக்களை ஒரே தடவையில் தாக்கல் செய்வதற்கென நாள் தீர்மானிக்கப்பட்ட போதிலும் பின்னர் வேட்பாளர் மனுக்கள் ஏற்றுக்கொள்வது மூன்று கட்டங்களாக இடம்பெற்றது. தேர்தல் நான்கு வேறுபட்ட நாட்களில் நடைபெற்றது. வடமேற்கு, வடமத்திய, ஊவா சப்பிரகாமம் ஆகிய மாகாணங்களில் ஏப்பிரல் 28ம் திகதியும் மேற்கு, மத்திய மாகாணங்களில் ஜூன் 02ம் திகதியும் தென் மாகாணத்தில் ஜூன் 09ம்திகதியும் கிழக்கு மாகாணத்தில் நவம்பர் 19ம் திகதியும் தேர்தல்கள் நடைபெற்றன. வட மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கட்சி என்ற ரீதியில் இருகட்சிகள் மட்டுமே போட்டியிட்டதால் அவற்றின் பிரதிநிதிகள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

மாகாண சபை சட்டத்திற்கும், மாகாண சபை தேர்தலுக்கும் எதிரானவர்களால் இவற்றுக்கு விரோதமாக மாபெரும் எதிர்ப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. செய்வதற்கு வேறு ஏதும் இல்லாத நிலையிலேயே அரசாங்கம் மாகாண சபைக்கு உடன்பட்டது மட்டுமன்றி மாகாண சபைகளை சரியான முறையில் செயல்பட இடமளிப்பதில்லை என்னும் நோக்கமும் இருந்தது என்பதை அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலிருந்து காணமுடிந்தது. மாகாண சபைக்கு எதிரானவர்கள் தமது குறுகிய நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவும் இனவாத அடிப்படையிலேயுமே எதிராகவிருந்தார்கள். அரசாங்கமும் சகல எதிர் தரப்பு சக்திகளும் மாகாணசபைகளை சரியான முறையில் செயல்படுத்துவதற்கு இணங்கியிருப்பார்களாயின் அல்லது அவ்வாறு செயல்பட்டிருப்பார்களாயின் தமிழ் மக்களின் ஆதரவை பெறுவதற்கும் விடுதலைப் புலிகள் போன்ற அதிதீவிரவாத சக்திகளை தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும், இனப் பிரச்சினைக்கு சிலகாலம் நிலைக்கக் கூடிய தீர்வு ஒன்றை வழங்கவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் அரசாங்கத்தினதும் இதற்கு எதிரான சக்திகளதும் நடவடிக்கைகள் காரணமாக இச் சந்தர்ப்பம் கவலைக்கிடமான முறையில் நழுவியது.

மாகாண சபைகளுக்கு விடுதலைப்புலிகளும் ஜேவிபி யினரும் கடும் எதிர்ப்பைக் காட்டினர். இவ்விடயத்தில் இரண்டும் ஓர் இடத்திலேயே இருந்தன. இரு பகுதியினரும் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டவர்களுக்கு மரண அச்சுறுத்தல்களை விடுத்தனர். மாகாண சபைக்கு ஆதரவு அளித்தவர்களை, போட்டியிட்டவர்களை தாய்நாட்டின் துரோகிகளாக ஜேவிபியினர் அறிமுகப்படுத்தினர். ஜேவிபி யின் ஆயுதக்கரமான தேசபக்த மக்கள் இயக்கம் தேர்தலில் போட்டியிட முன்வந்தவர்களுக்கு மட்டுமன்றி வாக்களிக்கச் செல்பவர்களுக்கும் மரண தண்டனை விதித்தது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, E P R L F, ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ், ENDLF ஆகியவை மட்டுமே மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டன. மகாகாண சபைக்கு ஆதரவு வழங்கிய சில கட்சிகளும் குழுக்களும் போட்டியிடவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய இலங்கை ஜனதா கட்சி ஆகியவை மாகாண சபைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தேர்தலை பகிஷ்கரித்தன.

ஜேவிபி உட்பட மாகாண சபைத் தேர்தலை பகிஷ்கரித்த அனைத்து கட்சிகளும் குழுக்களும் இலங்கை மக்களை இரு முகாம்களாக பிரித்தன. ஒரு முகாம் தேசபக்தர்களாயும் மற்றைய முகாம் தேசத் துரோகிகளாகவும் அறிமுகப்படுத்தப்பட்டன. தேசிய இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் எனக் கூறியவர்கள், இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு மாகாண சபைக்கும் ஆதரவாகவும் அனுசரணையாகவும் இருந்த அனைவரும் தேசத் துரோகிகள் ஆவர், இவற்றுக்கு எதிரானவர்கள் தேசபக்தர்கள். ஜேவிபி அதன் ஆயுதக்கரமான தேசபக்த மக்கள் இயக்கம், இதுவே 'தாய்நாட்டின் அனைத்து எதிரிகளுக்கும் தண்டனை வழங்கும் ஆயுத படையணி" 'தேசபக்த மக்கள் ஆயுதப் படையணியின்

ஒருங்கிணைந்த கட்டளை தலைமையகம்", "தேசபக்த ஆயுதப் படையின் ஒருங்கிணைந்த தலைமையகம்" "தேசபக்த விடுதலைச் சேனை" ஆகிய பல்வேறுபட்ட பெயர்களில் அறிவித்தல்களையும் கட்டளைகளையும் பிறப்பித்து தேசத்துரோகிகளாக அவர்களால் கருதப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதித்தன.

மாகாண சபை தேர்தலுக்கு வேட்பாளர் மனு தாக்கல் செய்த நாள் தொடக்கம் வன் செயல்கள் மேலும் அதிகரித்தன. தேர்தல் நாட்களில் இவ்வன்செயல்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன. ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது வன்செயல் காரணமாகவும் தேர்தல் பகிஷ்கரிப்பு காரணமாகவும் வாக்களித்த விகிதாசாரம் மிகவும் வீழ்ச்சியடைந்தது. வாக்களிப்பு 49.7 வீதமாகும். சில மாவட்டங்களில் வாக்களிப்பு மிக மிக குறைவாகும். அம்பாந்தோட்டையில் 7.97 வீதம். மாத்தறையில் 20.34 வீதம் ஆகும்.

மாகாண சபை தேர்தலின் பின்னரும் ஜேவிபியின் வன்செயல்கள் மேலும் அதிகரித்தன. படிப்படியாக அதிரித்து வந்த வன்செயல்கள் 1988ல் மேலும் வேகமாக இடம்பெற்றது. ஜனவரி மாதம் 01 ம் திகதி வன்செயல் தடுப்பு பிரிவின் பேலியகொடை நிலையத் தலைவர் சப் இன்ஸ்பெக்டர் விக்கிரமசிங்க மீதான துப்பாக்கி பிரயோகத்துடனேயே 1988ம் ஆண்டு ஆரம்பமாகியது. ஜனவரி 11ம் திகதி ஹொரணையிலுள்ள கும்புக்கே பயிற்சி முகாம் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஆனால் அது வெற்றி அளிக்கவில்லை. பெப்ரவரி 16ம் திகதி விஜயகுமாரதுங்க படுகொலை செய்யப்பட்டார். பெப்ரவரி 22ம் திகதி இசுருமுனி விகாரையின் காவல் நிலையம் தாக்கப்பட்டு படைவீரர்கள் இருவர் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டன. சம்பவங்கள் இவ்வாறு தொடர்ச்சியாக வளர்ந்தன. இக்கால கட்டத்தில் ஜேவிபியினர் கண்ணிவெடி தொழில் நுட்பத்தை பாவிக்கவும் தொடங்கினர். ஏப்பிரல் 5ம் திகதி அம்பலாங்கொடையில் கண்ணி வெடியொன்றை செயலிழக்கச் செய்யும்போது குண்டு வெடித்ததால் லெப்டினனட் B.அலகாவல உயிரிழந்தார்.

கட்டுநாயக விமானப்படைத் தளத்தை ஏப்பிரல் 22ம்திகதி இரண்டாம் தடவையாக பெருமளவிலான ஆயுதங்களைக் கைப்பற்றியது ஜேவிபி இக்காலகட்டத்தில் அடைந்த பெரும் வெற்றியாகும். T. 56 ரக ரைபிள்கள் முப்பது, SLR ஒன்று உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடி குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. இச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மோதலின் போது தாக்குதல்காரர் 6 பேர் உயிரிழந்ததோடு 12 பேர் கைது செய்யப்பட்டனர். விமானப் படைவீரர்கள் நால்வர் உயிரிழந்தனர்.

தனிநபர் படுகொலை, ஆயுதங்களை அபகரித்தல் தவிர பஸ் வண்டிகளுக்கும் அரசாங்க உடமைகளுக்கும் தீவைத்தலும் இக் காலத்தில் ஆரம்பமாகியதை காண முடிந்தது. ஏப்பிரல் 24ம் திகதி மாத்தறையிலிருந்து காலியை நோக்கியும், மாத்தறையிலிருந்து அக்குரஸ்ஸவை நோக்கியும் சென்ற இரு பஸ்வண்டிகள் பயணிகள் இறக்கப்பட்டு தீயிடப்பட்டனர். விசேடமாக இவ்வாறான சம்பவங்கள் தென் பகுதியிலேயே இடம் பெற்றன.

மே மாதம் 1ம் திகதி காலி மாவட்ட அமைச்சரும் ஹபராதுவ பாராளுமன்ற உறுப்பினருமான G.V.S.DE சில்வா படுகொலை செய்யப்பட்டார்.

## அரசாங்கம் ஜேவிபியுடன் உடன்படிக்கைக்கு வருதல்

வடக்கு கிழக்கு தவிர நாடு பூராவும் ஜேவிபியின் செயற்பாடுகள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தாலும் தடுக்க முடியாத நிலமைக்கு மாறியிருந்ததை காணக் கூடியதாயிற்று.

ஜேவிபி அங்கத்தவர்கள் மிருகங்கள் எனவும் அவர்களை பூண்டோடு அழிக்க வேண்டும் என ஜனாதிபதி ஜெயவர்தன கூறியபோதிலும் இக் கட்டளைகள் செயல்படாத அல்லது செயல்படுத்த முடியாத நிலமையே காணப்பட்டது. ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் பிரதமராக இருந்தபோது என்ன காரணத்தாலோ ஜேவிபி தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு விருப்பத்தை காண்பிக்கவில்லை, நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும்வரை இடம்பெறும் படு கொலைகள் தொடர்பாக ஜேவிபியினர் மீது குற்றம் சுமத்த முடியாது எனக்கூறும் நிலமையில் கூட அவர் செயல்பட்டார். ஜேவிபிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க முனைந்த சகல சந்தர்பங்களிலும் பிரதமர் பிரேமதாச அதற்கு எதிராகவிருந்தார் எனப் பரவிய கதைகளில் எவ்வளவு உண்மையானவை எனக் கூறுவது கடினமாயினும் ஜேவிபிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அராசாங்கத்துக்குள்ளேயே கருத்துவேறுபாடுகள் நிலவின என எண்ண முடியும். ஜேவிபி தோற்கடிக்கப்பட்ட முடியாத சக்தி என்னும் உணர்வு அரசாங்கத்துக்குள்ளேயே சில பகுதியினர் மத்தியில் தோன்றியிருந்தது.

மறுபுறம் அரசாங்கமும் தனது இறுதிக் காலத்தை அண்மித்துக் கொண்டிருந்த காரணத்தினாலோ என்னவோ அரசாங்கத்தின் கட்டளைகளை பாதுகாப்புச் சேவையினரும் பூரண அர்ப்பணத்துடன் நிறைவேற்றியதையும் காண முடியவில்லை, இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் மிகவும் இக்கட்டான நிலமைக்கே முகங்கொடுத்தது.


இவ்வாறான நிலமையின் கீழேயே அக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த அத்துலத் முதலி அவர்கள் K.C.சேனனாயக என்பவரைச் சந்தித்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவரான இவர் முதன் முதலாக சமூக சமய நடுவத்தின் வண. பிதா. திஸ்ஸ பாலசூரிய அவர்களைச் சந்தித்து ஜேவிபி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புவதாக கூறினார். வண பிதா திஸ்ஸ பாலசூரிய இதுபற்றி தொலைபேசி மூலமாக லலித் அத்துலத் முதலிக்கு அறிவித்த பின்னர், K.C.சேனனாயகவும் அத்துலத்முதலியும் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. ஜேவிபி சார்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான அதிகாரம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கமனயகவினால் ஒப்பமிடப்பட்ட கடிதம் இவர் கையில் இருந்தது. கடித தலைப்பில் அல்லாமல் இருந்த இக்கடிதத்தில் காணப்படும் ஒப்பம் கமனயக அவர்களுடையதே என அரசாங்க இரசாயன ஆய்வாளர் உறுதிப்படுத்திய பின்னர் உரையாடலுக்கு அவசியமான ஆயத்தங்களை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

தொடரும்

**குறுநாவல்**

# வன்னி மண்

**வ.ந. கிரிதரன்**



"தம்பிமாரே என்ன சொல்றீங்கள்.... திரும்பிப் போவமா.... இல்லே.. தொடர்ந்துபோகத்தான் போறீங்களா" குமரனின் மாமாதான் கேட்டார். எனக்கோ கரடியின் தரிசனம் முன்னேவிட ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டது. ஏதோ வீரதீர பராக்கிரமங்கள் நிறைந்த பயணமொன்றை நாங்கள் நடத்திக் கொண்டிருப்பது போன்ற உணர்வு நெஞ்சில் நிறைந்திருந்தது. குமரன் கேட்டான்.

"என்ன ராகவா சொல்லுறாய்..... உன்ர விருப்பமென்ன போறதா... திரும்புறதா...."

"இவ்வளவு தூரம் வந்துவிட்டுத் திரும்புறதா...." நான் இழுத்தேன்

"சரி சரி பொடியனின்ற ஆசையை ஏன் கெடுப்பான்.. இவ்வளவு தூரம் வந்தாச்சு போய்ப் பார்ப்பம்....." மாமாவின் நண்பன் தான் சிரித்தபடி கூறினான். இதற்கிடையில் ஒரு 'தம்' அடித்து விட்டிருந்தான். மாமாவும் வாங்கி ஒரு 'தம்' இழுத்தார். சிரிப்பு இருவரையும் தொற்றிக் கொண்டது. நாங்கள் எங்களிற்குள் சிரித்துக் கொண்டோம் பயணம் தொடர்ந்தது.

நேரம் நண்பகலை அண்மித்துக் கொண்டிருந்தது. பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. கால்கள் சற்றே தள்ளாடத் தொடங்கின. அப்பொழுதுதான் கட்டிக் கொண்டு வந்த சாப்பாடும் கரடியோடு போனது நினைவிற்கு வந்தது. பாலைமரம் தென்பட்டபோது கல்லால் அடித்துப் பாலைப்பழங்களைப் பொறுக்கித் தின்றோம். வீரையைக் கண்டபோது வீரைப் பழங்களைப் பறித்துண்டோம், 'முதலி'ப்பழ மரங்களைக் கண்டபோது அவற்றைப் பிடுங்கிச் சுவைத்தோம். பசியை ஒருவாறு அடக்கினோம் பசி சிறிது அடங்க தாகமெடுக்கத் தொடங்கிவிட்டது. தாகத்தால நாவெல்லாம் வறண்டு விட்டது. அடங்கியிருந்த பசி சிறிது நேரத்தில் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கி விட்டது. தொடர்ந்து நடந்து கொண்டிருந்தோம் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மரங்கள் நிறைந்து கிடந்தன. உண்ணக்கூடிய பழமரங்கள் ஒன்றைக்கூடக் காணவில்லை. தாகத்தால் வறண்ட தொண்டையை நனைப்போமென்றால் ஒரு குளங் குட்டையைக் கூடக் காணவில்லை தென்பட்டவையெல்லாம் வரண்டு கிடந்தன.

குமரனின் மாமா கூறினார். "இன்னுங் கொஞ்சத்தூரம் தான்..... அங்கு போனால் தண்ணிக்குப் பஞ்சமில்லை. தொண்டையை நனைக்கலாம். அந்த இடத்திலை முதலிப் பழமரங்களும் நிறைய இருக்கு...."

எனக்கோ பசியால் கண்கள் பஞ்சடைந்தன என்பார்களே அப்படியிருந்தது. கால்கள் தளர்ந்து தள்ளாடின. வெளியில் சொன்னால் வெட்கக்கேடென்று பொறுத்தபடி நடந்து கொண்டிருந்தேன். எல்லோர் நிலையும் இது தான் எங்களிற்கிடையில் பேச்சு குறைந்தது. உற்சாகத்தை வரவழைப்பதற்காக மாமாவின் நண்பன் "மாசிலா உண்மைக் காதலே" என்று பாட முயன்று பார்த்து முதலிரண்டு அடிகளும் தோற்றுப் போனான். சரியான தயாரிப்புக்களின்றி ஒருபோதும் இப்படி வெளிக்கிடக் கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டேன். நடந்து கொண்டிருந்த குமரனின் மாமாவின் கண்கள் விரிந்தன.

"அப்பா...... ஒரு வழியாக வந்தாயிற்று....."

அவர் காட்டிய திசையைப் பார்த்தோம். சிறியதொரு நீர்நிலையிருந்ததற்கு அடையாளமாக ஒர பிரதேசம் தென்பட்டது மாமாவின் முகமும் வாடிவிட்டது.

"இப்பிடி யொரு நாளுமே நடந்ததில்லை இதிலை நீர் எந்தப் பெரிய கோடையென்றாலும் வற்றியதாகச் சரித்திரமேயில்லை."

எனக்கும் சிறிதே 'சப்' பென்றாகி விட்டது. அதிசயமானதொன்றைப் பார்க்கப் போகின்றோமென்று வந்தால் நிலைமை இப்படியாயிருக்கவேண்டும். அந்த நீர்நிலையைச் சுற்றி மரங்களில் பரண்கள் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் இரவிரவாகக் காவலிருந்து தண்ணீர் குடிக்க வரும் மிருகங்களை வேட்டையாடுவார்களாம். அப்பரணகளில் ஏறிப் பார்க்க வேண்டும் போலிருந்தது. உடல்தான் வலுவற்றிருந்தது. இதற்கிடையில் குமரனின் முயன்று பார்க்கும் மூளை வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. வரண்டிருந்த நிலத்தில் சிரட்டையொன்றிருந்தது. யாரோ வந்தவர்கள் பாவித்திருக்க வேண்டும். சிரட்டையையெடுத்துகுமரன் தரையில் அங்காங்கே கிண்டிப் பார்க்கத் தொடங்கினான். என்ன ஆச்சர்யம்..... ஓரிடத்தில் நீர் சுரந்தது. சுரந்த நீரோ மண் கலந்த நீராகயிருந்தது. இதையெல்லாம் யார் கண்டார்கள்? வரண்டிருந்த தொண்டைக்கு அதுவே அமிர்தமாகயிருந்தது. (ஆனால் அதன் பிறகு ஒரு கிழமையாக வயிற்றுக் கோளாற்றால் அவதிப்பட்டது இன்னுமொரு கதை)

சாதாரண சமயமென்றால் இப்படியொரு அசுத்தமான சிரட்டையில் அசுத்தமான நீரை

அள்ளிக் குடித்திருப்போமா? சந்தர்ப்ப சூழ்நிலைகள் வரும் போதுதான் எல்லாமே தெரிகின்றது. ஒரு சமயத்தில் நடக்க முடியாது போல் தென்படும் ஒரு விடயம் இன்னுமொரு சமயத்தில் சாதாரண விடயமாக நடந்து முடிந்து போகின்றது. ஒரு காலத்தில் என் மண்ணில் எவையெல்லாம் நடக்க முடியாத விடயங்களாயிருந்தனவோ அவையெல்லாம் இன்று சாதாரண விடயங்களாகிவிட்டன. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காட்டுப் பாதைகளால் ஓடுவது. கிளாலிக் கடலேரியைக் கடப்பது, பாம்பும் பூச்சியும் குடியிருக்கும் பங்கர்களிற்குள் குடங்கிக் கிடப்பது உருக்குலைந்த நிலையில் ஆங்காங்கு தென்படும் நாய்கள் தின்னும் மனித உடல்களைச் சாதாரணமாகப் பார்த்துச் செல்வது.. இவையெல்லாம் ஒரு காலத்தில் நடக்க முடியாத விடயங்கள் தான் இன்று அவை சாதாரண விடயங்கள்.

அந்த அசுத்த நீரைக் குடித்துவிட்டு, அருகிலிருந்த 'முதலிப்' பழங்களைச்சாப்பிட்ட பிறகுதான் சிறிது தென்பு வந்தது. அதன் பிறகு வேட்டைக்காரர்கள் கட்டி வைத்திருந்த பரண்களில் ஏறிப் பார்த்தோம். இன்னுமொரு வியப்பான விசயமென்னவென்றால் அந்த ஆழநடுக் காட்டினுள், அந்த நீர்நிலைக்கருகாக புல்வெளியொன்று விரிந்து கிடந்ததுதான். 'ஹட்டாரி' போன்ற ஆங்கிலப் படங்களில் வரும் ஆபிரிக்கப் புல் வெளிகளைப் போன்றதொரு புல்வெளி விரிந்து கிடந்தது. தொலைவில் மான்கள் சில மேய்ந்தபடியிருந்தன. இன்னும் சிறிது தொலைவிலிருந்து காட்டெருமைகள் சில குரல் கொடுத்தன. அப்படியே அந்தப் புல்வெளியில் எல்லோரும் மல்லாந்து படுத்தோம். தொலைவுவரை விரிந்திருந்த புல்வெளி, அருகில் செறிந்திருந்த காடு மேலே விரிந்து, பரந்து முடிவற்றிருந்த நீல வான், பட்சிகள் மான்கள், காட்டெருமைகள்.. இயற்கை இன்பத்தைத் தந்தது. சிறிது கண்ணயர்ந்தோம். வாழ்க்கை பற்றிய சில பக்கங்களை விளக்கிக் காட்டிய எங்களது அந்த 'நீண்ட'பயணம் ஒரு முடிவிற்கு வந்தது. அந்த முல்லைக் குமரனின் வாழ்க்கை இன்று பத்தோடு பதினொன்றாகப் போய்விட்டது. உண்டு உறங்கி வாழும் சாதாரண மனிதர்களில் ஒருவனாகிவிட்டான். அவனும் என்னைப் போல் இன்னுமொரு அன்னிய நாடொன்றில் வாழ்வதாகக் கேள்வி..... அவனிடமிருந்த கலையார்வத்திற்கும் திறமைக்கும் பிரகாசித்திருக்க வேண்டியவன். ஒருவேளை இனித்தான் பிரகாசிக்கப் போகின்றானோ? இப்படித்தான் எத்தனையோ ஆற்றலுள்ளவர்கள் தங்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்த வளர்த்தெடுக்க முடியாதவாறு சூழல்கள் அவர்களை இழுத்துக் கொண்டோடி விடுகின்றன. ஒரு சிலர்தான் சூழல்களை மீறிச் சாதித்து விடுகின்றார்கள் பாரதியைப் போல! ஆனால் ஒரு சிலரைச் சூழல்கள் மாற்றியும் விடுகின்றன. ஒருவேளை சுமணதாஸ பாசையும் சூழல்கள் மாற்றித்தான் விட்டிருக்குமோ.. அல்லது சூழலின் விளைவாகத் தண்டிக்கப்பட்ட அப்பாவி மக்கட் கூட்டத்தில் அவரும் ஒருவரா... . ஏன் மனோரஞ்சிதத்தைக் கூட இன்று புகுந்த நாட்டுச் சூழல்கள் ஆட்டிப் படைக்கத்தான் தொடங்கி விட்டிருக்கின்றன. ஆடிக் கொண்டிருக்கின்றாள். இதிலிருந்து விடுபடுவது அவளது நெஞ்சின் உறுதியில் தானிருக்கின்றது.

(தொடரும்)

# ஆஸ்திரியா, பல்கேரியா ஊடாக நுழையும் அகதிகள்

பல்கேரியாவில் இலங்கை அகதிகள் உட்பட பல்வேறு நாட்டு அகதிகள் வருவதால் குற்றச் செயல்கள் அதிகரிப்பதாக பல்கேரிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. மேற்கு நாடுகளுக்கு செல்வதற்குரிய நுழைவாயிலாக பல்கேரியாவைப் பயன்படுத்துவதாகவும் இவ்வாறு வந்த பலர் போதிய பணம், பத்திரங்கள் இல்லாததால் தொடர்ந்தும் அங்கேயே நிற்பதாகவும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு மொத்தம் நாற்பதாயிரம் வெளிநாட்டார் நிற்பதாகவும் இவர்களில் 11 ஆயிரம் பேர் சட்டவிரோதமாக தங்கியுள்ளதாகவும் இந்த அகதிகளில் பலர் இலங்கை, நைஜீரியா, ஈரான், லெபனான், சிரியா, லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் மேலும் கூறினர்.

கொலை, கற்பழிப்பு, களவு உட்பட இந்த வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குள் 456 குற்றச் செயல்கள் நடைபெற்றதாகவும் பல்கேரியாவின் இலகுவான குடிவரவு விதிகளை சாதகமாக்கி இவர்கள் உள்ளே நுழைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈரான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த குற்றக் கும்பல்கள் ஆயிரக் கணக்கான அகதிகளை அவுஸ்திரியா ஊடாகக் கடத்துவதாக ஆஸ்திரிய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஜேர்மனி, ஸ்பெயில், நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு செல்வதற்கு நுழைவிடமாக தங்கள் நாட்டைப் பயன்படுத்துவதாகவும் இவர்களில் பலர் கைது செய்யப்பட்டதாகவும் ஆஸ்திரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களின் வருகை காரணமாக ஆஸ்திரியாவின் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் சென்ற வருடம் மட்டும் 12 ஆயிரம் குடியேற்றக்காரர் கைது செய்யப் பட்டதாகவும் ஏஜண்டுகளில் 53 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இலங்கை, இந்தியா, பங்களா தேஷ் ஆகிய நாடுகளில் இருந்து வருவோர் துருக்கியூடாக வந்து சேர்கின்றனர்.

இவ்வாறு சென்றவர்களில் ஆறு சிங்களவர்கள் இறந்த நிலையில் பெருந்தெரு ஒன்றில் காணப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பின்போடப்பட்டது

வடக்கு கிழக்கில் நடத்தப்படவிருந்த தேர்தல்கள் பின்போடப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகள் தங்களுக்கு வேட்பாளர் களை நியமிக்க போதிய கால அவகாசம் இல்லை என்று முறையிட்டதை அடுத்து இந்த தேர்தல்கள் இரண்டாவது தடவையாக பின்போடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

சென்ற வாரம் தான் தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரியிருந்தார். புதிய நியமனத் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

# கட்டுக்களை கடக்கும் உலக அகதிகள் பிரச்சனை!

உலகின் பல்வேறு நாடுகளில் இன்று எழுந்துள்ள உள்நாட்டு யுத்தங்களும், இன மதக் கலவரங்களும், அதிகாரப்போட்டிகளும் இன்று உலகின் முக்கிய பிரச்சனையாக அகதிகள் பிரச்சனைக்கு உருவகம் கொடுத்துள்ளது. சமீபத்திய ஐக்கிய நாடுகள்சபை அறிக்கை ஒன்று 'உலகின் அகதிகள் பிரச்சனை கட்டுப்பாடுகள் அனைத்தையும் கடந்துவிட்டது' எனக்கூறுகிறது. இந்த அறிக்கையின்படி இன்று உலகில் உள்ள மக்கள்தொகையில் ஒவ்வொரு 130 பேரில் ஒருவர் தமது சொந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதியாகவோ அல்லது இடம் பெயர்ந்தவராகவோ மாற்றப்படுகிறார். இப்படி மாற்றப்பட்டவர்களில் 19 மில்லியன் பேர் வெளிநாடுகளுக்கு அகதிகளாக வெளியேறியுள்ளார்கள். 24 மில்லியன் பேர் தமது சொந்த மண்ணிலேயே அனைத்தையும் இழந்து அகதிகளாகி சொந்த நாட்டு எல்லைகளுக்குள்ளேயே இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இந்த அகதிகள் 'இனச் சுத்திகரிப்பு (ETHINIC CLEANSING) மற்றும் பல அடக்குமுறைக் கொடுமைகளால் உயிர் பாதுகாப்பற்ற நிலமைஏற்பட்டவர்கள்.

1992ம் ஆண்டு அகதிகள் குறித்த அறிக்கையின்படி மத்திய அமெரிக்காவை பொறுத்தவரையில் கௌதமாலாவில் 22 இலட்சத்து 22 ஆயிரம் அகதிகளும் மெக்சிக்கோவில் 3 இலட்சத்து 61 ஆயிரம் அகதிகளும் உள்ளனர். ஆபிரிக்காவின் தெற்குப் பகுதியைப்பொறுத்தவரை மாலாவியில் 1 கோடியே 5 இலட்சத்து 80 ஆயிரத்து ஐநூறு அகதிகள் உள்ளனர். கிட்டத்தட்ட இவர்கள் அனைவருமே மொஸாம்பிக்கில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களாகும். அடுத்தது ஆபிரிக்காவின் கொம்புப்பகுதி என்றழைக்கப்படும் பகுதி. இங்கு எதியோப்பியாவில் 4 இலட்சத்து 31 ஆயிரத்து எண்ணூறு அகதிகள் உள்ளனர். இவர்களில் 4 இலட்சத்து ஆறுயிரம் பேர் சோமாலியாவைச் சேர்ந்தவர்கள் கென்யாவிலுள்ள அகதிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து ஆயித்துத்தொள்ளாயிரம் இதில் இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் பேர் சோமாலியாவிலிருந்து வந்தவர்கள். மத்திய ஆபிரிக்காவைப்பொறுத்தவரை தான்சானியாவில் 2 இலட்சத்து 92 ஆயிரத்து நூறு அகதிகளுள்ளனர். இதில் 1 இலட்சத்து 49 ஆயிரத்து ஐநூறு பேர் புறுண்டியில் இருந்து வந்தவர்கள். ஆனால் இந்த எண்ணிக்கை சமீபத்தில் புறுண்டியில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பைத்தொடர்ந்து மேலும் பெருமளவாக அதிகரித்திருக்கிறது. செயர் நாட்டில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 92 ஆயிரத்து நூறு இதில் அங்கோலாவில் தொடர்ந்து மூர்க்கமடைந்து செல்லும் உள்நாட்டு யுத்தத்தினால் அகதிகளான 1 இலட்சத்து 98 ஆயிரத்து இருநூறு பேர் அடக்கம். ஐரோப்பாவை பொறுத்தவரையில் அகதிகள் தொகையில் முதலிடம் வகிப்பது குரேஷியா. இங்குள்ள அகதிகள் எண்ணிக்கை 6 இலட்சத்து 48 ஆயிரம்பேர். கிட்டத்தட்ட இவர்கள் அனைவருமே முன்னாள் யூகோஸ்லாவியாவை சேர்ந்தவர்களே பிரான்சில் 1 இலட்சத்து 82 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இதில் 46ஆயிரத்து 500 பேர் துருக்கியை சேர்ந்தவர்கள். ஜேர்மனியில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை 8 இலட்சத்து 27 ஆயிரத்து முந்நூறுபேர் இதில் 2 இலட்சத்து 59 ஆயிரம் பேர் முன்னாள் யூகோஸ்லாவியாவைச்சேர்ந்தவர்கள். பிரிட்டனில் அகதிகளாக உள்ளவர்கள். 1 இலட்சம் பேர் இதில் 5 ஆயிரத்து எழுநூறுபேர் முன்னாள் யூகோஸ்லாவியாவைச் சேர்ந்தவர்கள்.

ஆசியாவில், சீனாவில் 2 இலட்சத்து 88 ஆயிரத்து நானூறு அகதிகள் உள்ளனர். இதில் 2 இலட்சத்து 85 ஆயிரம் பேர் வியட்நாமைச் சேர்ந்தவர்கள். ஈரானில் 41 இலட்சத்து 50 ஆயிரத்து எழுநூறு அகதிகள் உள்ளனர். இவர்களில் 28 இலட்சம் பேர் ஆப்கானிஸ்தானையும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஈராக்கையும் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானில் 16 இலட்சத்து 27 ஆயிரத்து இருநூறுபேர் அகதிகளாக உள்ளனர். இதில் 16 இலட்சத்து 27 ஆயிரம்பேர் ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர்கள். அசர்பைஜானில் 2 இலட்சத்து 46 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இவர்களில் 1 இலட்சத்து 95 ஆயிரம்பேர் ஆர்மீனியாவை சேர்ந்தவர்கள்.

அகதிகள் தொடர்பான இந்த அறிக்கையில் இதுவரை அகதிகளாக வெளிநாடுகளிலிருந்து தமது சொந்த நாடுகளுக்கு 1992 ம் ஆண்டு திரும்பியவர்கள் பற்றிய விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1992 ம் ஆண்டில் ஆப்கான் அகதிகளில் 15 இலட்சத்து 16 ஆயிரம்பேர் தமது சொந்த நாடாகிய ஆப்கானிஸ்தானுக்கு மீளவந்துள்ளனர். அதுபோல 1992ல் கம்போடியாவைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 37 ஆயிரம் பேரும் வியட்நாமைச் சேர்ந்த 17 ஆயிரம் பேரும் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பியுள்ளனர். அதுபோல ஆபிரிக்காவில் மொஸாம்பிக்குக்கு அங்கு நடந்த சமாதான ஒப்பந்தத்தை தொடர்ந்து 1 இலட்சத்து 76 ஆயிரம்பேர் திரும்பியுள்ளனர்..

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

1992ம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக அகதிகள் எண்ணிக்கை 17 மில்லியன் ஆக இருந்தது. 1992ம் ஆண்டின் முடிவிலோ இந்த எண்ணிக்கை 18.9 மில்லியனுக அதிகரித்தது. இத்தனைக்கும் 1992ம் ஆண்டில் 24 இலட்சத்து 30 ஆயிரம் அகதிகள் தமது சொந்த நாடுகளிற்கு திரும்பியும் அகதிகளின் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. 1992ம் ஆண்டில் ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவு ஆப்கான் அகதிகள் தமது நாட்டுக்கு திரும்பியது குறிப்பிடத்தக்கது.

அதிகரிக்கும் அகதிகள் பிரச்சனை இன்று உலகின் தகிக்கும் பிரச்சனை ஆகியுள்ளது. இப்பிரச்சினையை சமாளிப்பதற்கு உலகம் இன்று திணறுகிறது. இன்று இனப்பிரச்சனை, உள்நாட்டு யுத்தம், அடக்குமுறை என்ற காரணங்களால் பெருகும் அகதிகள் பிரச்சனை கட்டுக்களை மீறுவது மாத்திரமல்ல வறிய நாடுகள், செல்வந்த நாடுகள் என்ற பாகுபாடில்லாமல் உலகின் பிரச்சனையாகிறது.

இன்றைய உலகின் அகதிகள் பிரச்சனையை மனிதகுலத்தின் பெரும் காயம் என்று வர்ணிக்கும் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் சடக்கோ ஒகற்ரு இந்தக் காயத்தை ஆற்றுவதற்கான அவசரமான அவசியமான உதவிகளைச் செய்ய உலக அரசாங்கங்களும், உலக மனிதநேய அமைப்புக்களும் உடனடியாக முன்வரவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்ல அகதிகளது இன்றைய துன்பநிலைகள் பற்றிய உண்மைவெளியீடுகள் உலகை உலுக்கும் எனவும் கூறியுள்ளார். அகதிகளின் உடனடிப் பிரச்சனையை கவனிப்பது மாத்திரமல்ல அகதிகள் உருவாவதற்குக் காரணமான உயிர் அபாய சூழ்நிலைகளை அழிப்பதன் மூலமே உண்மையாக அகதிகள் பிரச்சனையை தீர்க்கமுடியும் என்பது அவரது கருத்தாகும். இக்கருத்தினை உலக அகதிகளுக்கான ஆய்வுவட்டத்தில் தான் நிகழ்த்திய சிறப்புரையின்போது ஒகற்ரு குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்ல அகதிகள் பிரச்சனையை ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனமான UNHCR அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை கையாளும் என்ற நினைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும். ஏனெனில் பெருகிவரும் அகதிகள் தொகைக்கு முன்னுல் இந்நிறுவனங்கள் மிகச்சிறியவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

UNHCR இன் சமீபத்திய ஆய்வின்படி முன்னர் எப்போதுமே இப்போதுபோல பெருமளவு மக்கள் பாதுகாப்பையும், புகலிடத்தையும் கோரி நின்றதில்லை என தெரியவந்துள்ளது. தனி மனித உயிர்களுக்கான பாதுகாப்பின்மை தொடரும் அதே வேளையில் இனமுரண்பாடுகளின் வன்முறை வெளிப்பாடுகளும் வாழ்வியல் ஒழுங்குமுறைகளின் உடைவுகளும் அகதிகள் பெருக்கத்துக்கும், இடம்பெயர்தலுக்கும் காரணங் களாகின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக அகதிகளின் எண்ணிக்கை கற்பனைப் புலன்களுக்கு அப்பால்பட்ட நிலையில் அதிகரிக்கின்றன. 20 வருடங்களுக்கு முன்னர் முரண்பாடுகளும், அடக்குமுறைகளும் அரசியல் தஞ்சம் கோரும்நிலைக்கு உலகில் 2.5 மில்லியன் அகதிகளை தள்ளின. பத்து வருடங்களுக்கு முன்னர் இந்த எண்ணிக்கை 2 மில்லியன் அகதிகள் நாடு திரும்பியும் கூட 17 மில்லியனிலிருந்து 18.9 மில்லியனுகியது. இந்த வருடம் அகதிகளின் எண்ணிக்கையில் மேலும் 8 இலட்சம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பில் பெரும்பங்குக்கான காரணத்தை வகிப்பது புருண்டியில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பும் அதைத் தொடர்ந்த பெருமளவு அகதிகள் வெளியேற்றமும்.

ஆனுல் உலக அகதிகள் தொகையின் உண்மையான எண்ணிக்கை இதைவிட பலமடங்கு அதிகம். இங்கே அகதிகள் எனக் கணக்கிடப்பட்டவர்கள் அகதிகளாக தங்கள் நாடுகளிலிருந்து வெளியேறியவர்கள். அப்படியானுல் தங்கள் வீடுகளிலிருந்து, கிராமங்களிலிருந்து விரட்டப்பட்டு தமது தேசத்தின் எல்லைகளைத் தாண்டாமல் தமது நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழ்பவர்களைக் கணக்கிட்டால் இந்த எண்ணிக்கை இன்னும் பல மடங்கு அதிகரிக்கும். உதாரணமாக முன்னுள் யூகோஸ்லாவியாவில், முன்னுள் சோவியத்யூனியனின் தற்போதைய குடியரசுகளில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால் அது பலமடங்காகும்.


அகதிகளின் எண்ணிக்கை பெருகுவதால் அகதிகள் மீதான வெறுப்பலை அதிகரிப்பதுடன் உலகநாடுகளிடையே அகதிகளுக்கு உதவுகின்ற, புகலிடம் அளிக்கின்ற விருப்புக்கள் குறைந்து செல்வதாகவும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அகதிகள் வருவதை தடுக்க மேற்கின் செல்வந்த நாடுகள் மேலும் மேலும் தடைகளை போட்டு மனிதத்தை இழிவுபடுத்துகையில் தமது சொந்தமக்களையே போஷிக்க முடியாத வறியநாடுகள் பெருமளவு அகதிகளைப் பராமரிக்கின்றது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக ஈரானில் 4.1 மில்லியன் ஈராக் மற்றும் ஆப்கான் அகதிகள் உள்ளனர். பாகிஸ்தானில் 1.6 மில்லியன் ஆப்கான் அகதிகளும் உள்ளனர். மாலாவியில் 8.5 மில்லியன் அகதிகள் உள்ளனர். இவை உலக அரங்கில் ஏழைநாடுகளே. மேற்கு ஐரோப்பாவில் ஜேர்மனி, அவுஸ்திரியா மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளின் அகதிகள் பணி பாதிக்கப்பட்டது. ஆனுல் இந்நாடுகளும் இப்போது அகதிகளுக்கு கதவுகளை மூடுகின்றன. ஹெய்த்தி அகதிகளுக்கு எதிராக அமெரிக்காவும், பிரித்தானிய மற்றும் ஹொங்கொங் அரசுகள் வியட்நாம் அகதிகளுக்கெதிராகவும் கட்டாயமாக நாடு கடத்தும் செயல்களை முடுக்கியுள்ளன. இத்தகைய முறைகள UNCHRஆல் கடுமையாக கண்டிக்கப்படுகின்றன.

மனிதத்துக்கான பாதுகாப்பு... மனித உயிர்களுக்கான பாதுகாப்பு.... மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு.. மனித உடைமைகளுக்கான பாதுகாப்பு.. .. இவற்றிற்கு உத்தரவாதமில்லையேல் உலக அகதிகள் பிரச்சனை தீராது மாருக எண்ணிக்கை பெருகும்.

**சாமக்கதைகள்**

# ஓவர்ரைம்



**கே. எல். நேசமித்திரன்**

தேவதையின் முழுநிலா முகம்மீது ஓர் சந்தேகக் கீற்று. திக்கித்தேன். மூடிக் காத்துவருகின்ற ரகஸியமேதும் தப்பிவிட்டதோ? வாய் கொப்பளித்து, மதுமணம் போக்க, ஓடிக்கோலோன் துளிகளில் சிலவற்றை உடலில் தெளித்துவிட்டு அவள்முன் பசுப்போல் பிரசன்னமானேன். •

மூக்குத்தியைக் காணவில்லை.

"என் இனியவளே! உன் எழிலிற்கு எழில் சேர்க்கும் மூக்குத்தியைத் தொலைத்து விட்டாயா?" எனக் கேட்டேன். பதில் தர விருப்பமின்றி உம்மென முகத்தை வைத்துக்கொண்டு நின்ருள். பின் என் நெஞ்சொடு கிளர்ச்சித்தாள்....

"இனியவரே! என் வடிவிற் குற்றம் கண்டீரோ?"

"வடிவை விடும். வடிவற்ற பெண்களைக் கிணற்றில் தூக்கிப் போடுவதா?"

"முன்பெல்லாம் வேலை முடிந்து எட்டு மணிக்கே வீடு திரும்பி விடுவீர். இப்போதோ இரவு பன்னிரெண்டு மணியாகின்றது. முத்தம் தரும் பண்பையும் மறந்து போய்விட்டீர் கட்டியணைக்காமல் முதுகு காட்டி வேறு தூங்குகின்றீர்.. இது சரியோ?"

"ஏன் இப்படிச் சுற்றிவளைத்துப் பேசுகின்றீர்? நான் உமக்குத் துரோகமிழைத்துவிட்டேன் என நினைக்கின்றீரோ?

"நேற்று ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது.." எனும் போதே அவளது நீள் விழிகள் கலங்கின.

"அதற்கென்ன! தொலைபேசி அழைப்புகள் வருவது இயற்கை தானே?"

"அது ஒரு பெண் குரல்."

"உமக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?"

"உங்களைக் கேட்ட அந்தக் குரல், உடனடியாகவே தொடர்பைத் துண்டித்துவிட்டது."

"அது ரோங் நம்பராக இருக்கலாம்"

"இது முதல் தடவையல்ல இரண்டு வாரங்களாக அவள் தொடர்ந்து அடித்துக்கொண்டு இருப்பதால் ரோங் நம்பராக இருக்கமுடியாது..... அத்தோடு உங்களது பெயரையுமல்லவா உச்சரிக்கின்ருள்...."

"எனது பெயரில் அவளுக்கு யாரையோ தெரிந்திருக்கவேண்டும். அவள் எவனையோ தேடுகின்ருள். என்னைத் தேடுகின்ருள் என்று மட்டும் அர்த்தம் கற்பித்து விடாதே. அந்த அபலைக்காக நான் இரங்குகின்றேன்...."

"எனக்காகவும் இரங்க உங்களது மனது சம்மதிக்காதோ?"

"உனக்காக நான் ஏன் இரங்கவேண்டும்? உனக்கு நான் என்ன குறை வைத்தேன்? போன் நம்பரை மாற்றிவிட்டால் உனது மனக் கலக்கம் தீர்ந்துபோய்விடும். இப்போது எனக்குக் களைப்பாக உள்ளது. தூங்குவோம்..."

"மேசையிலே சாப்பாடு தயாராகவுள்ளது."

"எனக்குப் பசிக்கவில்லை..."

"ஒவ்வொரு காலையிலும் போட்டசாப்பாடுமேசையில் அப்படியே இருக்கக் காண்கின்றேன். உண்மையைச் சொல்லுங்கள், நீங்கள் பசி மறந்தது ஏனோ?"

"நான் பசியை மறக்கவில்லை... விரதம் பிடிக்கின்றேன்...."

"விரதமா? எந்தக் கோவிலுக்கு?"

"நல்லூர்க் கந்தசுவாமியார் கோவிலுக்கு..."

"இந்து மரபின்படி விரதம் பிடிப்போர் சாப்பிடலாம்தானே!"

"உண்மைதான். நானே விரதம் பிடிக்கும் போது ஒருவேளைதான் சாப்பிடுவதென நேர்த்திக்கடன் செய்துள்ளேன்..

(உலக இலக்கியத்தில் EROTICA எனப்படும் செக்ஸ் சார்ந்த எழுத்துகளிற்கும் ஒரு தனியிடம் உண்டு. HENRY Miller இன் சிநேகிதியான ANAIS NIN எழுதிய EROTICA கதைகள் பிமிப்பூட்டுவன, துணிச்சலான எத்தனங்களுமாகும். தமிழில் எஸ்.பொ, ரகுநாதன், தி.ஜானகிராமன் போன்றோர் செக்ஸ் விஷயங்களை இலக்கியமாக்கியவர்கள். ஜோர்ஜ் இ.குருஷ்சேவ் எழுதிய "கொலைபேசி" புகலிடத்தில் பரபரப்பையூட்டியதும், பல விமர்சனங்களைக் கண்டதுமான ஓர் தரமான சிறுகதை. "தாயகம்" பக்கங்களில் ஏற்கனவே பல சிறுகதைகளை எழுதிய கே.எல்.நேசமித்திரன் "சாமக்கதைகள்" என்ற மகுடத்தின் கீழ் அவ்வப்போது சில சிறுகதைகளை வழங்குவதாக அறிவித்துள்ளார். "உலகை இருள் கவ்விய பின் ஏற்படும் குடும்ப உறவுகள் மீதான தரிசனமே இந்த முயற்சி" என அவர் குறிப்பிட்டுள்ளார்)

மதியவேளையில், மரக்கறி உணவகமொன்றில் புசிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளேன்...."

"இதை எனக்கு ஏன் ஒழித்தீர்? நீர் பிந்தி வருவதன் காரணம் எதுவோ?"

"நான் உமக்கு எதனையுமே ஒழிக்க நினைத்ததில்லே. பக்திப் பெருக்கில் மதிமயங்கி மறந்துவிட்டேன். நான் வேலேசெய்யும் உணவகத்தில் தற்போது ஓவர்ரைம் செய்து வருவதாலேயே பிந்தி வருகின்றேன்."

இருவரும் கட்டிலுக்குப் போனேம்.

"ஏன் உமது முதுகை எனக்குக் காட்டியபடி படுக்கின்றீர்? முன்பு போல என்னைக் கட்டித்தழுவி, எனக்கு இன்பம் தந்தபின் தூங்குவதில் உமக்கு விருப்பமில்லேயோ?"

"விரத காலங்களிலே, பெண்ணின் பத்திற்கு ஓய்வு கொடுத்தால் விரதப்பயன் தித்திக்குமென்பர்...."

"உங்களது விரதம் எப்போது முடியுமாம்?"

"இன்னும் இரண்டு வாரங்கள் செல்லும். எனக்கோ வருடம் பூராகவும் விரதம் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரு ஆசை....."

"இல்லற வாழ்வை விடுத்துத் துறவு பூணப் போகின்றீரோ?" என்றபடி அவள் தூங்கிப் போய்விட்டாள். உஷ் உஷ் என்றும், அவளது உடலே அசைத்தும் அவள் கும்பகர்ணியாகி விட்டாள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின், பூனைபோல எழுந்து சென்று, ஜாக்கெட்டுக்குள் ஒழித்து வைத்திருந்த குட்டிப் போத்தல் விஸ்கியை எடுத்துக் குடித்துவிட்டு யார் போன் பண்ணியிருப்பாள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

இரண்டு வாரமாகச் சுகந்தியைச் சந்தித்து வருகின்றேன் அவளுக்கு எனது போன் நம்பரும் தெரியாது. அப்படியாயின், வேறு யாராக இருக்கலாம்........ஒரு வேளை மலர்! அவளுக்கும் நான் நம்பர் கொடுக்கவில்லேயே...... ராதிகா....!

போன் அடித்தது. கலவரமடைந்தேன். எனது இனியவள் எழுந்துவிடக் கூடாதெனப் பிராத்தித்து, வரவேற் பறைக் கதவைச் சாத்திவிட்டு போனை எடுத்தேன்.

"யார் பேசுகிறீர்?" –கேட்டேன்

"யாரோ? நான் மைதிலி......."

"மைதிலி, மெல்லமாப் பேசும்....."

"எனக்கு உடனடியா என்ரை தாலி வேணும்... உம்மிலே நம்பிக்கை வைச்சுத்தான், பிணைக்குக் குடுக்க வேணுமெண்டு கேட்டோணை தந்தனுன். தாலியோடை போனேணை என்னை மறந்திட்டீர். கனடாவுக்கு விடுமுறையிலே போனவர் இன்னும் ரெண்டு கிழமையிலே வந்திடுவார். தாலியைத்தான் கொண்டு போனீர். பிறகேன் என்னைத் தனிச்சுப் போகவிட்டனீர். உம்மை நம்பினதாலே விடுமுறையெல்லாம் பாழாப் போயிட்டுது.

நான் மைதிலியிடம் தாலியைப் பிணைக்குக் கொடுக்கக் கேட்டது எனது நிதிப் பிரச்சனைக்காகவல்ல. எனது மனைவியல்லாத சுகந்தியின் நிதிப்பிரச்சனைக்காக. தனது பிரச்சனை என்னுல் தீர்ந்து போனதால் சுகந்தி என்னை மாலேவேளைகளில் தனது வீட்டுக்கு அழைத்து நன்றிக்கடன் தீர்த்தாள். சுகந்தியின் உபசரிப்பால் நான் மைதிலியையும், அவளது தாலியையும் துண்டாகவே மறந்து போனேன். இப்போதுதான் எல்லாம் உறைத்தது. மைதிலி தாலியைக் கழட்டித் தந்தபோது எனது போன் நம்பர் பெற்றுக் கொண்ட விஷயம்! எனது மனைவி இரவு ஒரு மணிக்குப் பிறகு குறட்டை விடுவாள், அப்போதே அடி என அட்வைஸ் வேறு கொடுத்தபோதும், அவளோ, இவள் குறட்டை விடாத நேரத்திலல்லவா அடித்துவிட்டாள். என்ன இருந்தாலும் நல்லவள். என்னைக் காட்டிக் கொடுக்கவில்லே.

"மைதிலி குறை நினைக்காதையும். உம்மடை அவர் கனடாவில் இருந்து வாறதுக்குள்ளை எப்படியும் தாலியைத் தந்திடுவன்."

"ரெண்டு கிழமையுக்கை வந்திடுவார். இங்கை வந்து என்னேடை இரும். எனக்குத் தனிய இருக்கப் பயமாக் கிடக்குது."

"நான் உமக்கு முன்னமே சொன்னனுன். இரவு வீட்டை தங்காட்டி விவாகரத்திலேதான் வந்து முடியுமெண்டு...."

"நாளைக்கெண்டாலும் இங்கை வந்திட்டுப் போம்"

"ஓம், மை டியர் மைதிலி...."

"ஏன் இவ்வளவு நாளும் எனக்கு அடிக்காம விட்டனீர்?"

"நான் ஓவர்ரைம் செய்யிறனுன். அதுதான். தயவு செய்து இனிமேல் பட்டு எனக்கு போன் பண்ணுறதையும். கும்பிட்டுக் கேட்கிறன். உமக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்."

தொடர்பு துண்டிக்கப்பட்டது. கட்டிலுக்குப் போனுல், அங்கே எனது இனியவள் எழும்பிக் கொண்டிருந்தாள்.

"யாரோடு கதைத்துக் கொண்டிருந்தீர்?"

"முதலாளி போன் பண்ணினுர். இன்னும் இரண்டு மாதங்களுக்கு நான் ஓவர்ரைம் செய்யவேண்டும் எனக் கட்டளையிட்டார்...."

"எதையாவது செய்து துலேயும். எனது உதட்டில் ஒரேயொரு முத்தம் மட்டும் தாரும்" எனக் கெஞ்சினுள்.

கொடுத்தேன் கொடுத்தபின் தூங்குகையில் சுகந்திக்காக மைதிலியிடம் வாங்கிக் கொடுத்த தாலி என் முன் கருநாகம் போல் படம்பிடித்து வெருட்டியது.


## இலங்கைத் தூதுவராலயம் முன்பாக ஆர்ப்பாட்டம்

இலங்கை அரசே!

★கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் கண்மூடித்தனமாக தமிழர்கள் கைது செய்யப்படுவதை நிறுத்து!

★கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலே செய்!

★ இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையை 'பயங்கரவாதப் பிரச்சனை' என்று கூருதே!

★தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்து!

★ தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து!

10.12.1993 வெள்ளிக்கிழமை ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதுவரகம் முன்பாகநடைபெறும்இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள ஒட்டாவா வர விரும்புபவர்களுக்கு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் விபரங்களுக்கு

615 0028/269 8302

இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு

# ஈழம் ஒரு தொடர்கதை

7

## சின்னத்தம்பி வேலாயுதம்

1971ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள் வாசுதேவ நாணயக்கார, என்.சண்முகதாசன் ஆகிய இரு கட்சித்தலைவர்கள் என்பதை முன்பும் குறிப்பிட்டேன். வாசுதேவ நாணயக்காரவை விடுதலை செய்ய எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடாது அரசுடன் இணைந்திருந்த ல.ச.ச. கட்சியினர் கடும் விமர்சனத்துக்குள்ளானதுடன் 1974ல் வாசுதேவ நாணயக்கார நவலங்கா சமசமாஜக்கட்சி எனும் புதிய கட்சியை ஸ்தாபித்தார். இந்தக்கட்சி தமிழர் பிரச்சனையில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் போன்ற விடயங்களில் பகிரங்கமாகத் தனது கருத்தை தெரிவித்து வருகிறது.

என்.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டது. சண்முகதாசனைச் சிறையிலிருந்து விடுவித்தபோது எஞ்சியவர்கள் சிறையில் காலங் கழிக்க வேண்டியிருந்ததனால் எழுந்த முரண்பாடுகள் உடனடிக் காரணங்களாகிக் கட்சி உடைந்து 1966லிருந்து கட்டியெழுப்பிய செங்கொடிச் சங்கம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பனவும் பிளவு பட்டன. ரொசாரியோ தலைமையிலான செங்கொடிச்சங்கம் சண்முகதாசனை விட்டுப் பிரிந்தது. வடபகுதியில் வீ.ஏ. கந்தசாமி தலைமையிலான அணி பிரிந்து சென்றது. மீண்டும் 1976 ல் மூன்றுலகக் கோட்பாடு, சீனத்தத்துவ முரண்பாடுகள் காரணமாக கம்யூனிஸ்ட் (பீகிங்) கட்சியில் உடைவேற்பட்டு சுப்பிரமணியம், செந்தில்வேல் தலைமையில் கம்யூனிஸ்ட் (இடது) தோற்றம் பெற்றது.

1971ம் ஆண்டு சேகுவோராப் புரட்சியின் தோல்வியுடன் தடைசெய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியினர் 1977ல் ஜே.ஆர் பதவிக்கு வந்ததும் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு மீண்டும் மக்களுக்குள் வேலைசெய்ய ஆரம்பித்தனர். கட்சி மீண்டும் வளர்ச்சி கண்டபோது லயனல் போபகே தலைமையிலான அணி கட்சியை விட்டுப் பிரிந்தது. இதன்பின் 1989ல் சேகுவோராப் புரட்சி மீண்டும் அடக்கப்பட்டுக் கட்சி தடைசெய்யப்பட்டது. இன்னும் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் தாக்கங்கள் நீடித்து வருகின்றன.

விஜே குமாரணதுங்கவின் மக்கள் கட்சி தன்னைக் கம்யூனிஸ்ட் கட்சியென அழைத்துக் கொள்ளாத போதும் தெற்கிலே அது பலம் பொருந்திய மக்கள் கட்சியாக பரிணமித்தது. 1989ல் விஜேகுமாரணதுங்க சதிகாரரால் படுகொலை செய்யப்பட்டதுடன் அக்கட்சியும் சீர் குலைந்தது. இன்று பலம் மிக்க மார்க்ஸீய-லெனினிஸக் கட்சிகள் என எதுவும் இலங்கையில் இல்லை. தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியும்(ஜே.வி.பி) வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இனரீதியான ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். 1935 லிருந்து இன்றைய கால கட்டம் வரையான இடதுசாரிகள் வரலாற்றை இங்கு தொகுத்துக் கூறியபோதும் இன்னமும் பல சிறு சிறு மார்க்ஸிசக் கட்சிகள், குழுக்கள் அவ்வப்போது தோன்றி மறைந்தன. அவைகள் பற்றிய ஆண்டுகள் கட்சிகளின் அல்லது குழுக்களின் பெயர்கள் நினைவில் இல்லாத காரணத்தால் குறிப்பிடமுடியவில்லை.

இடதுசாரிகள் மட்டும் தான் இப்படித் தவறிழைத்தார்கள் என்றும் வாசகர்கள் கருதலாம். அப்படியல்ல, முதலாளித்துவ அல்லது வலதுசாரி சிங்கள தமிழ் கட்சிகளும் இவ்விதமே காலத்துக்கு காலம் பிளவுண்டு பல கட்சிகளான வரலாறும் உண்டு. தமிழர்கள் இளைஞர் காங்கிரஸில் தொடங்கி (சமகாலத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ்) தமிழ் காங்கிரஸ், தமிழரசு சுயாட்சிக்கழகம், அடங்காத் தமிழர் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈழவிடுதலை முன்னணி (எஸ்.ஏ.தர்மலிங்கம்) இதன் தொடர்ச்சியாகப் பல்கிப் பெருகிய இயக்கங்கள் என தமிழர் நலன் பேணப் பிளவு பட்டார்கள். இடதுசாரிகள் சர்வதேச ரீதியாக நடைபெற்ற தத்துவார்த்தப் போராட்டங்களால் பிரிந்து கொண்டார்கள்.

இப்போது நாம் தமிழ் இடதுசாரிகள் பற்றிப் பார்ப்போம். தெற்கிலே எப்படி பிலிப் குணவர்த்தனவை இடதுசாரிகளின் தந்தை எனவும் அவரையும் என்.எம். பெரேராவையும் இரட்டையர்கள் என அழைத்தார்களோ அவ்விதமே வைத்திலிங்கம், பொன்.கந்தையா இருவரையும் தமிழர்களுள் அவ்வாறு அழைத்துக்கொள்ளலாம். இந்த இருவரும் பிரிட்டிஸாரால் ஆளப்பட்ட இலங்கை அரசின் புலமைப் பரிசில் (ஸ்கொலர்ஷிப்) பெற்று லண்டன் சென்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்று வந்தவர்களாவர். இரண்டாவது உலக யுத்தத்துக்கு பல வருடங்களுக்கு முன்பே ஹிட்லர் எதிர்ப்பும் பாஸிஸ எதிர்ப்பும் சர்வதேச சக்தியாக வளர்ந்து வந்த நேரம் லண்டன் சர்வ கலாசாலைகளிலும் இதன் தாக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த இயக்கத்துக்குத் தலைமை கொடுத்த கம்யூனிஸ்ட்டுகள்பால் லண்டனில் கல்விகற்ற மாணவர்களும் ஈர்க்கப்பட்டனர். இவ்விதமாகவே வைத்திலிங்கம், பொன் கந்தையா, பீட்டர் கெனமன் ஆகியோர் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர்.

இவர்கள் தமது பட்டப்படிப்பை முடித்து இலங்கை திரும்பிக் கொழும்பில் அமைந்திருந்த பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்த போது வடபகுதியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற பல மாணவர்களை இடதுசாரிகளாக மாற்றினார்கள். இக் காலகட்டத்தில் தமிழிலே இடதுசாரிப் புத்தகங்கள் மொழி பெயர்க்கப்படாத காலம். ஒரு இடதுசாரிக் கருத்தைப் புரிந்து கொள்ளுவதற்கு ஆங்கில அறிவு மிக மிக அவசியம் என்ற நிலையே இருந்தது. ஆகவே ஆங்கிலக் கல்வி அறிவுடைய ஒருவரால் தான் தத்துவார்த்த ரீதியில் விடயங்களை அணுகி மக்களுக்குள் வேலைசெய்ய வேண்டிய நிலை இருந்தது. இதிலிருந்து ஒரு உண்மையை நாம் அவதானிக்கலாம். ஒரு பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது பூரணமாக அமைந்திருக்க நியாயமில்லை.

ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் ஆங்கிலம் கற்பது, பல்கலைக்கழகம் செல்வது எல்லாம் மத்தியதரவர்க்க, பணக்கார வர்க்க மக்களால் மட்டுமே

முடிந்த சமாச்சாரமாகும். சுதந்திரத்தின் முன்பு தென்கிழக்கு ஆசிய ஆணைக்குழுவின் தலைமையகம் கண்டியிலிருந்தது. மவுண்ட் பேட்டன் பிரபு தேசாதிபதியாக இருந்த நேரத்தில் பிரிட்டிஸ் மற்றும் அதன் சாம்ராஜ்ய நாட்டுப்படைகள் இலங்கையில் நிலை கொண்டிருந்தபோது அந்தப் போர்வீரர்களில் பலர் கம்யூனிஸ்டுகளாயிருந்ததுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவர்களும் ஆங்கிலத்தில் விரிவுரைகள் நிகழ்த்தினுர்கள். திருகோணமலையில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய படைவீரர்களின் நிதி உதவியால் திருகோணமலையில் ஒரு கட்சிக்கிளை திறக்கப்பட்டதாக அறியக் கிடக்கிறது. இவ்வாறுதான் மார்க்ஸிஸ தத்துவங்கள் லண்டன் பல்கலைக்கழக வழியாக இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு வந்து யாழ்ப்பாணம் சென்றது.

1940 களில் என்.எம்., கொல்வின் ஆகிய தலைவர்கள் வல்வெட்டித் துறையூடாக இந்தியாவுக்கு தப்பியோடிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் லங்கா சமசமாஜக் கட்சியைப் பிரிதிநிதித துவப்படுத்திய தலைவர்கள் யாரென அறியக் கிடைக்கவில்லை. ஆனுல் பிற்காலத்தில் நாகலிங்கம், ஆர்.ஆர். தர்மரத்தினம் காராளசிங்கம், ஏ.எஸ் கனகரத்தினம் போன்ற பல வேட்பாளர்கள் ல.ச.ச.க சார்பாக வடபகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டாத போதும் கணிசமான வாக்குகளைப் பெற்றது நினைவில் உள்ளது.

ஆனுல் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வைத்தியலிங்கம், பொன்.கந்தையா, வி. பொன்னம்பலம், மோதிலால் நேரு, ஜெயசிங்கம் போன்ற பலரும் போட்டியிட்டனர். பொன்.கந்தையா மட்டும் 1956ல் வென்ருர். இவைகள் ஆரம்ப கால வரலாருகும். மீண்டும் வரலாற்றின் மீதியைப் பார்ப்போம்.

இப்போது ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றி இங்கு குறிப்பிட்டு ஆய்வு செய்வோம். அதாவது மார்க்ஸியத்தில் 'பாட்டாளி வர்க்கத் தலைமையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் வலியுறுத்தப்படுகிறது. இங்கே நாம் பார்க்கப் போவது வடக்கு கிழக்கில் பாட்டாளி வர்க்கத்தின் நிலைமைகளைப் பற்றியே. சீனுவில் மாவோ பாட்டாளி வர்க்கத் தலைமை என்ற கருத்தை என்ற கருத்தை நிராகரித்து விவசாயிகள் தலைமையை வழங்கினுர் என்ற அல்பேனியத் தலைவர் அன்வர் ஹோஷாவின் குற்றச்சாட்டு ஒரு உதாரணமாகும். இதை இங்கு நான் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு அதாவது தமிழர் பாரம்பரிய பிரதேசமாக வடக்கு கிழக்கு மாநிலங்கள் ஒரு பாட்டாளி வர்க்கத் தலைமைக்குரியனவா அல்லது விவசாயத்தலைமைக்குரியனவா என நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வடக்கு கிழக்கை எடுத்துக் கொண்டால் மூன்று பெரிய தொழிற்சாலைகள் அதிகளவு தொழிலாளர்களைக் கொண்டதாக இருக்கின்றன. காங்கேசன் சீமெந்து, பரந்தன் இரசாயனம், வாழைச்சேனை காகிதம் இவற்றை விட ஆனையிறவு உப்பளம், திருமலை துறைமுகம் போன்றவையும் மின்சாரம், புகையிரதம் போன்ற சில அரச நிறுவனங்களிலும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர். பத்திலிருந்து ஐம்பது வரையான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள், குறிப்பாக தனியார் நிறுவனங்கள் சில நூற்றுக்கணக்கில் உள்ளன.

ஆனுல் விவசாயம் யாழ் மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) அரைப்பங்கினருக்கு குறைவாகவும் ஏனைய மாவட்டங்கள் அனைத்தும் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். இவ்விதம் விவசாயத்தில் ஈடுபடும் நிலச்சொந்தக்காரர்கள் உட்பட குத்தகை நிலங்களில் விவசாயம் செய்பவர்களும் விவசாய நிலங்களில் வேலை செய்வதில் கூலி பெறும் தொழிலாளர்களும் சேர்ந்து பெரும்பான்மை விவசாயத்துறை மக்களாகவே இருக்கின்றனர்.

ஒரு கணிசமான பகுதியினர் விவசாயம், வாணிபம், கல்வித் தொழில் உட்பட பலவற்றில் சுயமுயற்சியில் ஈடுபடும் மக்களாக உள்ளனர். ஆகவே இத்தகைய ஒரு சமுதாய அமைப்பில் விவசாயிகளை, விவசாயக் கூலிகளை நிலவுடைமைக்காரரிடமிருந்து பிரித்து அணி திரட்டுவதென்பது கடினமானதாகும். விவசாயிகள் சங்கங்கள் விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் பல அமைக்கப்பட்ட போதும் அவைகள் பெரிய சக்தி வாய்ந்த ஸ்தாபனங்களாக உருவெடுக்கவில்லை.

ஆகவே கார்ல் மார்க்ஸ் கூறிய 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' நாட்டுக்கு நாடு வேறுபட்ட காரணிகள் உண்டு. முற்றிலும் கைத்தொழில் மயப்படுத்தப்படாத நாடொன்றில் தொழிலாளர்களை அணி திரட்டுவதென்பதும் இலகுவானதல்ல. வடக்கு கிழக்கை எடுத்துக் கொண்டால் அங்கு பெருமுதலாளிகளும் இல்லை. ஏனென்ருல் பேரினவாத அரசின் கோட்பாடுகளின்படி பாரிய தொழிற்சாலைகள், கைத்தொழிற் பேட்டைகள் என்பவற்றை வடக்கு கிழக்கில் எந்தவொரு தனியார் தொடங்குவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டு அத்தகைய தொழிற்சாலைகளை கொழும்பை சுற்றிய இடங்களில் ஆரம்பிக்க ஊக்கமளிக்கப்பட்டது. மில்க்வைட் தொழிற்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தமும், ராஜாத் தியேட்டர் முதலாளி தொழிலாளி வழக்கும் ஒரு காலத்தில் பிரபல்யமாயின.

சுயதொழில்கள் பற்றி கூறும் போது ஒரு சிறு உதாரணத்தின் மூலம் விளக்கமளிக்க முடியும். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான ஒரு கோவிலின் திருவிழாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு குருக்கள், உதவியாளர், மேளகாரர், சப்பரகாரர், சிகரக்காரர், மாலைசோடனைக்காரர் என பல்வேறுபட்ட தரப்பினரும் பணம் பெறுகிருர்கள். இவர்களை எல்லாம் தொழிற்சங்கத்தில் இணைக்க முடியுமா? அல்லது இவர்களும் வெறும் கூலித் தொழிலாளர்கள் என்று கூறி விட முடியுமா? இது போன்றே சுயதொழிலில் சுயலாபத்தைப் பெறக் கூடிய சந்தர்ப்பங்களை அதிகம் கொண்ட மக்கள் தமது அரசியலை வேறுவிதமாக நிர்ணயிக்க விரும்புவார்கள்.

ஆகவே, மிகப்பெரிய இடைவெளிகள் இல்லாமலும் வாழ்வை ஓட்ட முடியாத வறுமை நிலை மக்களைப் பீடிக்காமலும் அளவுக்கு மீறிய ஆட்சியாளர்களின் ஊழல், அநீதி, அராஜகம், அடக்குமுறை இலலாமலும் புரட்சி பற்றிய தத்துவத்தை எவ்வளவு தான் போதித்தாலும் அது ஒரு போதனையாக மட்டுமேயிருக்குமே ஒழிய செயலில் வெற்றி பெறும் வாய்ப்புகள் அரிது. ஆனுல் இன்று சூழல்கள் மாறுகின்றன. அது பற்றி பின்னர் பார்ப்போம்.

ஆகவே யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழர்கள் பாரம்பரிய பிரதேசங்களிலும் கம்யூனிசம் சில தசாப்தங்களாக பற்றிப் பிடித்து நின்றதெப்படி என்பது பற்றியும் பிற்கால வரலாறு பற்றியும் தொடரும்.

# இலங்கைத் தமிழ் பெண்களும் இன்றைய சமுதாய மாற்றமும்

**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

**(ஜேர்மனியில் நடந்த பன்னாட்டு தமிழுறவு மன்ற மாநாட்டில் வாசித்த கட்டுரை)**

ஒரு சமுதாயம், அரசியல், பொருளாதார சமயரீதியாக ஒரு பெரும் மாற்றத்தை அடையும்போது சமுதாயத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையிலும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படும்.

உதாரணமாக இந்திய சுதந்திரப் போரை எடுத்துக்கொண்டால் அந்நிய ஆட்சிக்கு எதிராக உண்டான மக்கள் எதிர்ச்சியில் ஆண்கள் மட்டும் பங்களிக்கவில்லை. ஆயிரக்கணக்கான பெண்களும் அந்த எதிர்ப்பில் கலந்து கொண்டார்கள்.

பாரம்பரியமாக சமயரீதியாக சாதி ரீதியாக, பால்ரீதியாக அடக்குப்பட்டு வைத்திருந்த இந்தியப் பெண்கள் தங்கள் அடக்கு முறைகளை எதிர்த்துக் கொண்டு இந்தியச் சுதந்திரப் பங்குபற்றினார்கள்.

அதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கிலாந்தில் இயந்திரத் தொழிற்வளர்ச்சி உண்டானபோது அந்தத் தொழிலில் பெண்களின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது. அந்த வளர்ச்சியின் உந்துதலால் பெண்கள் மேற்படிப்புக்காகவும் உத்தியோக முயற்சிக்காகவும் கட்டுப்பாடான குடும்ப அமைப்புகளிலிருந்து வெளியே வந்தார்கள்.

கிழக்கு நாடுகளைப் பொறுத்தவரையில் சமயரீதியாகப் பெண்களை அடக்கி வைத்திருப்பது பாரம்பரியமாகப் போற்றிப் பாதுகாத்து வைத்திருக்கப்படுவதாகவும். ஒரு தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கை எப்போதும் ஆண்களின் தயவில் உறவில், பாதுகாப்பில் கட்டுப்பாட்டில் தான் நடந்து முடிகிறது.

இலங்கைத் தமிழ் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாழ்க்கை மற்ற நாட்டுப் பெண்களைவிட மிக வித்தியாசமாக இல்லை.

மேலோட்டமாக பார்க்கும்போது இலங்கைத் தமிழ்ப் பெண்கள் இந்தியத் தமிழ்ப் பெண்களை விடக் கூட கல்வி வாய்ப்புகளையும் வசதியுள்ளோர்களையும் போல இருந்தாலும் குடும்ப அமைப்பில் உறவில் இவர்களுக்கும் மற்ற எந்தப் பெண்களுக்கும் அதிக வித்தியாசமில்லை.

சமய ரீதியாகப் பார்த்தால் இலங்கைத் தமிழ்ப் பெண்களில் பெரும்பாலோர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்து சமயப் பழக்க வழக்கங்கள் பிரதேசத்துக்கு பிரதேசம், சாதிக்கு சாதி வேறுபடுகிறது.

உதாரணமாக வட இந்தியாவில் வாழும் குஜராத்தித் இந்துப் பெண்ணுக்கும் இலங்கையிற் தமிழ் பெண்ணுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது.

கணவன் இறக்கும்போது மனைவி உடன் கட்டை ஏறிய சம்பிரதாயம் இந்தியாவில் இருந்தது. ஆனால் இலங்கையில் அந்தப் பாரம்பரியம் இருக்கவில்லை.

சமயரீதியாகப் பெண்களின் நிலை முன்னுக்குப் பின் முரணாகத் தான் இருக்கிறது. சமய ரீதியில் சக்தியமாக, உலகமாதாராக, நதியாக மலையாக, வர்ணிக்கப்படும் பெண்கள் சாதாரண வாழ்க்கையில் சக்தியற்ற, படைப்பு இயந்திரமாக பாவித்து அனுபவிக்கப்பட வேண்டிய ஒரு இன்பப் பொருளாககுடும்ப சுமையைச் சுமக்க வேண்டிய ஒரு வேலைக்காரியாக நடத்தப்படுகிறார்கள்.

கடந்த நூற்றாண்டுக் கடைசியில் ஏற்பட்ட மாற்றங்களால் இலங்கைத்தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையில் கல்வி ஒரு பெரிய மாற்றத்தையுண்டாக்கியது. இந்தக் கல்வியால் ஏற்பட்ட மாற்றம் வீட்டில் உள்ள பெண்களை வெளியே கொண்டு வந்ததே தவிர மற்றப்படி அவர்களின் வாழ்க்கையில் எந்தவிதமான பெரிய மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் தங்கள் வாழ்க்கையில் தங்கள் படிப்பில் ஏற்பட்ட மாற்றத்தால் உத்தியோகம் செய்ய வெளிக்கிட்டார்கள். இவர்களின் குடும்ப சுமையில் ஒருபகுதியான சமையல், துவையல், பிள்ளை பராமரிப்பு என்பன வேலைக்காரிகள் தலையில் விழுந்தது. ஆனாலும் இப்படியான மத்தியதர வர்க்கப் பெண்களின் கல்வி பெண்நிலைவாதத்துக்குப் பெரிய மாற்றத்தை கொண்டு வரவில்லை. ஏனென்றால் இவர்களின் சமுதாய நோக்கு இவர்களின் வர்க்கத்து ஆண்களின் கண்ணோட்டம் போன்றேயிருந்தது.

இவர்களின் வாழ்க்கையில் இவர்கள் மறைமுகமாக ஆண்களின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டார்கள் என்றுதான் கொள்ள வேண்டும். ஆனாலும் இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் தொழிற் கட்சிகளின் தலைமையில் போராட்டங்களைத் தொடங்கியபோது இலங்கைத் தோட்டத்தைச் சேர்ந்த ஏழைத் தமிழ்ப் பெண்கள் முழுக்க முழுக்கப் பாடுபட்டார்கள்.

இதே காலகட்டத்தில் தென் அமெரிக்காவில் கரும்புத் தோட்டத்தில் நடந்த போராட்டங்களில் தமிழ்க் கூலிப் பெண்கள் கலந்து கொண்டார்கள்.

ஏன் இந்த வர்க்க வேறுபாட்டை விளங்கப்படுத்துகின்றேன் என்றால் பெண்ணிலைவாதம் வர்க்க அடிப்டையில் பார்க்கப்பட வேண்டியது.

மார்க்கிரட் தச்சர், இந்திராகாந்தி, பெனசிர் பூட்டோ, சிறிமாவோ பண்டாரநாயக்கா, கொரி அக்கினோ எல்லோரும்பெண் பிரதமர்கள்தான் ஆனால் இவர்கள் பெண்களின் முன்னேற்றத்துக்குப் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை.

சமுதாய மாற்றம் பொருளாதார ரீதியில் மிக வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. பின்னடைந்த நாடுகளிலிருந்து மக்கள் பல வேறுபட்ட அரசியல் காரணங்களால் வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்படியான மாற்றங்களில் மிக மிகத் துன்பப்படுபவர்கள் பெண்களே.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கெதிராகச்சிங்கள அரசாங்கம் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாதம் இன்று கிட்டத்தட்ட 600.00 தமிழர்களை உலகம் எல்லாம் சிதறப் பண்ணியிருக்கிறது.

இந்தப் புலம் பெயர்ந்த தமிழர்களில் பெண்களின் நிலை என்ன?

பல நாடுகளிலும் அதிகமாய் வாழும் பெண்கள் பல பிரச்சினைகளுக்குள் ஆளாகிறார்கள். கலாச்சார அதிர்ச்சி, காலச் சூழ்நிலை வேறுபாடு, குடும்பச் சுமை, பொருளாதாரச் சுமை என்பன இவர்களை மிக வேதனைக்கு ஆளாக்குகிறது. இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. இலங்கையிற் பல தாய்மார்கள் மகன்களையிழந்தவர்கள், மனைவிகள் கணவனையிழந்தவர்கள்.

காலம் காலமாக ஆண்கள் தயவை, உழைப்பை, பாதுகாப்பை நம்பியிருந்த

தமிழ்ப் பெண்கள் இன்று தங்கள் கால்களில் ஊன்றி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இவர்களின் பொறுப்பு பல மடங்குகளாகி விட்டன. குழந்தைகள் பெறுவது, பாதுகாப்பது, படிப்பூட்டுவது, எல்லாம் இவர்கள் தலையில் விழுந்து விட்டன.

இந்து சமய அடிப்படையில் இவர்கள் சத்திய சாவித்திரிகளாகத் தாய்மையின் சின்னங்களாகத்தான் வாழ எதிர்பார்க்கப்படுகிறார்கள். நடைமுறையில் இவர்களின் வாழ்க்கை நிலை மிக மிக வேதனையானது.

தமயன்களையிழந்த தங்கைகள், தகப்பன்களையிழந்த மகள்மார் என்போரின் எதிர்காலம் மிகப் பயங்கரமாக இருக்கிறது.

இலங்கைத் தமிழரின் வாழ்க்கையின் அடிப்படை பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மிகவும் கடுமையாகப் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. கல்யாணங்கள், எதிர்காலக் கனவுகள் என்பன யார் எவ்வளவு பணம் கொடுப்பார் என்பதில் அமைந்திருக்கிறது.

இந்த எதிர்ப்பார்ப்புக்கள் தற்போது நடந்து கொண்டிருக்கும் அரசியற் போராட்டங்களாய் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இந்து மதப் பெண்ணின் வாழ்க்கையில் திருமணம் என்பது மிக மிக முக்கியமான ஒரு விடயம், எவ்வளவுதான் படித்த பெண்ணாய் இருந்தாலும் அவளின் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் அவள் செய்யும் தொழிலில் கிடைக்கும் சந்தர்ப்பம் இருந்தாலும் கல்யாணம் என்று ஒன்று நடக்காவிட்டால அவளின் வாழ்க்கை முழுமையடையாது என்பதைச் சமூகம் ஞாபகப் படுத்தாமல் விடுவதில்லை.

திருமணங்கள் முன்பின் தெரியாத ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டு தேசங்களில் நடைபெறுகிறது. இதன் பிரதிபலிப்பு இப்போது விரிவடைந்து கொண்டிருக்கும் விவாகரத்துக்களின் எண்ணிக்கையிற் தெரிகிறது. முன் பின் தெரியாத மனிதர்களின் வயிற்றில் பிறக்கும் எதிர்காலச் சந்ததியினர் குடும்ப பிரச்சினைகளுக்குள் மாட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் லண்டனில் வெளியான அறிக்கையில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் ஆசிய இளம்பெண்களின் தொகை கூடிக்கொண்டு வருவதாகச் சொல்கிறது. ஆசிய மனிதர்களிடையே குடும்பச் சச்சரவுகள் கூடிக்கொண்டுவருவது அறிக்கையில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

குடும்பம் என்பது ஒரு நாட்டின் ஆணிவேர். அந்தக் குடும்பம் ஒரு சந்தோசமான, ஆரோக்கியமான அடிப்படையில் அமையாவிட்டால் எப்படி ஒரு ஆரோக்கியமான, அறிவு வளர்ச்சியடைந்த எதிர்காலம் உண்டாகும்? வெளிநாட்டில் வாழும் தமிழ்ப் பெண்கள், பொருளாதார ரீதியாகத் தங்கள் பொறுப்பைச் சரிசமமாக ஏற்றுக் கொண்டிருப்பது பல குடும்ப அமைப்புக்களில் காணக் கூடியதாக இருக்கிறது.

இப்படியான குடும்ப அமைப்பு சமுதாய எதிர்பார்ப்புகளிலிருந்து தங்களை வேறு விதமாகப் பார்க்கும் பெண்களும் எங்கள் சமுதாயத்தில் இல்லாமல் இல்லை. இன்றைய போராளிகளில், நேரடி ஆயுத யுத்தங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப் புறப்பட்டுப் போன பெண்கள் எத்தனைபேர் விடுதலைப் போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தை வகிக்கிறார்கள்? அரசியல் சம்பந்தமான கருத்துரையாடல்களிற் கலந்து கொள்கிறார்கள்? அரசியல் கருத்துக்களை சமுதாய மாற்றுக் கருத்துக்களை இவர்கள் எப்படி வெளியிடுகிறார்கள்? இவர்களின் படைப்புக்களுக்கு ஒரு ஆதரவ, ஒரு மதிப்புக் கொடுபடுகிறதா?
இயக்கம் சார்ந்திருக்கும் பெண்களை எப்படி இயக்கங்கள் பாவிக்கின்றன என்பதெல்லாம் விவாதிக்கப் பட வேண்டிய விடயங்களாகும்.

இலங்கையரசியலைப் பொறுத்த வரையில் கணவர்களைப் பின்பற்றும் மனைவிகளைத் தவிர தாங்களாக முன் வந்து அரசியல் வானில் முத்திரை குத்திக் கொண்டவர்கள் யார்?

கல்வித் துறையில் தாங்கள் முன்னேறியபோதும் சமுதாய வளர்ச்சிக்காக பெண்ணிலை முன்னேற்றத்துக்காகத் தங்கள் கல்வியைப் பாவித்தவர்கள் மிகச்சிலரே. இலங்கையில் பல தமிழ்ப் பெண்கள் பெரிய டாக்டர்களாகவும் ஒரு சிலர் எஞ்சினியர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால் இதனால் பெரிய சமுதாய மாற்றம் ஒன்றும் உண்டாகவில்லை. கடந்த பத்தாண்டுகாலத்தில் அரசியல் ரீதியாக ஒரு சில பெண்களும், கலைப்படைப்புக்கள் மூலாகச் சிலரும் சிலரும் சில சமுதாயக் கடமைகளைச் செய்திருக்கிறார்கள். ஆண்களின் அரசியல் பங்களிப்பு பலரால் கலந்துரையாடப் பட்டோ பாராட்டப்பட்டோ எடுபடும் போது பெண்கள் அரசியல் பங்களிப்புக் க்ருத்துக்களின் துணிவும் அரசியல் கருத்தும் என்ன மாதிரி ஏற்கப்படுகிறது என்பதற்கு சகோதரி ராஜனி திராணகமவின் முடிவே எடுத்துக் காட்டாகும்.

கவிதைத் துறையில் சகோதரி சிவரமணியின் திடீர் மரணம் ஒரு பேரிழப்பாகும். இந்த இழப்பின் காரணம் சடுதியாக அவர் மனத்தில் ஏற்பட்ட ஒரு தாக்கத்தின் விளைவு என்று நான் நினைக்கவில்லை. ஒரு சமுதாயப் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாத ஒரு தனி மனிதத் தோல்வியே இந்த முடிவாகும். தமிழர்கள் வெளிநாட்டில் வாழும்போது தங்கள் சொந்த சமுதாயக் கலாச்சாரங்களை மட்டுமல்லாது தாங்கள் குடி பெயர்ந்துள்ள நாடுகளின் கலாச்சாரங்களையும் பிணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு ஆண் வெளியாற் சென்று வேலை மூலமாகவோ அல்லது படிப்பு மூலமாகவோ மற்றவர்களைச் சந்திக்கும்போது அவன் தன் கருத்துக்களை மாற்றவோ அல்லது சந்தர்ப்பத்துக்குத் தக்கதுபோல் பாவித்துக் கொள்ளவோ பயிற்றப்பட்டிக்கிறான். இது அவன் குழந்தையாயிருந்த காலத்திலிருந்து அவனுக்குப் போதிக்கப்பட்டு வருவதாகும்.

ஆனால் ஒரு பெண் எப்போதும் ஒரு அடிப்படையான குறுகிய வட்டத்துக்குள் வாழத்தான் பயிற்றப்பட்டிருக்கிறாள், எதிர்பார்க்கப் பட்டிருக்கிறாள் இதைத் தாண்டுவது மிகவும் கஷ்டமான விடயமாகும்.

இன்றைய தமிழ்த்தாய் உள்நாட்டில் வாழ்ந்தாலும் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் கலாச்சாரப் பண்பாடுகளைக் கட்டிக்காக்க எதிர்பார்க்கப்படுகிறாள். கலையைப் போதிக்க சமயத்தைப் போதிக்க, பண்பாட்டை அறிவுறுத்த அவள் எதிர்பார்க்கப் படுகிறாள்.

ஆனால் இதே நேரத்தில் இன்றைய இளம் சமுதாயம் வாழும் சூழ்நிலை நாங்கள் வளர்ந்த சூழ்நிலையைவிட எத்தனையோ வித்தியாசமான நிலையிலிருக்கிறது.

ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் பிறந்த சூழ்நிலை, படிக்கும் பாடங்கள், வளரும் சுற்றுடல்கள் என்பனவற்றால் உறுதிப் படுத்தப் படுகிறது. இந்த விதத்தில் பார்க்கும்போது எங்கள் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை எவ்வளவு குழப்பத்துக்குள் இணைந்து கிடக்கிறது என்று தெரியும்.

பிறந்த சூழ்நிலை ஒன்றை எதிர்பார்க்க படிக்கும் கல்வி இன்னொன்றைத் தர, வாழும் சுற்றுடல் எதிர்மாறாக ஏதோ செய்ய இன்றைய தமிழ்ப்பெண் ஒரு குழப்பமான நிலையிலிருக்கின்றாள் என்றே சொல்ல வேண்டும்.

இன்றைய தமிழ்ப் பெண்கள் தாங்கள் வாழ்க்கையை மிகக் கவனமாக ஆலோசிக்கவேண்டும். மாற்றங்களை உணர வேண்டும் எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு இந்த மாற்றங்கள் ஒரு புதிய நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

# படப்பிடிப்பாளரின் யாழ் டயறி

## ராவய ஆசிரியர் குழுவின் யாழ் பயணக் குறிப்புகள் 5

ராவய ஆசிரியர் குழுவின் யாழ் பயணத்தின் போது படப்பிடிப்பாளராக சென்ற பிரயஞ்சன் சுரேஷ் டி சில்வா அவர்கள்தான் நேரில் கண்டவற்றை தனது மனதில் எழுந்த உணர்வுகளோடு அவற்றைச் சுருக்கி தனது தினக் குறிப்பில் எழுதியுள்ளார் 1993 நொவம்பர் 14ம் திகதி ராவய இதழில் வெளிவந்த இக் குறிப்புகள் தாயகம் வாசகர்களுக்காக தமிழாக்கம் செய்யப்படுகிறது.
தமிழாக்கம் செ.லோகநாதன் நன்றி ராவய.

செப்டம்பர் 22ம் திகதி

நீண்டகாலமாக நாம் முயற்சித்த பயணத்திற்காக இன்று புறப்படுகிறோம். காலையில் மனதுக்கு கொஞ்சம் பயமும் ஏற்பட்டது. யாழ்ப்பாணம் செல்வதற்கு நாம் எவ்வளவு தடவை முயற்சித்தோம்? நாம் முயற்சித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வம் யாழ்ப்பாணம் வருமாறு எமக்கு அறிவித்த கடிதம் மட்டும்தான் எம்மிடமிருந்த ஒரே காரணியாகும். எப்படியாயினும் இறுதியில் அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தது. அதுவும் யாழ்ப்பாணத்திற்கு அல்ல. மடு முகாமில் உள்ள அகதிகளைச் சந்திப்பதற்கேயாகும்.

அவ் அனுமதி எமக்கு போதுமானது. யாழ்ப்பாணம் செல்வதே எமது நோக்கமாகும். பிற்பகல் இரண்டு மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் புகைவண்டியில் எமது பயணத்தை ஆரம்பித்தோம். ஒரு புறம் பீதியும் மறுபுறம் புதிய அனுபவங்கள் பற்றிய சிந்தனைகளும் எனது உள்ளத்தில் எழுந்தன. நாம் வவுனியாவை அடையும்போது இரவு சுமார் 8-30 மணியிருக்கும்.

வவுனியாவிலிருந்து மடு அகதி முகாமுக்கு எம்மை அழைத்துச் செல்ல முன்வந்த வண.பிதா.ஜேசுராஜா நாளை தான் வருவார். இன்று இரவை நாம் எங்கேயாவது கழிக்கவேண்டும் நாம் வவுனியாவிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்திற்குச் சென்றோம். கொழும்பில் ஏற்படுத்திக் கொண்ட அவசர அறிமுகம் காரணமாக இன்றிரவு தேவாலயத்தில் தங்கியிருக்க சிரமமின்றி இடம் கிடைத்தது.

செப்டம்பர் 23ம் திகதி

காலைப் பூசைக்காக அழைக்கும் தேவாலயத்தின் மணியோசை கேட்டு காலை 5.30 க்கு கண்விழித்தேன். சோம்பல் முறித்துக் கொண்டே இன்னும் கொஞ்சநேரம் பாயில் கிடந்தேன். காலையிலேயே வவுனியா இராணுவ முகாமின் மக்கள் தொடர்பு அலுவலகமான ரம்ய இல்லத்திற்கு சென்றோம். வவுனியா, வடக்கையும் தெற்கையும் பிரிக்கும் எல்லை நகரமாகும்.

வடக்கை நோக்கிச் செல்லும் அனைவரும் ரம்ய இல்லத்திற்கு சென்று அனுமதிப் பத்திரம் பெறவேண்டும். அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக எம்மிடமிருந்த தஸ்தாவேஜுக்களையும் பொருட்களையும் இராணுவ அதிகாரிக்கு காட்டினோம். அவர் ஆரம்பத்தில் சற்று வியப்புடனேயே எம்மைப் பார்த்தார். எமது பயணத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்திய பின்னர் அவர் எமக்கு ஆசி கூறினர். அவருடைய பெயர் லெப்டினனட் இலங்கக்கோன். வன்னிப் பிரதேச இராணுவ கொமாண்டர் பிரிகேடியர் களுபஹன அவர்களைச் சந்திக்குமாறு எம்மிடம் அங்கு கூறப்பட்டது. எமது பயணம் தொடர்பான சகல விபரங்களும் ஏற்கனவே கொழும்பிலிருந்து பிரிகேடியர் களுபஹன அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. மடு அகதி முகாம் வரை மட்டுமே எமக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அதுவும் எமது பயணத்தின் பொறுப்புகள் அனைத்தும் எம்மைச் சார்ந்ததாக குறிப்பிட்டிருந்தது. எவ்வித விபத்துக்கும் அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல. எமது நோக்கம் எவ்வாறுயினும் தடைசெய்யப்பட்டுள்ள தேசத்துள் காலடி வைப்பதேயாகும். பிற்பகல் இரண்டு மணியளவில் மடு தேவாலயத்தின் பிரதான குருவானவர் வண.பிதா ஜேசுராஜா ரம்ய இல்லத்திற்கு வந்தார். சிறிய ஹைஏஸ் வான் ஒன்று. அது தான் நாம் செல்லவிருந்த வாகனமாகும். அவ்வாகனத்துள் வண.சகோதரர்கள் பதினொருவரும், சாரதி, வண.பிதா. ஜேசுராஜா தேவாலய உதவியாளர் தோமஸ் இதைவிட இவர்கள் அனைவரதும் பொருட்கள்.

நுவரேலியாவில் விடுமுறையை கழித்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் செல்லும் வண.சகோதரர்களுடன் நாம் நால்வருமாக ஹைஏஸ் வான் டிக்கியுள் ஒருவர் மேல் ஒருவராக குந்திக் கொண்டோம், முழங்காலில் இருந்து கொண்டுமாக இருபது மைல் தூரம் பயணம்செய்து தடைசெய்யப்பட்டுள்ள தேசத்துள் பிரவேசித்தோம், மடு தேவாலயத்தில் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதிலும் மன்னார் மாவட்டம் அரசியல் பிரிவுக்கு எமது வருகையை அறிவிப்பது வண பிதாவின் பணியாகவிருந்தது.

மன்னார் மாவட்டம் அரசியல் பிரிவு அலுவலகம் பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் அமைந்திருந்தது. அது மடு தேவாலயத்திற்கு இரண்டு மைல்களுக்கு முன்னாலாகும். பிற்பகல் 5.30 மணியளவில் நாம் அவ்விடத்தை அடைந்தோம். அவ்விடத்திலிருந்து எம்மைப் பற்றிய பொறுப்புகள் விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பிரிவு தலைவர் கனேஷ் அவர்களைச் சார்ந்ததாகும். அவர்களின் முகாமில் இருந்த அனேகர் 18 வயதுக்கு குறைந்த இளைஞர்கள் ஆவர். அவர்களில் தமது தோள்களில் ஆயுதங்களைச் சுமந்து கொண்டு கம்பீரமான எடுப்புடன் அங்குமிங்கும் உலாவுகின்றனர். சிறு பராயத்திலேயே

**29ம் பக்கம் பார்க்க..**

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ... தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

# A.R.K MARKET

## 31-35 St.Dennis Dr
## (Don Mills/Eglinton)

★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்

★ Frozen seafood


**CD, Audio**
**மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ படங்கள் வாடகைக்கும் விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## (416) 421 3429

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**
**TRY FIRST**

**பலர் இச்சிகிச்சை மூலம்**
**பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922-0478

# Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**
**Tel:922 0478**

**Ladies' and Men's**
Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes
Nails Facial Scalp Clinic
**Cure against Hair loss**
Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**
**Try One (1) Professional Skin Care Treatment**
**For only $20.00***
*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

# SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**
**(416) 469-4906/ 922-0478**

## It's Tax Time!!

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies.
**We know how to best handle your changing income tax situation.**

We are goverment authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.
**Income Tax By Phone ™** Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99
You will be satisfied with our service, price and professionalism.
Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

## படப்பிடிப்பாளரின்..

பயங்கரமான ஆயுதங்களுக்காக தமது உடலேயும் உள்ளத்தையும் அர்ப்பணித்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு மரணமும் வீரமாகும்., அம்முகாமில் விடுதலேப் புலி இயக்கத்தைச் சார்ந்த இளேஞர்கள் 50 பேர் அளவில் இருந்தனர். என்றுமே தமது வாழ்வில் சிங்களவர்களே சந்தித்திருக்காத போதிலும் எம்மை மிகுந்த சகோதர அன்புடனேயே வரவேற்றனர். அத்துடன் ஒவ்வொரு கணமும் எம்மைப்பற்றிய கண்காணிப்புடன் இருந்தார்கள் என்பதும் எமக்கு மிகத் தெளிவாக விளங்கியது.

செப்டம்பர் 24 ம் திகதி

காலே 6 மணிக்கு விழித்துக் கொண்டேன். யாழ்ப்பாணத்திலிருந்து எம்மைப்பற்றி விசாரித்து அறியும்வரை முகாமிலிருந்து புறப்பட எமக்கு அனுமதி கிடைக்கவில்லே. தமிழ்ச் செல்வத்தின் கடிதம் எம்மிடம் இருந்ததால் எம்மைப்பற்றி அவநம்பிகை கொள்ளாத போதிலும் அவர்களின் சட்ட தடைகளுக்கு பணியவே எமக்கு நேரிட்டது. பகல் இரண்டு மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து வானெலி செய்தியொன்று கிடைத்தது. எங்களுக்கு கொஞ்சம் நிம்மதி. பின்னேரம் மூன்று மணியளவில் மன்ஞர் மாவட்டத்தில் எமது சுற்றுலாவை ஆரம்பித்தோம். மடு தேவாலயம்! இறுதியாக நான் மடு தேவாலயத்திற்குச் சென்றது இற்றைக்கு சுமார் 16 வருடங்களுக்கு முன்னரேயாகும்.

முன்னேய காலங்களில் ஒவ்வொரு வருடமும் அங்கு செல்வது எமது வழக்கமாகும். மடு தேவாலயம் அன்றையைப் போலவே இன்றும் எவ்வித வித்தியாசமும் இன்றி காணப்படுகிறது. அந் நாட்களேப் போன்றே இன்றும் தேவாலயத்தைச் சுற்றியுள்ள இடங்களில் சனத் திரள், ஆனல் இன்று பெரும் வேறுபாடு உள்ளது. பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து திருநாட்களுக்காக வரும் பக்தர்களேயே நாம் அன்று கண்டோம் அவர்கள் எல்லா இடங்களிலும் கூடாரங்களே அடித்துக்கொண்டு சுமார் ஒருவார காலத்துக்கு அங்கேயே சமைத்து உண்டு வாழ்ந்தனர்.

ஆனல் இன்று மடுவிலுள்ள சகல முகாம்களும் அகதி முகாம்களாகும். ஆனல் நாம் அன்று கண்டது மகிழ்ச்சி பொங்கும் முகங்களேயேயாகும். ஆனல் இன்று கண்டது துயரம் தோய்ந்த, கோபாவேசம் கொண்ட நோய் நொடிகளால் பீடிக்கப்பட்ட உணவு பற்ருக்குறையால் வாடும் மக்களேயேயாகும். மடு முகாமில் சுமார் 32000 அகதிகள் வாழ்கின்றனர். இவ் அகதிகள் இருபக்கத்தாலும் நெருக்கப்படுகின்றனர். ஒரு பக்கம் அரசாங்கம், மறுபக்கம் விடுதலேப் புலிகள். பின்னர் நாம் அடம்பன் பிரதேசத்திற்குச் சென்ருேம். அங்கு அரசாங்க ஆசுபத்திரிக்கும் கிராமத்தின் வீடுகளுக்கும் நீர் வழங்கிய பெரும் தண்ணீர் டாங்கியை, இராணுவம் வெளியேறும் போது அழித்து விட்டது. பலமைல் தூரத்துள் வாழ்ந்த மக்களுக்கு நீர் வழங்கிய இப் பெரும் தண்ணீர் டாங்கியை அழித்தது. யாராஞலும் அது பெரிய அநியாயமாகும்., அடம்பன் பிரதேசத்தில் இன்று ஒரு குடும்பம் கூட இல்லே. அனேவரும் அகதி முகாம்களில். இரவு ஏழுமணியளவில் நாம் தங்குமிடத்திற்கு வந்தோம்.

செப்டம்பர் 25ம் திகதி

காலே 5 மணிக்கு நித்திரை விட்டு எழும்பினேன். காலே 6 மணிக்கு மன்ஞர் முகாமிலிருந்து புறப்பட்டோம். இன்று எங்களே கிளிநொச்சிக்கு கூட்டிச் செல்வதாக கனேஷ் கூறினர். பெரிய பண்டிவிரிசீ சானில் இருந்து கிளிநொச்சியை நோக்கிச் செல்லும் பஸ் வண்டியில் காலே 6.30க்கு ஏறினேம். அது பழைய டாட்டா பஸ். அவ் வண்டியின் ஆசனங்களில் செந்தூசிகள் படர்ந்திருந்தன. தூசியை அகற்றுவதற்காக குனிந்து ஊதினேன். எனது கண்ணுடியை மறைக்கும் அளவிற்கு தூசிகள்.

பஸ் வண்டிக்குள் பைசிக்கள்களும் காணப்பட்டன. திடீரென பெரியதோர் சத்தம். பஸ் வண்டியின் கசெட் நாடா வேலே செய்யத் தொடங்கியது. அது கரடுமுரடான பாடல். விடியற்காலே குளிர் தெரியாமல் இருப்பதற்கு போலும். இப் பஸ்வண்டியை விடுதலேப் புலிகளே நிருவாகம் செய்கின்றனர். எங்களுடன் கூடவே விடுதலேப் புலி அங்கத்தவர் ஒருவரும் கிளிநொச்சி வரையும் வந்தார். அவரது பெயர் சௌந்தர். உண்மையிலேயே அவர் சௌந்தரியமான நபர்தான். வயது சுமார் 20 மதிக்கலாம். மடுவிலிருந்து கிளிநொச்சிக்கு 72 மைல்கள் வண்டிச் சாரதி கூறினர். அவ் 72 மைல்களும் 6 மணித்தியால பயணமாகும். ரூபாய் 300 பஸ் கட்டணமாகும்.

டீசல் எண்ணே இல்லாத காரணத்தால் மண்எண்ணேயையும் மரக்கறி எண்ணேயையும் கலந்தே வாகனம் ஓட்டப்படுகிறது. இதனுல தான் கட்டணம் இவ்வளவு அதிகமாகும். மடுவிலிருந்து கிளிநொச்சி ஆசுபத்திரிக்குச் செல்ல இருவர் வண்டியில் ஏறினர். ஒருவர் நோயாளி, மற்றவர் நோயாளிக்கு துணையாக அவரது நெருக்கமானவர். நோயாளிக்கும் நெருங்கியவருக்கும் போக வர மட்டும் ரூபா 1200/=தேவை. இந்த மனிதர்களே கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! பஸ் வண்டி பெரிய மடுவை அடையும்போது எனது உடம்பு முழுவதும் செந்தூசியால் மூடப்பட்டு விட்டது. உடைந்த பாதைகள் மிகவும் மெதுவான பயணம். இம் மனிதர்கள் இப்படியுமா ஒவ்வொரு நாளும் வாழ்கின்ருர்கள் என நான் எண்ணினேன்.

இன்று திலீபனின் 6 வது நினைவு தினம் ஆதலால் கடைகள் மூடப் பட்டிருந்தன. இது விடுதலேப் புலிகளின் கட்டளேப் பிரகாரம் நடைபெற்ற ஒன்ருகும். அது மட்டுமன்றி வவுனியாவுக்கு அப்பால் யாழ்ப்பாணம்வரை சகல வீடுகளிலும் முன்வாசல்களில் திலீபன் நினைவாக தீபம் ஏற்றப்பட்டிருந்தது.

நாம் கிளிநொச்சியை அடையும் போது பகல் ஒருமணி இருக்கும் மன்ஞர் தூதுவர் அலுவலகத்திலேயே நாம் தங்குவதற்கு இடம் கிடைத்தது. விடுதலேப் புலியினர் தமது நிருவாகத்தை இலகுபடுத்துவதற்காக தூதுவர் அலுவலகங்களே ஏற்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பிரதேசத்துக்குமான விவகாரங்கள் அதற்கான தூதுவர் அலுவலகத்தால் செயல்படுத்தப் படுகின்றன. மன்ஞர் வன்னி யாழ்ப்பாணம் தூதுவர் அலுவலகங்கள் இவற்றுள் பிரதானமானவை

# கனடாவில் வாக்கிய பஞ்சாங்கம்

## சிவாகம கிரியா பீடம்

பஞ்சாங்கம் என்பது வேதத்தின் ஓர் அங்கமான சோதிடத்தின் பிரிவு. சோதிடம் வேறு பஞ்சாங்கம் வேறு என்று கூறமுடியாது. பஞ்சாங்கம் சோதிடத்திற்கு இன்றியமையாத சொத்து. சோதிடம் வேதத்திற்கு கண்கள் என்ருல், சோதிடத்தின் நேத்திரம் பஞ்சாங்கம் என்பது மிகையாகாது. கண்களில் சிறு தூசி விழுந்தாலும் துன்பம் ஏற்படுவது போன்றே பஞ்சாங்கத்தில் தவறுகள் பிழைகள் ஏற்படின் சோதிடக்கணிப்புகளிலும் தவறுகள் பிழைகள் ஏற்படும் என்பது உண்மை. இக்காரணத்தால் பஞ்சாங்கத்தில் தவறு நேர்ந்திடின் அதனை சுட்டிக்காட்டவும், கேட்கவும் எல்லாருக்கும் அதிகாரமுண்டு உரிமையுண்டு.

அந்த வகையில் சிவப்பிரகாசம் அவர்கள் தாயகம் பத்திரிகையில் தனது கருத்துக்களை வெளியிட்டதை மிகவும் நன்றியறிதலுடன் வரவேற்கிருேம். ஆனுல் பத்திரிகைக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் பிரதியொன்றை எமக்கும் அனுப்பியிருந்தால் இன்னும் நன்ருக இருந்திருக்கும். இனிமேலாவது பிழைகளைச்சுட்டிக்காட்ட முயல்கையில் தவறு செய்தவர்களுக்கும் நேரில் அறிவிப்பதுதான் அழகு. அதனைவிடுத்து அவலை நினைத்து உரலை இடிப்பது போன்று பத்திரிகையில் அறிக்கையை மட்டும் வெளியிட்டு விட்டு பேசாமல் இருப்பது அழகல்ல. சமுதாயத்துக்கு நல்வழி காட்டுவதாகவும் இது அமையாதது. 22.11.93 ல் தாயகம் பத்திரிகையைப் பார்த்தபின்தான் இப்படி ஒரு அறிக்கை வெளிவந்துள்ளது தெரிந்தது. என்ன செய்ய? அறிஞர் சிவப்பிரகாசம் அவர்கள் பிந்திவிட்டார் என்றுதான் நினைக்க நேர்ந்தது. ஏனெனில் ஏற்கனவே பஞ்சாங்கம் பிழைதிருத்தப்பட்டு வெளியாயிற்று 10. 11.93 ல். புதியதிருத்தம் கடைகளில் பெறமுடியும் இலவசமாக. அப்பொழுது இது வியாபாரநோக்கமா? என்பதும் புரியும்.

ஏதோ கவலையீனமோ அச்சகத் தவருே, அவசரத்தில் ஏற்பட்ட பிழையோ அல்லது சிவப்பிரகாசம் போன்றவர்களின் விமர்சனத்துக்கு ஆளாகவேண்டும் என்ற நியதியோ சில பிழையான பிரதிகள் வெளிவரக் காரணமாயிற்று.

எனினும் உடனே மறுநாளே தவறு தெரிந்து அவசர அவசரமாக பஞ்சாங்கம் மறுபதிப்புச் செய்யப்பட்டு கடைகளுக்கும் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. இதனுல் இப்பஞ்சாங்கத்தை உபயோகித்துக் கணிக்கப்படும் ஜாதகங்களில் பிழைகள் ஏற்பட இடமில்லையென்பதையும் அறிஞர் சிவப்பிரகாசம் ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

வியாபாரத்துக்கு விமர்சனங்கள் எதிரானவை என்று நினைப்பது மதியீனம், அறிவுப்பரிணும வளர்ச்சி, கலைகளின் சிறப்பு, வியாபாரத்தின் அபிவிருத்தி யாவற்றுக்கும் விமர்சனம் தேவை. அது உரியவர்களுக்குத் தெரியாத ஊமை விமர்சனமாக அமையக்கூடாது. இதே போன்று திருக்கணித பஞ்சாங்கம் தவறு என இங்குள்ள செய்தி இதழ்களில் வெளிவந்த செய்தி உரியவர்களுக்தெரிந்திருந்தால் அவர்களும் பதில் தந்திருப்பார்கள்.

நாமும் "தாயகம்" பத்திரிகை பார்க்காதிருந்தால் ஊமையர் வாழும் ஊரில் உழறுபவன் பெரியவன் என்றதுபோல் ஆகியிருக்கும் என்பதை சிவப்பிரகாசம் அவர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சோதிடர்களுக்குச் சொன்னுல தான் புரியும் என்பது எமது நோக்கமல்ல. அவர்கள் கற்றுத்தெரிந்தவர்கள், அனுபசாலிகள், முக்காலங்களையும் அறிந்து சொல்லும் ஆற்றல் படைத்தவர்கள் என்ற உயர்ந்த எண்ணமே எம்மிடமுண்டு. "கற்றது கைமண்ணளவு கல்லாததுலகளவு" என்ற ஆன்ருேர் வாக்கில் நம்பிக்கை கொண்டவர்கள் நாம். இந்தநிலையில் பிழைவிட்டால் கண்டு கொள்ளக்கூடியவர்கள் இல்லையென்ற எண்ணம் இருந்திருந்தால் வெளியிடப்பட்ட பஞ்சாங்கத்திலேயே "அன்பான தமிழ்பேசும் மக்களுக்கு" என்ற அறிக்கையில் "முதல் முயற்சி தவறுகள் இருக்கலாம். திருத்திக்கொள்ள வழி ஏற்படும் தவறுகளைக் காட்டுதல் நன்று" என்ற பதம் உபயோகித்திருக்கமாட்டோம் என்பதையும் சிவப்பிரகாசம் அவர்கள் சிந்தித்தல் நன்று.

சூரியனின் மேல் விளிம்பின் தோற்றத்தில் இருந்து மேல் விளிம்பின் மறைவுவரை பகற்பொழுது என்பது தர்ம சாஸ்திரங்களின் முடிவு. இதுவே சித்தாந்த கணிதத்தீர்ப்புமாகும். அபரணகால விதிகள் ஆகம முடிவ, களுக கமைவாகக் கையாளப்பட்டுள்ளன. சூன்யதிதிகளும் அவ்வாறே. பிழைகளைச் சுட்டிக்காட்டியமைக்கு நன்றி. மேலும் சிவப்பிரகாசம் அவர்கள் தமது விமர்சன ஆரம்ப முதலாம் பந்தியில் "எந்தவொரு கலைமுயற்சியும் எடுத்த எடுப்பிலேயே நேரியதாக அமைந்துவிடுவதில்லை வளைவு நெளிவுகள் படிப்படியாக செப்பனிடப் படுகின்றன." என்று தானே குறிப்பிட்டுள்ளதையும் சிந்திக்கட்டும்.

## சிவப்பிரகாசம் பதிலளிக்கிருர்

"நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்" என்று அடம்பிடிக்கும் பெரியவர்கள் உள்ள காலத்தில் பஞ்சாங்கத்தில் ஏற்பட்ட தவறுகளை ஏற்றுக்கொண்டதுடன் திருத்திய பதிப்பையும் வெளியிட்டு பிராயசித்தமாக இலவசமாயும் கொடுக்கும் பெருந்தன்மைக்கு முதற்கண் சிரம் தாழ்த்துகிறேன். இரண்டு வாரத்தின் முன்பு பஞ்சாங்கத்தை விலை கொடுத்து வாங்கியபோது தவறு உள்ளது அவதானிக்கப்பட்டது. ஏற்கனவே சில பிரதிகள் விற்பனையாகி விட்டன

என்றும் அறிந்தேன். எனவே பஞ்சாங்கம் வாங்கிய வர்களையும் வாங்க இருப்பவர்களையும் alert பண்ணவேண்டிய அவசியம் உணரப்பட்டு கருத்துக்கு களம் அமைக்கும் சஞ்சிகை யான தாயகத்தில் விமர் சிக்கப்பட்டது. பிழையான பஞ்சாங்கம் சந்தைக்கு வந்துவிட்டது. அந்த நேரத்தில் அது பற்றி முதலில் அறியவேண்டியது பஞ்சாங்கம் வாங்கு பவர்களே. ஏற்கனவே பஞ்சாங்கம் வாங்கிய பலருக்கு தவறு உண்டென்பதும் பழைய பதிப்பு வாபஸ்பெறப்பட்டுதிருத்திய பதிப்பு வெளிவந்ததும் இன்னமும் தெரியாது. பஞ்சாங்க கணிதரின் விளக்கம் தாயகம் மூலமாக கிடைக்கப்படும் வரையில் திருத்திய பதிப்பு பற்றி யானும் அறியேன். சேவைதான் நோக்கமாக இருப்பின் "இன்ன இன்ன" தவறுகள் ஏற்பட்டுள்ளன என்றும் திருத்திய பதிப்பு வெளிவந்துள்ளது என்றும் பத்திரிகை மூலமாகவேனும் இதுவரை தெரிவிக்கப் படாமை எனக்குப் புரியவில்லை. நல்லவேளை தாயகத்தில் கணிதர் எழுதிய விளக்கத்தைப் படித்தேனும் பலர் அறிந்துகொள்வார்கள். பொதுமக்களின் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை வெளியிடமுன்பு பலமுறை சரிபிழை பார்க்கப் படவேண்டும் என்பது பஞ்சாங்க கணிதர் அறியாததல்ல. "வியாபார நோக்கம் அல்ல" என குறிப்பிட்டுள்ளார்கள். மிக்க மகிழ்ச்சி.

சூரிய உதயத்தில் சூரியனின் மேல்விளிம்பு பாவிக்கப்படவேண்டும் என்ற பஞ்சாங்க கணிதரின் கூற்று சிந்திக்கப் படவேண்டியது. மேல் விளிம்பு பாவிக்கப்படுவது வாக்கிய பஞ்சாங்க மரபல்ல என்றே எழுதியிருந்தேன். மரபுகள் தவறானால் அவை மாற்றப்படவேண்டும் என்ற எனது கருத்தே அவருடையதுமாக இருந்தால் 325 வருடங்களாக வெளிவருவதாகக் கூறப்படும் இரகுநாதையர் பரம்பரைப் பஞ்சாங்கமும் இந்திய வாக்கிய பஞ்சாங்கங்களும் (இலங்கை கனடா திருக்கணித பஞ்சாங்கங்கள் உட்பட) சூரிய உதயத்தில் இதுவரை தவறான முறைகளை அனுசரித்துள்ளார்கள் என அவர்களுக்கு சுட்டிக்காட்ட பஞ்சாங்க கணிதர் முன்வருவாரா? இதுவரை காலமும் அந்தப் பஞ்சாங்கங்களை நம்பிச் சொல்லப்பட்ட சோதிடங்களில் தவறு ஏற்பட்டிருக்குமா? சூரிய உதயம் என்பது சோதிடத்தில் உயிர்நாடி. சூரியனின் மேல் விளிம்பு பாவிப்பதால் இலங்கையில் வித்தியாசம் அதிகளவு ஏற்படாவிடினும் கனடாவில் கணிசமான அளவு வித்தியாசம் ஏற்படும் என்பதை பஞ்சாங்க கணிதர் அறிந்திருப்பார்கள்.

திருத்திய பதிப்பென வெளிவந்ததிலும் பலப்பல தவறுகள் அவதானிக்கப் பட்டுள்ளன. "விமர்சனம் என்பது விமர்சிப்பவன் தன் திறமையை பறைசாற்ற அல்ல. விமர்சிக்கப் படுபவரின் முயற்சிகளை மழுங்கடிக்கவும் அல்ல. ஆக்கபூர்வமான மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் உருவாக்கவே. விமர்சனத்துக்கு மதிப்பழிக்கப்படாதபோது "காரசாரம்" என்ற எல்லைக்குள் புகுதல் தவிர்க்கப்பட வேண்டும். அது செவிடன் காதில் ஊதிய சங்கு ஆனாலும் 'நக்கல்' என்ற விரும்பத்தகாத எல்லைக்குள் புகுதல் தவிர்க்கப்பட வேண்டும்" இது தான் விமர்சனம் பற்றிய என் கருத்து. பஞ்சாங்க கணிதர் விமர்சனத்துக்கு மதிப்பளிப்பதால் திருத்திய பதிப்பில் உள்ள தவறுகளும் திருத்தும் முறைகளும் அவருக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பஞ்சாங்க கணக்கீட்டில் அமைய வேண்டிய சில Cross Check களும் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறான விமர்சனங்களுக்கு குருக்கள் அவர்களின் ஆசி எப்போதும் இருக்கும் என எதிர்பார்க்கிறேன். விமர்சனத்துக்கு மதிப்பளிப்பது எனச் சொல்வதே "வியாபார டெக்னிக்" ஆக இருப்பின் பணிந்த நிலை நிமிர்ந்து மீண்டும் எழும். சிரார்த்த திதி நிர்ணயிக்கும் போது பஞ்சாங்கத்தைப் பாவிக்காது விஷயம் தெரிந்த சோதிடரை நாடுதல் நன்று. சில கோவில்கள் கூட கோவில்களைப் பற்றிய விமர்சனத்தின் பின் சீரமைக்க வேண்டும் என்ற உந்துகைக்கு ஆளாகி இருப்பது விமர்சனத்துக்கு உள்ள பெறுமதியை எடுத்துக் காட்டுகிறது.


காற்றினிலே ஒரு கீதம்

**கீதவாணி**

வானொலி நிகழ்ச்சி

**அலைவரிசை 88.9 FM**

சனி காலை 10 மணி முதல் 11 மணி வரை

ஞாயிறு காலை 6 மணி முதல் 8 மணி வரை

தொடர்புகளுக்கு

**447 9031**



**இளவாலை ஹென்றிஸ்**
**பழைய மாணவர் சங்க**
**இரண்டாம் வருட பொதுக்கூட்டமும்**
**புதிய நிர்வாகிகள் தெரிவும்**

**மார்கழி 11 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு**

*1625 Dixie Rd (Dixie/bloor)*

**தொடர்புகளுக்கு**
**615 1281,**
**321 2304,**

## அ(று)சுவை

# யாழ்ப்பாணத்தின் Homeless

## அறுஞர் க(ல்)லாநிதி கியூநியஸ் ஜி

யாழ்ப்பாணத்தின ;Homeless என்றதும் கிண்டல் பண்ணுகின்றேன் என்று நினைக்க வேண்டாம். இங்கே 'வீடற்ருேர்' என்போர் ருேட்டில் வசிப்பவர்கள், வெறும் பைகளில் தங்கள் சொத்துக்களைக் கொண்டிருந்து வாழ்பவர்கள். இவர்களில் பலர் வருடக்கணக்காக குளிப்பதில்லை. ஒரு தடவை வங்கி ஒன்றுக்கு சென்றிருந்த போது இவர்களில் ஒருவர் வந்த போது மணம் தாங்க முடியவில்லை. அவர் சென்ற பின்னர் வாசனைத் திரவியம் விசிறிக் கொண்டார்கள். சமீபத்தில் ஒரு பதினுறு வயதுப் பெண் தான் வீதியில் வசிப்பது தனது விருப்பினுல் மட்டுமே என்றும் இதனுல் தன் மீது இரக்கமோ, கவலையோ கொள்ள வேண்டாம் என்றும் கூறியிருந்தார். இவர்கள் தங்குவதற்கு எல்லாம் மண்டபங்கள் உள்ளன. சிலர் அங்கு செல்ல விரும்புவதில்லை. இந்த குளிரில் இறந்து போனவர்களும் உண்டு. கனடாவின் கிராமப்புறங்களிலிருந்து நகரவாழ்வினுல் கவரப்பட்டு வந்து சேர்பவர்களில் பலர் வீதிக்குழந்தைகளாக வாழ்கிருர்கள்.

★ ★ ★

யாழ்ப்பாணம் எப்போதுமே காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணி நிலம் வேண்டும் என்று காணித் துண்டும் அதில் வீடும் கிணறும் அதைச் சுற்றி 'பத்துப் பன்னிரண்டு தென்னை மரம் பக்கத்திலே'.. எல்லாவற்றுக்கும் மேலாக சுற்றி வர அடைத்த வேலி. அதை காக்க அண்ணனும் தம்பியும் சண்டை, கத்தி வெட்டு.. வேலியில் உள்ள கிழுவையும் பக்கத்துக் காணியின் ஆளும் வெட்டப்படும். கோடேறி வழக்கு.. பின்னர் காணியை விற்று பிரக்கிராசிக்கு காசு கொடுப்பதில் முடியும்.

மறுபுறத்தில் காணியின் எல்லை அரங்கும். முடிக்குரிய காணிகள் தகுந்த இடங்களின் மூலமாக சிலரின் முதுசங்களாகும். ஒரு பரப்பு காணியில் வீடு இருந்தால் பிள்ளைகள் திருமணமாகும் போது சீதனமாக வீடு கேட்டால் அதே காணியிலேயே நாலு வீடு எழும்பும் நிலையும் நடக்கும். யாழ்ப்பாணப் பொருளாதார நிலையில் வீடு கட்டுதல் என்பது சிரமமான காரியம். அங்கு என்ன மோட்கேஜா இருக்கிறது? காசு கிடைத்தால் கட்டுவார்கள். இதனுல் தான் சீதனம் வாங்கும் போது வீடு நிர்ப்பந்திக்கப்படுகிறது. திருநெல்வேலியில் புலிகள் முதல் முதலாக குண்டுவைத்த இடத்திற்கு அருகாக ஒரு வீட்டைக் கண்டிருப்பீர்கள். வீட்டுக்கு நடுவாக மதில் ஒன்று சென்று பிரிப்பதை. சகோதர பாசமோ என்னவோ?

★ ★ ★

எனக்கு தெரிந்த உறவினர் ஒருவர் வயோதிபர். இவர் 'உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, தனக்கென்ருேர் தாவரமில்லை' என்று சொல்வார்கள் என்று இளைஞர்கள் கிண்டல் அடிப்பார்கள். அதென்ன தாவரம் என்ற எனது ஆராய்ச்சியின் முடிவில் அது தாவரமல்ல, தாழ்வாரம் என்று தெரிந்தது. தனக்கென்ருேர் தாழ்வாரத்தை ஆக்கிக் கொள்வதில் யாழ்ப்பாணம் தயங்கியதில்லை. ஓலைக்குடிசை என்ருலும் அது சொந்தமாக வைத்திருப்பதை யாழ்ப்பாணம் தனது அடிப்படை உரிமையாகக் கருதியது.

★ ★ ★

இதனுல் தான் யாழ்ப்பாணம் தேவரிக்குளத்திற்கு அருகில் கூட்டுறவு சங்கத்திற்கும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கும் இடையில் தண்ணீர் தாங்கியடியில் உள்ள கால்வாய் அருகில் அதன் ஓரங்களில் ஓலைகளால் ஆன வீடுக்ளில் மக்கள் வீடு கட்டி வாழ்ந்தார்கள். இவர்களின் நிலை துன்பகரமானது. அருகில் கழிவு நீர் ஓடும். இங்கே சமையல் நடக்கும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் எப்படி குறுகிய காலத் திட்டங்களில் முதலிடுகிறது என்பது சுவையான விடயம். யாழ்ப்பாணத்தின் செம்பாட்டு நிலங்களான புத்தூர் முதல் தாவடி வரை, கோப்பாய் முதல் சுன்ணுகம் ஈருக நன்ருகப் பயிர் செய்யக் கூடிய நிலங்கள் எல்லாம் முதலில் பயனுள்ள பயிர்களை பயிரிட்டன. பின்னர் முந்திரிகைப்பழங்கள் விலை அதிகமானதால் இந்த நல்ல நிலங்கள் எல்லாம் முந்திரித் தோட்டங்களாகின. இதனுல் உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் செய்வதற்கான நிலம் குறைந்தது. செத்தல் மிளகாய் 32 ருபாய் என்பதால் வெளிக்கிடடி விசுவமடுவுக்கு என்று போய் மிளகாய் உற்பத்தி செய்த யாழ்ப்பாணம் அல்லவா!

பின்னர் மத்திய கிழக்குப் பணம் வந்ததும் இந்த நல்ல நிலங்களில் எல்லாம் வீடுகள் எழும்பின. நிலம் அருகிச் சென்றது. யாழ்ப்பாணத்து செம்மறி மனேபாவத்தில் நான் அவதானித்த ஒன்று.. யாரோ ஒரு புண்ணியவான் ஒரு லைட்டான சொக்கலேட் கலரில் அதன் செறிவு குறைந்து செல்லும்



கோடுகளாக வீட்டுக்கு பெயிண்ட் அடித்து விட்டார். அதன் பின்னர் ஒரு தொகை செம்மறிகள் அதே வழியைப் பின்பற்றின.

★ ★ ★

தனக்கென்றோர் தாழ்வாரம் கொண்ட யாழ்ப்பாணத்தில் homeless என்று யாரிருக்கிறார்கள்? யாழ். பஸ் நிலையத்தில் மலையகத்திலிருந்து வந்து பிச்சை எடுத்து குளத்தங்கரைகளில் சமைத்து உண்கின்றவர்களைத் தவிர வேறு ஹோம்லெஸ் அப்போது இருந்ததில்லை. முற்றவெளியில் உள்ள குளம், லிடோ தியேட்டருக்கு அருகில் உள்ள குளம் என்பன இவர்களின் தங்குமிடங்கள். பதினாலு, பதினைந்து வயதிலேயே பிள்ளையை சுமந்து கொண்டிருக்கின்ற பெண் குழந்தைகள் எல்லாம் அப்போது இருந்தார்கள்.

மற்ற யாழ்ப்பாணத்தார் எல்லோருக்குமே வீடுகள் இருந்தன. யாழ்ப்பாணத்தில் வீட்டை விட்டு ஓடிவந்து வீதிகளில் படுக்கின்ற சிறுவர்கள் இருந்ததில்லை. மிஞ்சிப் போனால் கோயில்களில் மடங்கள் இருக்கின்றன. அங்கு திருத்தொண்டு செய்து காலத்தைப் போக்கலாம். ★

★ ★

இந்த திமிர்த்தனங்களுக்கான கடவுள் தண்டனையோ என்னவோ? இன்றைக்கு வேலிகள் வீட்டுக்காரர்களாலேயே பிரிக்கப்பட்டிருக்கின்றன. இராணுவ, குண்டுத் தாக்குதல்களின் போது தப்பியோடுவதற்காக.. சொந்த வீடு என்று கூறிக் கொண்டவர்கள் இன்று அகதி முகாம்களில் வீடுகள் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் கட்டிக்காத்த பல வீடுகள் இன்று தரை மட்டமாகியிருக்கின்றன. இன்று முழு யாழ்ப்பாணமே கிட்டத்தட்ட Homeless. வீடு இருந்தாலும் நிம்மதியாக உறங்க முடியாது. 'உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, தனக்கென்றோர் தாவரமில்லை'

★ ★ ★

அங்கே சிறுவயதில் நான் கண்ட சில ஹோம்லெஸ்கள் உள்ளனர். இவர்களில் சிலர் சித்த சுவாதீனமற்றவர்கள். இவர்களில் பலர் பின்னாளில் இயக்கங்களால் உளவாளிகள் என்று பட்டம் சூட்டப்பட்டு கம்பத்தில் கட்டப்பட்டவர்கள். சுட்டவர்களில் தியாகி ஒருவரும் அடக்கம். பைத்தியக்காரர்கள் இறந்தவர்களா? சுட்டவர்களா? என்பது வேறு விடயம். ஹிட்லர் காலத்தில் சித்தசுவாதீனமற்றோர், மனவளர்ச்சி குறைந்தோர் என்போர் கொல்லப்பட்டது போன்ற நிலையே இது.

★ ★ ★

இவர்களில் ஒருவர் முனியப்பர் கோயிலுக்கு அருகில் நின்று இரசாயனவியல் படிப்பிப்பார். இவர் ஏதோ விரிவுரையாளராக இருந்ததாக சொன்னார்கள். உண்மையாகவே மாணவர்களுக்கு படிப்பிப்பது மாதிரியே பாவனை செய்தபடி அருகில் உள்ள புல்லுக்குளத்தைப் பார்த்தபடி 'விரிவுரை' நடக்கும். நன்றாகவே உடுத்தியிருப்பார். எனவே, இவருக்கு ஹோம் இருந்திருக்க வேண்டும்.

இன்னொருவர் மானிப்பாய் பக்கங்களில் காண்பவர். அதிலும் மானிப்பாய் அந்தோனியார் கோவில் முன்னாலுள்ள நூலகத்தில் இவரைக் கண்டிருக்கிறேன். சீக்கியர்கள் போல தலைப்பாகையும் தாடியும் வளர்த்து இவர் திரிவார். ஆனால் இவர் ஒரு 'தொலைதொடர்பு' சம்பந்தப்பட்டவர். எப்போதுமே ஒரு டெலிபோனும் கையுமாகத் தான் திரிவார். எங்கேயாவது 'கனக்ஷனைக்' கொடுத்து விட்டு செக் பண்ணிக் கொண்டிருப்பார்.

★ ★ ★

நமக்கு எல்லாம் தெரிந்த வைரமாளிகை அடுத்தவர். நேரு மாதிரி கோட் போட்டு, அதில் வைரமாளிகை விளம்பரத்தை சுமந்து கொண்டு சுவீப் டிக்கட், பேப்பர் விற்றுக் கொண்டு திரிபவர். இவர் அசப்பில் கனடாவின் மாஜிப் பிரதமர் ஜோன் ரேணர் போன்ற தோற்றம் கொண்டவர். இவர் எங்கோ சுன்னாகப் பக்கத்தில் வாழ்ந்ததாக காதில் விழுந்தது. வெகுசுவாரஸ்யமான கரெக்டர் இவர். ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிக்கலாம். கியூறியஸின் அறுவை மாதிரி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் இவரது வார்த்தைகள் விழும். ஆச்சி அப்புவின் கதை முதல் மலேசியா சிங்கப்பூர் கதை வரை வரும். இவர் ஏதோ கொலையில் சம்பந்தப்பட்டதாகவும் இதிலிருந்து தப்ப சித்தப்பிரமை பிடித்தவர் போல நடித்ததாகவும் ஐதீகங்கள் உண்டு. உண்மை பொய் தெரியாது. யாழ்ப்பாண பஸ் நிலையத்தின் பிரிக்க முடியாத ஒரு icon ஆகி விட்டிருந்தவர் இவர். பின்னாளில் இவரைக் காணவில்லை.

பின்னர் இவரைப் போல ஒருவர் ஐஸ் கிறீம் விற்றுத் திரிந்தவர், பின்னர் பீடா விற்றுக் கொண்டிருந்தார். இவரும் வைரமாளிகையின் ஒரு நடமாடும் billboard. எம்.ஜி.ஆர் மாதிரியே குல்லாய், கண்ணாடி அணிந்து ஆடுவார். இவர் ஹோம்லெஸ் அல்ல.

★ ★ ★

இன்னொரு பெண் நாய்க்குட்டி விசரி எனப்படுபவர். இவர் உடுவில் பக்கங்களில் நடமாடக் கண்டிருக்கிறேன். இவர் எப்போதும் நாயுடன் தான் திரிவார். மயிர் உதிர்ந்திருக்கும். இவர் பணக்காரக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர் என்றும் இவருக்கு யாரையோ திருமணம் பேசிய போது 'உவனைச் செய்யிற நேரம் நாய் ஒன்றை கலியாணம் செய்யலாம்' என்று சொன்னதால் கோபமடைந்த 'உவன்' நாயுடன் அலையும்படி சூனியம் செய்ததாகவும் இளம் வயது முதலே இந்தப் பெண் திரிவதாகவும் ஆச்சி சொன்னார். இந்தப் பெண்ணுக்கு சொந்தமாக வீடு இருப்பதாகவும் சொல்லப்பட்டது.

சித்தப்பிரமையுடன் அலைந்த இப்பெண்ணை 'இளந்தாரிப் பெடியள் கொஞ்சப் பேர் பழுதாக்கியதாகவும்' பேரனார் சொன்னார். அந்த 'பழுதாக்கல்' என்பதன் பதம் புரிந்து கொள்ளப்பட எனக்கு நிறையக் காலம் எடுத்தது.

இதைப் போலவே இன்னொரு வயதான பெண்... குறுக்குக்கட்டுடன் வீதியெங்கும் பேசிக் கொண்டு திரியும். நீண்ட தூரங்கள் களைக்காமல் நடப்பார். இவரை யாழ்ப்பாணம் முதல்

கொண்டு நான் சென்ற இடங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்.

★ ★ ★

இன்னொருவரை நான் பாடசாலைக்கு செல்கின்ற நாட்களில் கண்டிருக்கிறேன். இவர் ஒரு வெள்ளை சரத்தை மடித்துக் கட்டி ஒரு துவாயைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்து திரிவார். யாழ்ப்பாணம் பூராவும் இவரைக் கண்டிருக்கிறேன். இவர் யார் என்பது எனக்குத் தெரியாது. அவர் யாராயிருக்கும் என்று நான் ஊகித்துக் கொண்டது ஒரு சுவாரஸ்யமான கதை.

எங்களுக்கு ஆங்கிலம் படிப்பித்த ஆசிரியர் ஒரு கதை சொன்னார்.. யேசுநாதரை சிலுவையில் பிலாத்துவிடம் கொண்டு சென்றனராம் யூதர்கள். அப்போது பிலாத்து கேட்டானாம்.. இவனுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று. இதற்கு ஒருவன் சொன்னானாம்.. இவனைச் சிலுவையில் அறையும் என்று. அப்போது இயேசு அவனை ஒரு பார்வை பார்த்தாராம். யேசுவை சிலுவையில் அறையச் செய்ததற்கு தண்டனையாக உலகம் முடியும் வரை அவன் மரணம் அடையாமல் தன் குற்றத்திற்காக வருந்த வேண்டும் என்று சாபம் கிடைத்தாகவும் அவன் உலகெங்கும் அலைந்து திரிகிறான் என்றும் ஆசிரியர் சொன்னார். அவனுக்கு Wandering jew என்று பெயராம்.

நான் நினைத்தேன்.. அந்த அலைந்து திரியும் யூதன் இவர் தான் என்பது எனது முடிவு. ஏனென்றால் எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் இவர் ஒரே தோற்றத்திலேயே இருந்தார்.

பின்னாளில் தான் தெரிய வந்தது. இவர் எனக்கு நெருக்கமான உறவினர். இவரும் ஏதோ கொலை விடயத்தில் சம்பந்தப்பட்டவர் என்று நினைக்கிறேன். பின்னர் இவர் தங்கியிருந்த வீட்டில் நானும் ஒரு தடவை தங்கிய போது பார்த்தேன்.. இரவு வெறியில் புலம்பிக் கொண்டிருப்பார். அப்போது தன் மனைவிமாரைப் பேசிக் கொண்டிருப்பார். தனக்கு 'கற்பி' என்ற பெயரில் இரண்டு மனைவிகள் இருந்ததாகவும் சொன்னார். இதன் பின்னர் 'குஞ்சி' என்று அழைத்தபடி நான் இவருடன் நெருக்கமாகி விட்டேன்.

★ ★ ★

இன்னொருவர் ரயில் இஞ்சின் ராசையா அண்ணை. இவர் ரயில்வேயில் பாதுகாவலராக பணியாற்றியவர் என்று நினைக்கிறேன். ஆனால் எப்போதுமே தனது உடைமைகள் சகிதம் வீதியில் நிற்பார். கிளினிக் வேலைக்கு வெளிக்கிட்டு போவது போலத் தான் நிற்பார்.

பையனாய் இருந்த போது ஒரு தடவை இவர் தனது 'சாகசம்' பற்றி விபரித்தது இப்போதும் என் கண்முன் நிற்கிறது. இவர் ரயில் இஞ்சின் றைவராக இருந்த போது ஒரு நாள் தண்டவாளத்தில் யானை ஒன்று படுத்திருந்ததாம். லைட் வெளிச்சத்தில் தெரிந்ததும் ரயிலை நிற்பாட்டி றிவேர்ஸ் எடுத்துச் சென்று பெட்டிகளைக் கழட்டிப் போட்டு வேகமாக வந்து யானையை மோதியதாகவும் யானையின் நெய் எல்லா இடமும் சிதறியதாகவும் சொன்னார். ஏன் பெட்டியைக் கழட்டினீங்கள் என்ற என் கேள்விக்கு 'இல்லாட்டி றெயின் பிரண்டு போடும்' என்றார். அது என்ன நெய் யானைக்கு இருக்கிறது என்பது என் ஆராய்ச்சி.

பிற்காலத்தில் நான் கேள்விப்பட்ட ஜோக் தான் இவரது திறமைக்கு சான்று. யாரோ இறந்து போயிருக்கிறார். இவரை எரிப்பதற்காக மயானத்திற்கு செல்லும் ஊர்வலத்தில் ராசையா அண்ணையும் கலந்து கொண்டார். கடைசியாக சிதையின் மீது உடலை வைத்து நெஞ்சாங்கட்டை வைக்கும் போது பெட்டியைத் திறப்பார்கள் அல்லவா. அப்போது முன்னே வந்த ராசையா அண்ணை, பூதவுடலின் கையைப் பிடித்து நாடி பார்த்து விட்டுச் சொன்னாராம் 'ஆள் முடிஞ்சுது'.


**This newspaper is published by Georgicka communications.**
**A member of Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650.3216 @Compuserve.com**

***இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.***
***ஆசிரியர்; ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்***


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS

516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

## 1472 Queen St West

**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets


✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

SIVA'S TRADING CO LTD
321-2739

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

**சிவாஸ் ரேடிங் கோ**

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

**P.S.S.T**

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**Tel:609-0141**

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினுல்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்